# ஸ்ரீ தமிழ்

உண்மை நின்றிட வேண்டும்

**ஆசிரியர் – பதிப்பாளர் :**
இல. பத்மப்ரியா

**பொறுப்பாசிரியர் :**
வெ. ஜெயராமன்

**துணை ஆசிரியர்கள் :**
நா. பாஸ்கரன்
சி. பாண்டிக்குமார்

**வடிவமைப்பு :**
ஸ்ரீஸ்வயம்

**சட்ட ஆலோசகர்கள் :**
இல. ஸ்ரீராம்
த. பாஸ்கர்

**அலுவலக முகவரி:**
ஸ்ரீ தமிழ்
77/6, 10வது அவென்யூ,
அசோக்நகர்,
சென்னை –600 083

70102 81932

http://www.shreetv.tv
facebook.com/shreetv
x.com/Shreetv media
youtube com/ShreeTV
shreemedia.news@gmail.com



Press and Registration of Books Act-ன்படி எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டவை.

கதைகளில் வரும் பெயர்களும் நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத்தன்மைக்கு ஸ்ரீ தமிழ் நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகளின் கருத்துகள் படைப்பாளர்களின் சொந்தக் கருத்துகளே!



**தனி பிரதி: ரூ 30/–**
**ஆண்டு சந்தா: ரூ 600/–**


# 2026ல் பிழைகள் திருத்தப்படுமா?

2026 ஆம் ஆண்டு புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் 2025 ஆம் ஆண்டின் கண்ணாடி எனலாம். புத்தாண்டை வரவேற்கும் முதல் விமர்சையான நிகழ்வு, சிட்னி கொண்டாட்டம். முதல்முறையாக இந்தக் கொண்டாட்டம், ஆயுதம் ஏந்திய பலத்த பாதுகாப்பிற்கிடையே நடக்கவுள்ளது. சிட்னி அருகிலுள்ள போண்டி பீச் புத்தாண்டுக் கொண்டாட்டம் ரத்து, பாரிஸ் கொண்டாட்டம் ரத்து என்று பாது காப்பைக் காரணம் காட்டி iconic celebrations ரத்து செய்யப்படுகின்றன அல்லது பலத்த பாதுகாப்பிற்கான தேவை ஏற்பட்டுள்ளது. உலகின் பெரும்பான்மை சமூகங்களால் பாரம்பரிய விழாக்களை, அச்சமின்றி இயல்பாகக் கொண்டாட முடியாத சூழல் ஏற்ப்பட்டுள்ளது.

மதச் சுதந்திரம், மதச்சார்பின்மை, கருத்துச் சுதந்திரம், தனிமனிதச் சுதந்திரம் என்ற மாய்மாலங்களை தாரக மந்திரங்களாகவும், அரசின் கொள்கைகளாகவும் கொண்டு செயல்படுகிறோம் என்று எக்காளமிட்ட நாடுகளும், சமூகங்களும், அரசியல் கட்சிகளும் இன்று இஸ்லாமிய அடிப்படைவாதத்தை சமாளிக்க முடியாமல் விழுகின்றன. இந்த சித்தாந்தங்களை நியாயப்படுத்த, தெரிந்தே தவறுகளைத் தொடர்ந்து செய்தும் வருகின்றனர். இந்தப் போக்கைப் புரிந்து கொண்ட அடிப்படைவாதிகள், நிலமையை சாதகமாகப் பயன்படுத்தி உலகத்தை இஸ்லாமியமயமாக்கும் நோக்கத்தை தடையின்றி நிறைவேற்றி வருகின்றனர்.

தெற்கு இஸ்ரேல் மற்றும் ஆஸ்திரேலிய போண்டி கடற்கரையில் யூத விழாக்களில் இஸ்லாமிய பயங்கரவாதிகள் கொடூரத் தாக்குதல் நடத்தினர். வங்கதேசத்தில் ஹிந்துக்கள், கிறிஸ்தவர்கள், பௌத்தர்கள் மீது அரசின் உதவியுடன் இஸ்லாமிய பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்துகிறார்கள். இதற்கு பதிலடி கொடுத்தாலோ, கண்டித்துக் குரல் கொடுத்தாலோ இஸ்லாமோபோபியா (Islamophobia) என்று சொல்லி வன்முறையாளர்களை பாதிக்கப்பட்டவராகச் சித்தரிக்கின்றனர். பயங்கரவாதத்திற்கு எதிராகப் போராட வேண்டும், அனைத்துத் தரப்பினரின் உரிமைகளும், சுதந்திரமும், பாரம்பரியமும் பாதுகாக்கப்பட வேண்டும் என கொள்கை வகுத்த ஐ.நா.வும், இஸ்லாமிய victimization பரப்புரைக்கு உதவுகிறது. தொன்மையான பண்பாடுகளை அழித்து மேற்கத்திய சித்தாந்தத்தைப் புகுத்த ஜனநாயகத்தின் அளவு கோலாக ஐ.நாவால் நிலை நிறுத்தப்பட்ட liberal thinking *(ஊதாரவாத/ சுதந்திரச் சிந்தனை)*, அதை அவர்கள் லாபத்திற்காக உருவாக்கிய ஐரோப்பிய மற்றும் அதன் ஆதிக்கம் நிறைந்த நாடுகளின் அடித்தளத்தை ஆட்டங்காணச் செய்து விட்டது. இந்தச் சிந்தனைகளின் அடிப்படையில் உருவான தடையற்ற குடியேற்ற கொள்கை (free migration policy), பயங்கரவாத ஆதரவு சூழலமைப்பு (terror ecosystem) ஏற்பட காரணமாகி விட்டது. இந்தத் தொடர் தவறுகளை 2026ல் உலகம் உணர்ந்து திருத்திக் கொண்டால், அடுத்த புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் அமோகமாக இருக்கும்! நாமும் பிரார்த்திப்போம்!

# பூரணத்துவம் அடைந்த பூர்ணசந்திரன்

- இராஜேஷ்

ஸ்ரீரங்கம் ரங்கநாதரை பாதுகாக்க உயிர் தியாகம் செய்த வெள்ளையம்மாள், காளையார் கோவில் காக்க உயிர் தியாகம் செய்த மருதபாண்டியர், மதுரை மீனாட்சி கோவில் காக்க உயிர் தியாகம் செய்த சிவாச்சாரியார்கள், போன்ற எண்ணற்ற தியாகங்களை ஹிந்து கோவில்களைக் காக்க நம் முன்னோர்கள் செய்துள்ளனர் !

இந்த மரபின் மீட்சியே, திரு.பூர்ண சந்திரன் அவர்களின் தியாகம்!

திருப்பரங்குன்றம் கோவிலை அழிக்க 1714ம் ஆண்டு ஆங்கிலேயர்கள் முற்பட்டனர். திருப்பரங்குன்றத்தில் இருந்த பழனியாண்டவர் கோவில், சொக்கநாதர் கோவில் ஆகியவற்றை இடித்து கோவிலுக்குள் நுழைய முற்பட்ட போது குட்டி பட்டர் கோபுரத்திலிருந்து குதித்து தன் உயிரை மாய்த்துக் கொண்டு பேயுருவம் பெற்று ஆக்ரமிப்பாளர்களை விரட்டியதாக கல்வெட்டு உள்ளது!



இதே திருப்பரங்குன்றம் கோவில் நிர்வாக சீர்கேட்டைக் கண்டித்து எல்லப்ப முதலி என்பவர் உயிர்தியாகம் செய்தார். இந்த இரண்டு உயிர் தியாகிகளின் குடும்பங்களுக்கு ஆலய நிர்வாகம் சார்பில் அவர்கள் தலைமுறைகள் இவ்வுலகம் இருக்கும் காலம் வரை அனுபவிக்க மானியம் எழுதி கொடுக்கப்பட்டுள்ளது.

இன்று திருப்பரங்குன்றம் மலை மீது தீபம் ஏற்றம் வேண்டும் என்பதற்காக உயிர்தியாகம் செய்துள்ளார் திரு.பூர்ணசந்திரன் அவர்கள். இந்த தியாகத்தை கொச்சைப்படுத்துபவர்கள் கையில் ஆலய நிர்வாகம் உள்ளது! திருப்பரங்குன்றம் காக்க உயிர்தியாகம் செய்யும் மரபை பின்பற்றி பூரண சந்திரன் இறைநிலை அடைந்தார்!

அவர் தியாகத்திற்கு மதிப்பளித்து ஏனைய தியாகங்களுக்கு தலைவணங்கி ஹிந்து சமுதாயம் செயல்பட்டது போல் நாம் அவரது குடும்பத்திற்கு ஆதரவாக இருக்க வேண்டும்!

திருப்பரங்குன்றம் மலை உச்சியில் கார்த்திகை தீபம் ஏற்றுவதற்காக உயிர்தியாகம் செய்த திரு பூர்ணசந்திரன் அவர்களின் நோக்கத்தை நிறைவேற்றுவதே அவருக்கு நாம் செலுத்தும் அஞ்சலியாகும்!

18 டிசம்பர் 2025 அன்று திருப்பரங்குன்றம் மலையுச்சியில் தீபம் ஏற்ற வேண்டும் என்ற கோரிக்கையை முன்னிறுத்தி தன் மீது தீயிட்டுக் கொண்டு உயிர்தியாகம் செய்த திரு பூர்ண சந்திரன் அவர்களின் தியாகத்தை இழிவுபடுத்த வேண்டுமென்று ஆளுங்கட்சியின் அடிவருடிகள் கடன் தொல்லை காரணமாக அவர் இந்த செயலை செய்தார் என்று அவதூறு பரப்பினர். கள்ளசாராயம் குடித்து இறந்தவருக்கு 10 லட்சம், கள்ளச் சாராயம் விற்றவனுக்கு 50ஆயிரம், அரசியல் மாநாட்டு கூட்ட நெரிசலில் இறந்தவர்களுக்கு 10 லட்சம்! என்று நிவாரணம் வழங்கிய அரசு, தமிழ் கடவுளான முருகனுக்காக தியாகம் செய்தவரின் குடும்பத்திற்கு என்ன நிவாரணம் வழங்கியது?

இந்த தியாக சம்பவம் ஹிந்து உணர்வை ஏற்படுத்தி விடக்கூடாது என்பதற்காகவும், ஹிந்துக்களை சிறுமைப்படுத்தவும் கார்த்திகை தீபத்தூண் அருகில் கந்தூரி திருவிழா நடத்த அரசு அனுமதித்தது. எந்த முருகன் கோவிலின் கார்த்திகை தீபத்தைக் காண பூர்ண சந்திரன் ஏங்கினாரோ அந்த கோவிலின் ஸ்தல விருட்சமான கல்லத்தி மரத்தில் முஸ்லீம்களின் பிறை கொடியை ஏற்ற அரசு அனுமதித்தது.

விடுதலைக்காக போரிட்டு மடிந்த வீரர்களை முகமதியர்களும், ஆங்கிலேயர்களும் எப்படியெல்லாம் அவமதித்தார்களோ அதே செயலை இந்த திராவிட மாடல் அரசு செய்துள்ளது!

**தியாகங்கள் வீண் போனதில்லை என்பது வரலாறு**!

முகமதிய, ஆங்கிலேய ஆக்ரமிப்பாளர்களுக்கு ஏற்பட்ட முடிவு திராவிடத்திற்கும் ஏற்படும் என்பதே நியதி!

# சித்தர் கோவிலா ? சிக்கந்தர் தர்காவா ?

பால கௌதமன்

கார்த்திகை தீப நாளான டிசம்பர் 3, 2025, அன்று திருப்பரங்குன்றம் மலை உச்சியிலுள்ள தீபத்தூணில் தீபம் ஏற்ற வேண்டும் என்று நீதியரசர் ஜி.ஆர். ஸ்வாமிநாதன் அவர்கள் உத்தரவிட்டார். அந்த உத்தரவை நடைமுறைப்படுத்த முடியாது என்றது காவல் துறை. அதற்கு சொல்லப்பட்ட காரணங்கள், 1.மாலை 6 மணிக்கு மேல் மலையேற அனுமதியில்லை, 2.மதக் கலவரம் ஏற்படும், 3. குறுகிய பாதையானதால் பாதுகாப்பில்லை.

திருப்பரங்குன்றம் மலைமீதுள்ள சிக்கந்தர் தர்கா சந்தனக்கூடு திருவிழாவிற்கு முஸ்லீம்கள் அனுமதி கோரினர். ஹிந்து அமைப்பினரை அழைக்காமல் டிசம்பர் 18 அன்று சமாதானக் கூட்டம் நடத்தியது அரசு. முஸ்லீம்களுக்கு அனுமதி வழங்கியது அரசு. கார்த்திகை தீபம் ஏற்ற வேண்டும் என்று திருப்பரங்குன்றம் மற்றும் மதுரை மாநகர மக்கள் மாவட்ட ஆட்சியரிடம் தொடர்ந்து மனு அளித்து வருகின்றனர். மலை மீதுள்ள காசி விஸ்வநாதர் ஆலயத்திற்குச் சென்று விளக்கேற்ற அனுமதிப்பதில்லை இந்த அரசு.

இந்நிலையில், டிசம்பர் 21, தர்கா கந்தூரி விழாவிற்கு 4 முஸ்லீம்கள் மலை மீது சென்று கொடி ஏற்ற அரசு அனுமதித்தது. நீதிமன்ற உத்தரவு இருந்தும் ஹிந்துக்களை அனுமதிக்காத அரசு, ஹிந்துக்களின் கருத்தைக் கேட்காமல் அமைதிக் கூட்டம் என்ற பெயரில் ஒரு கூட்டம் நடத்தி முஸ்லீம்களை தீபத்தூண் அருகே கந்தூரி விழா நடத்த எப்படி அனுமதிக்கலாம் ? என்று அறச்சீற்றம் கொண்டு மலைப்பாதையில் மறியலில் ஈடுபட்டனர். மறியலில் ஈடுபட்ட ஹிந்துப் பெண்களை கைது செய்தது காவல் துறை.

4 முஸ்லீம்களுக்கு மட்டுமே அனுமதி என்று சொன்ன காவல் துறை, ஏராளமான முஸ்லீம்களை மலையேற அனுமதித்தது. 4 நபர்களுக்குத்தானே அனுமதி என்று ஹிந்துக்கள் கேள்வி எழுப்பியதும், கூட கொஞ்சம் பேர் போனால் என்ன ? என்று அடாவடியாக எதிர் கேள்வி கேட்டார் மதுரை தெற்கு துணை ஆணையர் இனிகோ திவ்யன். ஹிந்துக்கள் தீபம் ஏற்ற நீதிமன்ற உத்தரவை பெற்றிருந்தும் நிறைவேற்ற முடியாது என்று திமிராகப் பேசித் தடுத்த இதே இனிகோ திவ்யன், அவர்கள் அரசு போட்ட கட்டுப்பாட்டைக் கூட முஸ்லீம்கள் பின்பற்ற வேண்டாம் என்று தாராளமாக சட்ட விரோத நடவடிக்கையில் ஈடுபட முஸ்லீம்களின் அரணாக செயல்பட்டார்.

நீதிமன்ற உத்தரவு இருந்தும் கார்த்திகை தீபம் ஏற்ற முடியாது என்று தடுக்க மாலை 6 மணிக்கு மேல் மலையேற அனுமதியில்லை என்ற காவல்துறை, முஸ்லீம்களை இரவு 8:30 மணிக்கு மலையேற அனுமதித்தது ஏன் ? எந்த எதிர்ப்பும் இல்லாமல் இருந்தபோது நீதிமன்ற உத்தரவிற்குப்பின் 144 தடை உத்தரவைப் பிறப்பித்த காவல் துறை, தொடர் போராட்டம் நடைபெறும்போது கட்டுப்பாடுகளை விதிக்காமல் முஸ்லீம்களை அனுமதித்தது ஏன்? மலையேறி வழிபட ஹிந்துக்களுக்கு அனுமதியில்லையா என்று சொல்லி ஹிந்துக்கள், மலை மீதுள்ள விஸ்வநாதர் கோயிலுக்கு வழிபாடு நடத்த முயன்றனர். இவர்களுக்கு ஆதரவாக பாரதிய ஜனதா கட்சித் தலைவர் திரு. ஹெச்.இராஜா அவர்கள் போராடினார். இந்த அநீதியை எதிர்த்து ஹிந்து முன்னணி போராட்டம் அறிவித்தவுடன் காவல் துறை மலையேற விதித்த தடையை நீக்கியது.

கார்த்திகை தீபம் ஏற்றும் காலத்தில் மலையேறத் தடை விதித்த அரசு, தர்கா கந்தூரி விழா நேரத்தில் மலையேறத் தடை நீக்கியது ஏன் ? எனவே

**4 நபர்களுக்குத்தானே அனுமதி என்று ஹிந்துக்கள் கேள்வி எழுப்பியதும், கூட கொஞ்சம் பேர் போனால் என்ன ? என்று அடாவடியாக எதிர் கேள்வி கேட்டார் மதுரை தெற்கு துணை ஆணையர் இனிகோ திவ்யன்.**

ஜனவரி 6 க்குப் பின் மலையேற அனுமதி கொடுக்க வேண்டும் என்று ஹிந்துக்கள் கோரினர். இதை ஏற்காமல் மலைப் பாதையை முஸ்லீம் விழாவிற்காகத் திறந்துவிட்டது அரசு. இந்த ஓரவஞ்சனையை அரசு செய்தவுடன், மலை மீதுள்ள ஸ்தல விருட்சமான கல்லத்தி மரத்தில் முஸ்லீம்கள் பிறைக்கொடி ஏற்றினர். டிசம்பர் 25 அன்று, அசைவ உணவு தடை செய்யப்பட்ட திருப்பரங்குன்றம் மலையில், அசைவ பிரியாணியுடன் மலையேற முற்பட்ட கும்பலை போலீசார் தடுத்தனர். கந்தூரித் திருவிழா என்ற பெயரில் தல விருட்சத்தில் பிறைக் கொடி, மலை மீது அசைவ உணவு என்று இதன் புனிதத் தன்மையைக் கெடுத்து, முஸ்லீம்களின் ஆதிக்கத்தை நிலை நாட்டும் நடவடிக்கைகள் தொடங்கிவிட்டன.

நீதிமன்றத்தில் கார்த்திகை தீபம் ஏற்ற எதிர்ப்புத் தெரிவித்து வாதம் செய்த கேடுகெட்ட அறநிலையத்துறை, இப்போது மௌனம் காப்பது ஏன்? ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில், 1920லும், 1930லும், மலையே ஹிந்துக்களுக்குச் சொந்தம் என்று வாதிட்ட கோயில் நிர்வாகம், இன்று திராவிட ஆட்சியில், கோயில் சொத்தே கோயிலுக்கு இல்லை என்று வாதிடுவதுடன், முஸ்லீம்களின் ஆக்கிரமிப்பிற்கும் துணை போகிறது.

1960 ஆம் ஆண்டு, திருப்பரங்குன்றம் தலவரலாறு என்ற நூலை புலவர்மணி வித்துவான் திரு.தி.கி.சுந்தர மூர்த்தி அவர்கள் வெளியிட்டார். இந்த நூலுக்கு சென்னை மாநில அறநிலையத்துறை ஆணையர் திரு.அ.உத்தண்டராம பிள்ளை அவர்கள் அணிந்துரை வழங்கியுள்ளார். இந்த நூலை திருக்கோயில் நிர்வாகம் வெளியிட்டுள்ளது. இந்த நூலில், முகமதியர் ஆட்சிகாலத்தில், சித்தர் அடக்கமான இடத்தைக் கைக்கொண்டு சிக்கந்தர் பள்ளிவாசல் என்று பெயர் சூட்டியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தச் செய்தியை உறுதிப்படுத்தும் விதமாக, ஆங்கிலேயரின் நிர்வாகக் கையேடான மெக்லீன்ஸ் மேனுவல் ( Maclean’s Manual of the Administration of the Madras Presidency), “otherwise Secunder mullay by corruption by Mahomedan fackers”. அதாவது, முகமதிய பக்கிரிகளின் மோசடிச் செயலால் சிக்கந்தர் மலை என திருப்பரங்குன்றம் அழைக்கப்படுவதாக குறிப்பிடுகிறது. மேலும் நவராத்திரிக்கு முன், மூலவர் கையில் இருக்கும் வேலை, மலை உச்சியில் வைத்து பூஜை செய்யும் மரபும் இருந்ததாக 1960 ஆம் ஆண்டு, கோயில் நிர்வாகத்தால் வெளியிடப்பட்ட தல புராணம் குறிப்பிடுகிறது.



**1960 ஆம் ஆண்டு, திருப்பரங்குன்றம் தலவரலாறு என்ற நூலை புலவர்மணி வித்துவான் திரு.தி.கி.சுந்தர மூர்த்தி அவர்கள் வெளியிட்டார். இந்த நூலில், முகமதியர் ஆட்சிகாலத்தில், சித்தர் அடக்கமான இடத்தைக் கைக்கொண்டு சிக்கந்தர் பள்ளிவாசல் என்று பெயர் சூட்டியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.**

தீபம் ஏற்ற நீதிமன்றம் உத்தரவிட்டவுடன் தீபத் தூணை சர்வே கல், சமணர் தூண் என்று சொல்லி, தொடர்பே இல்லாத வக்ஃப் வாரியத்தை வழக்காடச் செய்த அரசு, சிக்கந்தர் தர்காவின் உண்மைத் தன்மையை ஆய்வு செய்யவில்லையே! ஊடகங்களிலும், சமூக ஊடகங்களிலும், வரலாற்று ஆய்வாளர்களாகவும், தொல்லியல் ஆய்வாளர்களாகவும் மாறியவர்கள், சிக்கந்தர் தர்கா ஆய்வு நடத்துவார்களா? ஹிந்துக்கள் கார்த்திகை தீபம் ஏற்றினால் கலவரம் வரும் என்று தடை விதிப்பவர்கள், முஸ்லீம்கள் கந்தூரி நடத்தினால் கலவரம் ஏற்படாது என்று அனுமதி வழங்குவது, முஸ்லீம்கள் கலவரக்காரர்கள் என்று உறுதிப்படுத்துவது போல் உள்ளது. ஹிந்துக்கள் ஊர்வலம் நடத்த முஸ்லீம்கள் ஒத்துழைப்பைப் பெற அமைதிப் பேச்சுவார்த்தை நடத்துகிறார்கள் ஆனால் முஸ்லீம்கள் விழா நடத்த அமைதிக் கூட்டங்கள் நடத்தப்படுவதில்லை! இது தமிழகத்தில் வாடிக்கையாகிவிட்டது. இது தான் நிலவரம் என்றால் முஸ்லீம்களைக் குற்றப்பரம்பரையாக அறிவிக்க அரசு தயாரா?

நீதிமன்ற உத்தரவு இருந்தும் ஹிந்துக்களுக்கு தீபம் ஏற்ற அனுமதியில்லை ஆனால் முஸ்லீம்கள் சுதந்திரமாகக் கந்தூரி நடத்தலாம்!

தீபத்தூணை விட்டுக் கொடுக்கும் அறநிலையத்துறை , தல விருக்ஷத்தில் பிறைக் கொடி ஏற்றுவதை அனுமதிக்கிறது!

மாலை 6 மணிக்கு மேல் மலையேற ஹிந்துக்களுக்குத் தடை ! முஸ்லீம்களுக்கு அனுமதி!

முருகன் மலையை முஸ்லீம் மலையாக்கும் தமிழக அரசின் சதியைப் புரிந்துகொள்வோம்! குன்றம் காக்க ஒன்றிணைவோம் !

# திருச்சபை முன்னேற்ற கழகம் உதயம்

- வீரவேலுநாச்சியார்

நான் ஒரு கிறிஸ்தவன்!
நான் கிறிஸ்தவன் என்று சொல்லி கொள்வதில் பெருமிதம் கொள்கிறேன்!
நானும் ஒரு கிறிஸ்தவன் தான்.. இதை சொன்னால் சங்கிகளுக்கு வயிறு எரியும்!
கிறிஸ்மஸ் வந்தாலே கூடுதல் மகிழ்ச்சி!
என்றெல்லாம் பேசிவருபவர் து.மு. உதயநிதி ஸ்டாலின்!
இவ்வருடம் இதையெல்லாம் தாண்டி கிறிஸ்தவ கொள்கையும், திராவிட கொள்கையும் ஒன்று தான் என்று கூறி திராவிட முன்னேற்ற கழகத்தை திருச்சபை முன்னேற்ற கழகமாக்கியுள்ளார்!
உண்மை தான்! இரு கொள்கைகளும் ஒன்று தான்!
இரண்டுமே இந்த தேசத்தை ஏற்றுக்கொள்ளாமல் பிரிவினையை வளர்க்கக் கூடியவை தானே!
இரண்டுமே தாய்மொழியையும், இம் மண்ணின் பண்பாட்டையும் அழிப்பவை!
இப்படி நம்மால் இரண்டுக்கும் உள்ள ஒற்றுமையை சொல்லிக்கொண்டே போகலாம்!

இந்நிலையில், 21.12.2025 அன்று நெல்லை பாளையங்கோட்டையில் கிறிஸ்தவ நல்லெண்ண இயக்கம் சார்பில் நடந்த கிறிஸ்மஸ் விழாவில் கலந்து கொண்ட ஸ்டாலின் சிறுபான்மையினர்களுக்கான தன்னுடைய அரசு பல அறிவிப்புகளை வெளியிட்டுள்ளதாக கூறி கிறிஸ்தவர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தினார். அரசின் அறிவிப்புகளாக அவர் அந்த கூட்டத்தில் அவர் வெளியிட்ட அறிவிப்புகள்:

சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்களின் ஆசிரியர் தேர்வு கமிட்டியில், அந்தந்த நிறுவனங்களின் பிரதிநிதிகள் மட்டுமே இருப்பர் என்ற அரசாணையில் கையெழுத்து போட்டு விட்டுதான், இங்கே வந்திருக்கிறேன் என்று பெருமிதத்தோடு கூறினார்.

புதிய விதிகள் நடைமுறைக்கு வருவதற்கு முன்பே நியமிக்கப்பட்ட, 470 ஆசிரியர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்படும்.

ஆசிரியர் தகுதித் தேர்வு (TET) விவகாரத்தில் சிறுபான்மை நிறுவனங்களின் கோரிக்கையை ஏற்று அரசு முக்கிய முடிவு எடுத்துள்ளது. இது தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் மாநில அரசு தாக்கல் செய்திருந்த வழக்குகளைத் திரும்பப் பெற்றுள்ளது.

இந்த நடவடிக்கையின் பயனாக, தற்போது வரை சிறுபான்மை கல்வி நிறுவனங்களில் 1,439 ஆசிரியர்கள் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர் என்றெல்லாம் மிகுந்த உற்சாகத்துடன் கூறினார் ஸ்டாலின்.

இது எல்லாவற்றிற்கும் மேலாக 23.12.2025 அன்று சென்னை பெரம்பூரில் திமுக சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு சார்பில் நடந்த கிறிஸ்தவ விழாவில், மேடைதோறும் சிறுபான்மையினருக்கு செய்து வரும் நலத்திட்டங்கள் குறித்து பேசி வருகிறேன் என்று கூறி பெரிய பட்டியலை வாசித்தார். அதில் குறிப்பிடத்தக்கவையாக, சிறுபான்மையினரால் நடத்தப்படும் 456 கல்வி நிறுவனங்களுக்கு நிரந்தர அந்தஸ்து சான்றிதழ்கள் வழங்கியிருக்கிறோம்! மதச்சார்பு கட்டடங்களுக்கு அனுமதி வழங்கும் போது மாவட்ட கலெக்டரிடம் தடையில்லா சான்றிதழ் பெறுவது அவசியம் என்பதில் இருந்து விலக்கு அளிக்கப்படும் என்றும் அறிவித்துள்ளார்.

இந்த விழா நடந்த டிசம்பர் 23க்கு ஒரு நாள் முன்பு, அதாவது 2025 டிசம்பர் 22ம் தேதி விஜய் நடத்திய சமத்துவ கிறிஸ்தவ விழாவில் கலந்து கொண்ட கிறிஸ்தவ பாதிரிகள் நாம் அனைவரும் இணைந்து நம் கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்த விஜய்க்கு ஓட்டளிக்க வேண்டும் என்று பேசினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. சிறுபான்மை ஓட்டுக்களுக்காக பல சட்ட விரோத அறிவிப்புகளை வெளியிட்டுள்ளதை நாம் கவனிக்க வேண்டும்.

சிறுபான்மையினரால் நடத்தப்படும் கல்வி நிறுவனங்களுக்கு நிரந்தர அந்தஸ்து என்ற அறிவிப்பு, அந் நிறுவனங்கள் யதேச்சதிகாரத்துடன் செயல்பட வழிவகை செய்யாதா? அந் நிறுவனங்களில் மதமாற்றம், ஊழல் போன்றவற்றை நடத்திக்கொள்ள அதிகார பூர்வ அப்ரூவலை அரசே வழங்கியுள்ளதா? இந்த கிறிஸ்தவ நிறுவனங்களில் நடக்கும் மதமாற்ற, தேச விரோத நடவடிக்கைகளுக்கு அரசு நிதியுதவி செய்யகிறது என்று கொள்ளலாமா?. இது ஹிந்து இன அழிப்பு இல்லாமல் வேறு என்ன? நீர்நிலை ஆக்ரமிப்பு, அரசு நில ஆக்ரமிப்பு என்று பல காரணங்களைக் காட்டி கோவில்களை இடித்து வரும் அரசு, சிறுபான்மையினர் கட்டிடங்களுக்கு கலெக்டரின் NOC



கூட தேவையில்லை என்பது பல சட்ட விரோதங்களுக்கு வழி வகுக்காதா? அது மட்டுமல்லாமல் இது மத கலவரங்களுக்கு வழி வகை செய்யாதா?

சர்சுகளையும், மசூதிகளையும் பெருக்கி மதமாற்றத்திற்கும்கலவரத்திற்கும் அரசே வித்திடுவது போல் இருக்கிறது இந்த அறிவிப்பு. ஏற்கனவே பல இடங்களில் அனுமதி இல்லாமல் சர்ச், மசூதி போன்றவைகள் கட்டப்பட்டு, அவைகள் இடிக்கப்பட வேண்டும் என்று நீதிமன்றம் ஆணையிட்ட பின் கூட இடிக்க முடியாமல் அதிகாரிகள் திணறி வருகின்றனர்.

**சிறுபான்மையின கல்வி நிறுவனங்களுக்கு நிரந்தர அங்கிகாரம்! ஆசிரியருக்கு கல்வித் தகுதி தேவையில்லை ! ஆசிரியர் நியமனங்களை சிறுபான்மையினரே செய்து கொள்ளலாம்! ஹிந்துக்கள் என்றால் அனைத்தும் அரசின் கட்டுப்பாட்டில் ! இந்த அறிவிப்புகள், ஹிந்து கல்வி நிறுவனங்களை ஒழிக்கும் சதி !**

சிறுபான்மையின நிறுவனங்களில் ஆசிரியர் தேர்வு கமிட்டியில் அந்த நிறுவனத்தைச் சார்ந்தவர்களே தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் என்றால், அரசாங்க பணத்தில் சிறுபான்மை கல்வி நிறுவனங்கள் ஏகபோக உரிமையை அனுபவிக்கலாம் என்பது தானே இதன் அர்த்தம்! ஆனால் அதே நேரத்தில் ஹிந்துக்கள் கல்வி நிறுவனங்களுக்கு மட்டும் ஏகப்பட்ட சட்டதிட்டங்கள்! அது ஓரவஞ்சனையாகாதா?

சிறுபான்மையின கல்வி நிறுவனங்களுக்கு நிரந்தர அங்கிகாரம்! ஆசிரியருக்கு கல்வித் தகுதி தேவையில்லை! ஆசிரியர் நியமனங்களை சிறுபான்மையினரே செய்து கொள்ளலாம்! ஹிந்துக்கள் என்றால் அனைத்தும் அரசின் கட்டுப்பாட்டில்! இந்த அறிவிப்புகள், ஹிந்து கல்வி நிறுவனங்களை ஒழிக்கும் சதி !

த.வெ.க அரசியலிற்கு வந்தபின், கிறிஸ்தவர் முதல்வராகும் வாய்ப்பு வந்துள்ளது என்று பல கிறிஸ்தவர்கள் த.வெ.கவை ஆதரிக்கத் தொடங்கியுள்ளனர். இந்த அரசியல் மாற்றத்தை சுட்டிக்காட்டி, பல சட்ட விரோத கோரிக்கைகளை கிறிஸ்தவர்கள் முன்வைக்க, பயத்தில் உறைந்த தி.மு.க அவைகளை நிறைவேற்றியும் வருகிறது. ஜாதிச் சான்றிதழ் வழங்கும் வருவாய்த்துறை ஜாதியின் பெயரைக் குறிப்பிடுகிறது ஆனால் மதத்தின் பெயரைக் குறிப்பிடுவதில்லை! மதமாறியவர்களுக்கு ஜாதியின் பெயரால் சலுகை கொடுப்பது சட்ட விரோதம் என்ற நீதிமன்றத் தீர்ப்பை முறியடிக்கவே இந்த மதம் குறிப்பிடாமல் ஜாதிச் சான்றிதழ் வழங்கும் நடைமுறை என்பது தெளிவாகிறது. கிறிஸ்தவ ஓட்டுக்காக பட்டியலினத்தவர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்குத் துரோகம் செய்கிறது தி.மு.க. 1949 ஆம் ஆண்டு கிறிஸ்தவச் சபையின் நோக்கங்களை நிறைவேற்ற, திராவிடம் என்ற பசப்புச் சொல்லாடலை முன்னிறுத்தித் தொடங்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகம் என்ற அரசியல்கட்சி, 76 ஆண்டுகளுக்குப்பின் தன் நோக்கத்தை பகிரங்கப்படுத்தி, திருச்சபை முன்னேற்றக் கழகம் என்று அழைக்கும் அளவிற்கு கிறிஸ்தவ அடிப்படைவாதம் தமிழகத்தில் வலுப்பெற்றுள்ளது என்பதே நிதர்சனம்!

# லயோலா கல்லூரியின் லகலகலகலக ஆட்டம்

அருண்பிரபு

நம் நாட்டின் கல்லூரி, பல்கலைக்கழகங்களில் சொல்லித்தரப்படும் படிப்புகளை நிர்வகிப்பதும், கட்டுப்படுத்துவதும் சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகங்கள். அந்தப் பல்கலைக்கழகங்களைக் கட்டுப்படுத்தி நிர்வகிப்பது பல்கலைக்கழக மான்யக்குழு (UGC). ஆனால் இவர்களையும், சகல விதிகளையும் விதியே என்று கூட மதிக்காமல் இருக்கும் கூட்டங்கள் சில இருக்கின்றன. அவற்றில் ஒன்று கல்வி கற்பிக்கிறேன் பேர்வழி என்று தங்கள் விருப்பத்துக்குச் செயல்படும் சிறுபான்மை நிறுவனங்கள். லயோலா கல்லூரி பற்றி அப்படிச் செய்திகள் பல உலவிய போதிலும் அதன் மீது யாரும் புகாரளித்ததில்லை. ஆனால் தற்போது ஒரு தத்துவ முதுகலைப் பட்டப்படிப்பைத் தொடங்கியதில் லயோலாவுக்குக் கட்டம் சரியில்லாமல் போய்விட்டது. எம்மே ப்லாசபி என்று கவுண்டமணி காமெடி செய்தது போல ஆகிவிட்டது நிலைமை.

இருபதாண்டுகளாக லயோலாவில் நடத்தப்பட்டு வரும் MA Philosophy படிப்பில் சிக்கிம், அருணாசலப்பிரதேசம், ஜார்கண்ட் உள்ளிட்ட மதமாற்றங்களுக்கு அதிக வாய்ப்புள்ள மாநிலத்தில் இருந்து மாணவர்கள் சேர்க்கை அதிகமாக உள்ளது என்றும், இவர்களுக்கு கிறிஸ்தவ தத்துவங்கள் போதிக்கப்பட்டு அரசு உதவியிலான படிப்புக்குப் பிறகு மதமாற்றப் பணிகளில் ஈடுபடுத்தப்பட வாய்ப்புள்ளது என்று புகார்கள் எழுந்தன. பல காலம் அரசுகள் கண்டுகொள்ளவில்லை. இந்நிலையில் கடந்த ஜனவரி 2025ல் இது குறித்தும், மேலும் லயோலாவில் நடக்கும் நிதி மோசடி, மாணவர்களிடம் அதிகக் கட்டண வசூல், பல்கலைக்கழக விதி மீறல்கள் உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் commune இணைய இதழில் விரிவாக வெளியாகின. இதில் பல்கலைக்கழக மான்யக்குழு தலைவரால் குற்றம் சாட்டப்பட்ட இருவர் முனைவர் செல்வநாயகம், பாதிரியார் ஃபிரான்சிஸ் சேவியர் ஆகியோர் கல்லூரியில் முறையே ஆராய்ச்சித் தலைவராகவும், முதல்வர் பொறுப்பிலும் உள்ளனர் என்று தெரிவித்ததையும் வெளியிட்டிருந்தது.

**MA Philosophy படிப்பு கல்லூரி வளாகத்தில் நடத்தப்படவில்லை என்றும் சத்திய நிலையம் என்ற கிறிஸ்தவ மத போதனைக்கான அடையாறில் உள்ள வளாகத்தில் நடத்தப்படுவதாகவும் தெரிவித்தது. இது பல்கலைக்கழக விதிகளை மீறும் செயலாகும்.**

முக்கியமான குற்றச்சாட்டு இந்த MA Philosophy படிப்பு கல்லூரி வளாகத்தில் நடத்தப்படவில்லை என்றும் சத்திய நிலையம் என்ற கிறிஸ்தவ மத போதனைக்கான அடையாறில் உள்ள வளாகத்தில் நடத்தப்படுவதாகவும் தெரிவித்தது. இது பல்கலைக்கழக விதிகளை மீறும் செயலாகும். அடையாறு வளாகத்தில் நடத்தினால் லயோலா கல்லூரி அடையாறு வளாகம் என்று சான்றிதழில் குறிப்பிடவேண்டும். ஆனால் லயோலா கல்லூரி சென்னை என்று மட்டும் குறிப்பிட்டிருப்பது கல்லூரி வளாகத்தில் படித்தாகக் காட்டுவது ஏமாற்று.

பிப்ரவரி 2025ல் இந்தச் செய்தியின் அடிப்படையில் ஐதராபாத்தில் உள்ள சட்ட உரிமைப் பாதுகாப்பு மன்றம் (LRPF) பல்கலைக்கழக வேந்தரான தமிழக ஆளுநருக்கு ஒரு புகார் அனுப்பியது. அதில் இந்தக் குற்றச்சாட்டுகளைக் குறிப்பிட்டு இதனால் கல்லூரிக்கான பல்கலைக்கழக அங்கீகாரத்தையும் தன்னாட்சி அதிகாரத்தையும் ரத்து செய்யவேண்டும் என்றும் கோரியிருந்தது.

மார்ச் 2025ல் சட்ட உரிமைப் பாதுகாப்பு மன்றம் (LRPF) ஏசு சபையின் தலைவருக்கு வெளிநாட்டு நிதி மோசடி மற்றும் பல்கலைக்கழக மானியக்குழு நிதியைத் தவறாகப் பயன்படுத்துவது ஆகிய குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்கச் சொல்லி பாதிரியார் ஆல்பர்ட் முத்துமலை அம்பலப்படுத்திய விவரங்களைக் குறிப்பிட்டு விளக்கம் கேட்டிருந்தது. இந்நிலையில் தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்கள் சென்னைப் பல்கலைக்கழகத்துக்கு சத்திய நிலையத்தின் சட்டவிரோத செயல்பாடுகள் குறித்து விசாரித்து விவரம் சொல்ல அறிவுறுத்தினார்.

இந்தக் குற்றச்சாட்டுகளால் மார்ச் 2025ல் சத்திய நிலையத்தின் இணைய தளத்தில் இருந்து லயோலா குறித்த இணைப்புகள்/குறிப்புகள் நீக்கப்பட்டன. பல எச்சரிக்கைகள், அறிவுறுத்தல்களுக்குப் பிறகும் சென்னைப் பல்கலைக்கழகம் மெத்தனம் காட்டியது. இந்நிலையில், ஆளுநரிடம் சென்னைப் பல்கலைக்கழகப் பதிவாளர் ஏழுமலை, லயோலா




கல்லூரி விவகாரத்தில் பெரிய அளவில் மோசடி நடந்திருப்பதாக குற்றச்சாட்டு வைத்தார்.

ஏப்ரல் 2025ல் தேசிய மனித உரிமைகள் ஆணையம் கிறிஸ்தவரல்லாத மாணவர்களுக்கு இந்த MA Philosophy படிப்புக்கு அனுமதி மறுக்கப்படுவது குறித்த விசாரணையில் இறங்கியது. பல்கலைக்கழக மானியக்குழுவுக்கும், சென்னைப் பல்கலைக்கழகப் பதிவாளருக்கும் விளக்கம் கேட்டு நடவடிக்கை எடுக்கப்பட்ட விவரங்களைச் சமர்ப்பிக்கச் சொன்னது. துரும்பு அசையவில்லை. கடுப்பான மனித உரிமைகள் ஆணையம் ஜூன் மாதத்தில் மானியக்குழுவுக்கும், பல்கலைக்கழகப் பதிவாளருக்கும் 19 ஆகஸ்ட் அன்று நேரில் ஆஜராகி விளக்கம் சொல்ல தாக்கீது அனுப்பியது. சுதாரித்துக் கொண்ட மானியக்குழு, சென்னைப் பல்கலைக்கழகம் மற்றும் லயோலா கல்லூரி இரண்டு இடங்களிலும் ஆகஸ்டு 13-14 ஆகிய நாட்களில் விசாரணை நடத்தி பெருமளவில் மோசடி நடந்திருப்பதையும், பல்கலைக்கழக விதிகள், அரசு நடைமுறைகள், அங்கீகார நெறிமுறைகள் மீறப்பட்டிருப்பதையும் உறுதிப்படுத்தி ஆகஸ்டு 16 அன்று அறிக்கை சமர்ப்பித்தது. டிசம்பர் 2025ல் ஒரு வழியாக இந்த மோசடியான MA Philosophy படிப்பு 3 ஆண்டுகளுக்கு நிறுத்தப்பட்டது.

**அடுத்த பம்மாத்து பார்ப்போமா?**

“Diploma in Filmmaking (AI), France.” என்று ஒரு படிப்பு. பாரீசில் உள்ள டான் பாஸ்கோ சர்வதேச ஊடக கல்விச்சாலை (DBIMA) என்ற அமைப்புடன் இணைந்து நடத்துவதாக லயோலா கல்லூரி அறிவித்து ஆள்சேர்த்தது. வெளிநாட்டு அமைப்புகளுடன் சேர்ந்து நடத்தப்படும் படிப்புகளுக்கான அனுமதிகள் ஏதும் பெறவில்லை. முறையான அனுமதிகள் இல்லாமல் விசா எடுத்து வெளிநாட்டுக்குப் படிக்கப் போவது சட்டச்சிக்கல்களை அந்நிய மண்ணில் உருவாக்கும் என்று சட்ட உரிமைப் பாதுகாப்பு மன்றம் தேசிய மனித உரிமைகள் ஆணையத்திடம் புகாரளித்தது. விசாரித்து விவரம் சொல்லுங்கள் என்று தாக்கீது அனுப்பியது ஆணையம். பல்கலைக்கழகம் தந்த பதில் “எந்தப் பிரச்சனையும் இல்லை. எல்லா அனுமதியும் முறையாக உள்ளது. குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை.”

சட்ட உரிமைப் பாதுகாப்பு மன்றத்தால் பெறப்பட்டிருந்த RTI பதிலின் படி “இந்த டிப்ளமோ படிப்புக்கு எந்த முறையான அனுமதியோ அங்கீகாரமோ பெறப்படவில்லை.” என்பதே. மனித உரிமை ஆணையம் RTI அடிப்படையில் விவரமான அறிக்கை தாக்கல் செய்ய சென்னைப் பல்கலைக்கழகத்துக்கும் பல்கலைக்கழக மானியக்குழுவுக்கும் மீண்டும் உத்தரவிட்டுள்ளது. ஃபிரான்ஸில் உள்ள DBIMA அமைப்பின் தலைவர் பாதிரியார் ஜான் பால் சாமிநாதன் என்பவர். இது ஏதோ இங்கிருந்து அங்கே போய் ஒரு கம்பெனி ஆரம்பித்து ஃபாரின் கொலாப்பரேசன் என்று கரடி விடுவது போலவும் இருக்கிறது என்று விவரம் அறிந்தவர்கள் சொல்கிறார்கள். இன்னும் விசாரணை முடிவு வரவில்லை.

**சத்திய நிலையத்தில்
வங்கதேசத்தினர் பலர் தங்கிப் “படிப்பதாக”
தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.
இது தேசப் பாதுகாப்புக்கான அச்சுறுத்தல்.
உள்துறை அமைச்சகம் நடவடிக்கை
எடுக்குமா?**

**கேள்விகள்:**

இத்தனை குற்றச்சாட்டுகள், சட்டத் தாக்கீதுகளை கண்டுகொள்ளாது இருக்கும் அளவுக்கு சென்னைப் பல்கலைக்கழகத்துக்கும் லயோலா கல்லூரிக்கும் என்ன பின்னணி?

பல்கலைக்கழக மானியக்குழு நிதி மோசடிகளை விசாரித்து நடவடிக்கை எடுக்காமல் ஏன் மௌனம் காத்தது? லயோலா லாபிக்கு டில்லியில் அத்தனை செல்வாக்கா? அல்லது இடதுசாரிப் பிடி இன்னும் வலுவாக உள்ளதா?

சிறுபான்மை என்றால் எந்தச் சட்டத்தை மீறினாலும் பேசாமல் இருப்பதற்கு எதற்கு விதிகள்? இஷ்டம் போலச் செயல்படலாம் என்று எழுதிக் கொடுத்துவிடலாமே?

இவை தவிர சத்திய நிலையத்தில் வங்கதேசத்தினர் பலர் தங்கிப் “படிப்பதாக” தகவல்கள் வெளியாகியிருக்கின்றன. இது தேசப் பாதுகாப்புக்கான அச்சுறுத்தல். உள்துறை அமைச்சகம் நடவடிக்கை எடுக்குமா?

இந்நிலையில் லயோலா கல்லூரி முதல்வர் பாதிரியார் லூயி ஆரோக்கியராஜ் “யாரும் படிக்க வராததால் நாங்களே அந்த MA Philosophy படிப்பை நிறுத்திவிட்டோம்” என்று சொல்லியிருக்கிறார். ஆனால் சட்ட உரிமைப் பாதுகாப்பு மன்றம் “3ஆண்டுகளுக்கு MA Philosophy படிப்பை நிறுத்தும் சென்னைப் பல்கலைக்கழக நடவடிக்கை போதுமானதாக இல்லை. இதைச் சட்டப் போராட்டமாக முன்னெடுப்போம்” என்று அறிவித்துள்ளது. ஆகட்டும் பார்க்கலாம் ஆட்டத்தின் முடிவிலே. வந்தே மாதரம்.

# நவோதயா பள்ளிகள்
## உச்சநீதிமன்றம் தமிழக அரசுக்கு கடும் கண்டனம்

தமிழ்நேசன்

1986 ஆம் ஆண்டின் தேசியக் கல்விக் கொள்கையின் கீழ் மத்திய அரசால் தொடங்கப்பட்டவை ஜவஹர் நவோதயா வித்யாலயா பள்ளிகள். கிராமப்புறச் சிறார்களுக்கு, அவர்களது குடும்ப வருமானம் மற்றும் சமூக நிலை எத்தகையதாக இருப்பினும், தனியார் சிறப்புப் பள்ளிகளுக்கு இணையான தரமான கல்வியை இலவசமாக வழங்கும் நோக்குடன் தொடங்கப்பட்ட திட்டம் இது.

மத்திய இடைநிலைக் கல்வி வாரிய (CBSE) பாடத்திட்டத்தை நவோதயா பள்ளிகள் பின்பற்றுகின்றன. 6 ஆம் வகுப்பில் மாணவர் சேர்க்கையானது, மாவட்ட அளவில் நடத்தப்படும் நுழைவுத் தேர்வு (JNVST)மூலம் நடைபெறுகிறது. இந்த நுழைவுத் தேர்வை மாணவர்கள் தாங்கள் படித்த தாய்மொழியிலேயே எழுதலாம். இதில் தேர்ச்சி பெறும் மாணவ, மாணவியருக்கு இலவசக் கல்வியுடன் உணவு, உடை, உறைவிடம், புத்தகங்கள் மற்றும் மருத்துவ வசதிகள் அனைத்தும் இலவசமாக வழங்கப்படுகின்றன.

கட்டணப்படிப்பு என்றாலும் குறைந்தபட்சம் 6ஆம் வகுப்புக்கு ரூ 600, 9-12ஆம் வகுப்புகளுக்கு ரூ 1500 தான். இவற்றில் எஸ்சி, எஸ்டி, வறுமைக்கோட்டுக்குக் கீழே உள்ளவர்கள், பெண் குழந்தைகள் ஆகியோருக்குக் கட்டணமில்லை. மத்திய அரசு ஊழியர்கள் மேற்சொன்ன கட்டணம் கட்டலாம் அல்லது அவர்களுடைய குழந்தைகள் படிப்பு உதவித்தொகை (CEA) பிடித்துக்கொள்ளப்படும்.

இந்தியைத் திணிப்பதாகச் சொல்லித் தமிழ்நாடு அரசு 1986லிருந்து நீண்டகாலமாக நவோதயா பள்ளிகளை எதிர்த்து வருகிறது.

இந்த நிலையில், குமரி மகா சபா என்ற அமைப்பு நவோதயா பள்ளிகளைத் தமிழகத்தில் அமைக்கக் கோரி மதுரை உயர்நீதிமன்ற கிளையில் பொதுநல வழக்கு தொடர்ந்தது. தமிழக அரசு இதை எதிர்த்து வாதிட்டது. ஆனால் உயர்நீதிமன்றம் நவோதயா பள்ளிகளை அமைக்க வேண்டும் என்று உத்தரவிட்டது. இதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தது தமிழக அரசு. உச்சநீதிமன்ற நீதிபதிகள் பி.வி. நாகரத்னா, ஆர். மகாதேவன் ஆகியோர் அடங்கிய அமர்வு இந்த முறையீட்டை விசாரித்தது.

இந்த வழக்கு விசாரணையின் போது மனுதாரர் மற்றும் மத்திய அரசு தரப்பில், கிராமப்புற மாணவர்களுக்கு தரமான, இலவச, உறைவிடக் கல்வியை நவோதயா பள்ளிகள் வழங்குகின்றன. இப்பள்ளிகளில் 8 ஆம் வகுப்பு வரை தமிழ் பயிற்று மொழியாக இருக்கும். உயர்வகுப்புகளிலும் தமிழுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும். இது தமிழ்நாட்டின் இருமொழிக் கொள்கைக்கு எதிரானது அல்ல என வாதிடப்பட்டது.

இந்தி திணிப்புக்கு நவோதயா பள்ளிகள் வழிவகுக்கும். தமிழ்நாட்டின் இருமொழிக் கொள்கையை மீறுகின்றன நவோதயா பள்ளிகள். ஒவ்வொரு மாவட்டத்திலும் 30 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்வது மற்றும் அதற்கான செலவுகள் மாநில அரசுக்கு கூடுதல் சுமையை ஏற்படுத்தும் என வாதிட்டார் தமிழக அரசின் சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் வில்சன். வில்சனின் வாதத்தின் போது குறுக்கிட்ட நீதிபதி நாகரத்தினா, தயவு செய்து தமிழ்நாட்டில் மாணவர்களை அழுத்தத்திற்கு உள்ளாக்காதீர்கள் என்றார்.

> **எங்கள் மாநிலம், எங்கள் அரசு என தயவு செய்து யாரும் சொல்லாதீர்கள்! இது கூட்டாட்சி தத்துவத்தின் அடிப்படையில் நடைபெறக்கூடிய நாடு.**

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள் “இந்த விவகாரத்தை மொழிப் பிரச்சினையாக மாற்ற வேண்டாம். கல்வி சமத்துவம் மற்றும் கிராமப்புற மாணவர்களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு, இந்த விவகாரத்தில் அரசியல் ரீதியான வேறுபாடுகளைத் தாண்டி ஒரு நல்ல முடிவை எட்ட வேண்டும். மத்திய அரசிடம் கல்வி நிதி பெறுவதில் சிக்கல் இருக்கிறது என்றால் தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர், மத்திய அரசிடம் பேச்சுவார்த்தை நடத்தலாமே? தமிழக அரசு அதிகாரிகளை மத்திய அரசிடம் பேச அனுப்பி வைக்கலாமே?

எங்கள் மாநிலம், எங்கள் அரசு என தயவு செய்து யாரும் சொல்லாதீர்கள்! இது கூட்டாட்சி தத்துவத்தின் அடிப்படையில் நடைபெறக்கூடிய நாடு. தமிழ்நாடு இந்திய கூட்டாட்சியின் ஒரு அங்கம். மத்திய- மாநில அரசுகள் பேச்சுவார்த்தை நடத்தி ஒருமித்த கருத்தை எட்ட வேண்டும்.” என்று கூறி நவோதயா பள்ளிகளை தமிழ்நாட்டில் அமைப்பதற்கான இடங்களை 6 வார காலத்திற்குள் கண்டறிய வேண்டும் என்ற உத்தரவையும் பிறப்பித்துள்ளார்கள்.



# அமைச்சர் மனோ தங்கராஜ் சகோதரி ஆட்டய போட்ட அரசு நிலம்

சந்தானம், முன்னாள் இராணுவ அதிகாரி



அரசு நிலத்தில் இருந்த சுவாமி சிலைகளை அகற்றிவிட்டு அதில் சட்ட விரோதமாக பட்டா வாங்கி ப்ளாட் கட்டி காசு பார்த்த அயோக்கியத்தனம் மற்றும் அதன் மீதான வழக்கு கடந்து வந்த பாதையை விவரிக்கும் கட்டுரை தான் இது.

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் தாலுக்கா அகரம் தென் பஞ்சாயத்துக்கு உட்பட்ட கஸ்பாபுரம் வில்லேஜ் சர்வே நம்பர் 11/1 அதிலிருந்து 11/18 வரை சர்வே நம்பரில் வன பத்திரகாளி அம்மன் கோவில் இருந்தது. சமூக விரோதிகளால் மார்ச் மாதம் 20ம் தேதி 2020ம் வருடத்தில் அந்த கோவிலில் இருந்த 24 விக்கிரகங்கள் உடைக்கப்பட்டன. இதற்கு சேலையூர் காவல் நிலையத்தில் புகார் அளித்து புகார் நிலுவையில் இருக்கும் பொழுது 25- 8- 2020 அன்று தாம்பரம் தாசில்தாரும், வருவாய் ஆய்வாளரும், காவல்துறை உதவியுடன் அந்த இடங்களை ஆக்கிரமிப்பு என்று கூறி காலி செய்தார்கள். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து நாங்கள் கேட்ட பொழுது, இது அரசு நிலம் என்று கூறினார்கள்.

இதை எதிர்த்து நாங்கள் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தோம். அப்போது தான், இந்த அரசு நிலத்தை திமுக அமைச்சர் மனோதங்கராஜ் அவர்கள் உடன் பிறந்த சகோதரி மாஜினி செல்லா பெயருக்கு ஒன்னரை ஏக்கர் பட்டா போட்டு கொடுக்கப்பட்டிருந்தது எங்களுக்கு தெரியவந்தது. இதைச் சுட்டிக்காட்டி கோவிலுக்கும் பட்டா கேட்டு மனு செய்தோம். இதை விசாரித்த உயர் நீதிமன்றம் இதன் மீது மறு ஆய்வு செய்ய உத்தரவிட்டது. ஆனால் வருவாய் ஆய்வாளர் சார்லஸ் மற்றும் தாசில்தார் சரவணன் ஆகியோர் அரசுக்கு சொந்தமான அனாதீன சொத்து என்று கூறி தள்ளுபடி செய்து விட்டார்கள்.

ஆனால் அதே வருடத்தில் மனோ தங்கராஜ் சகோதரி பெயரில் உள்ள இடத்திற்கு தாசில்தார் சரவணன் அவர்கள் கம்ப்யூட்டர் பட்டா வழங்கினார். இதை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் (வழக்கு எண் wp 42 68 /20 24) வழக்குத் தொடுத்ததோடு இந்த அரசு நிலத்திற்கு கொடுக்கப்பட்ட பட்டாவை கேன்சல் செய்து நிலத்தை மீட்க கோர்ட் மூலமாகவே உத்தரவும் வாங்கி இருந்தோம். ஆனால் அந்தப் பட்டாவை அரசு கேன்சல் செய்யவில்லை. ஆதலால் நாங்கள் இதை எதிர்த்து மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் கோர்ட் அவமதிப்பு வழக்கு பதிவு (வழக்கு எண் cp3193/2024) செய்தோம். அந்த வழக்கிலும் நீதிமன்றம் உடனடியாக அந்த ஆக்கிரமிப்பை அகற்ற உத்தரவிட்டது. அதன் பிறகும் அரசு அந்த பட்டாவை கேன்சல் செய்யவும் இல்லை! ஆக்கிரமிப்பை அகற்றவும் இல்லை!

இந்த சூழ்நிலையில் லேண்ட் கமிஷனர் உயர்நீதிமன்றத்தில் இந்த இடத்தின் மீது பட்டா கொடுக்கச் சொல்லி உத்தரவிட்ட உத்தரவை எதிர்த்து அப்பீல் செய்திருந்தார்கள். (வழக்கு எண் wa2412/2022) இந்த வழக்கில் எங்களையும் இணைத்துக்கொண்டோம். ஏற்கனவே உயர் நீதிமன்றத்தில் கோர்ட் அவமதிப்பு வழக்கில் நீதிமன்றம் உத்தரவிட்டும், இதுவரை ஆக்கிரமிப்பு அகற்றப்படவில்லை, பட்டா கேன்சல் செய்யப்படவில்லை என்பதை எடுத்துரைத்த பிறகு மாண்புமிகு உயர்நீதிமன்ற நீதிபதி உடனடியாக அந்தப் பட்டாவை கேன்சல் செய்து அந்த ஆக்கிரமிப்பை அகற்றி அரசு நிலத்தை அரசிடம் ஒப்படைக்க வேண்டும் என்று 25. 11. 2025 அன்று உத்தரவிட்டார்கள்.

இதற்கிடையே தமிழ்நாடு லேண்ட் கமிஷனர் அவர்கள் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு 20- 11- 2025 அன்று இந்த அனாதீனம்

**தெளிவாக நீதிமன்றமும், லேண்ட் கமிஷனரும் உத்தரவிட்டப் பிறகும் இன்றைய தேதி வரை இந்த பட்டா கேன்சல் செய்யப்படவும் இல்லை! ஆக்கிரமிப்பும் அகற்றப்படவில்லை! இதற்கு காரணம் அதிகாரிகளை மிரட்டி அவர்களைப் பணி செய்ய விடாமல் தடுக்கும் திமுக அரசும், மந்திரியாக இருக்கும் பால்வளத்துறை மனோ தங்கராஜ் அவர்களும் தான்.**

இடத்தில் திமுக அமைச்சர் மனோ தங்கராஜ் அவர்களின் சகோதரி மாஜினி செல்லாவுக்கு கொடுக்கப்பட்ட பட்டாவை கேன்சல் செய்து, ஆக்கிரமிப்பை காலம் தாழ்த்தாமல் அகற்ற நடவடிக்கை எடுக்கவும், அவருக்கு பட்டா கொடுத்த அரசு அதிகாரிகளையும், இந்த இடத்தை விற்று பணம் சம்பாதித்த அக்கிரமிப்பாளர்கள் மீது கிரிமினல் வழக்கு பதிவு செய்யவும் உத்தரவிட்டார்.

இப்படி தெளிவாக நீதிமன்றமும், லேண்ட் கமிஷனரும் உத்தரவிட்டப் பிறகும் இன்றைய தேதி வரை இந்த பட்டா கேன்சல் செய்யப்படவும் இல்லை! ஆக்கிரமிப்பும் அகற்றப்படவில்லை! இதற்கு காரணம் அதிகாரிகளை மிரட்டி அவர்களைப் பணி செய்ய விடாமல் தடுக்கும் திமுக அரசும், மந்திரியாக இருக்கும் பால்வளத்துறை மனோ தங்கராஜ் அவர்களும் தான்.

இந்த வழக்கில் திமுகவைச் சேர்ந்த அகரம் தென் பஞ்சாயத்து தலைவர் ஜெகதீஸ்வரன்





அவர்களும் அவருடைய குடும்பத்தாரும் இந்த அனாதீன அரசு சொத்தை விற்றுப் பணம் பார்த்தது மட்டுமில்லாமல் அகரம் வில்லேஜ் சர்வே நம்பர் 206/1 மற்றும் 205/8A ஆகிய இந்த இரண்டு அரசு புறம்போக்கு நிலங்களை குடும்ப நண்பர்கள் மீது போலியாக பத்திரப்பதிவு செய்துள்ளனர். போலியாக பட்டா போட்டதோடு மட்டுமல்லாமல், பில்டிங் அப்ரூவல் வாங்கியுள்ளதாக கூறி தி.நகர் யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா வங்கியில் சுமார் 3 கோடி அளவில் இந்த சொத்தை அடமானம் வைத்து பேங்க் லோனும் வாங்கியுள்ளார்கள். இது குறித்து தமிழ்நாடு லஞ்ச ஒழிப்புத்துறையில் புகார் அளித்தும் மாவட்ட ஆட்சியர் மற்றும் தாம்பரம் காவல் ஆணையாளர் ஆகியோரிடம் புகார் அளித்தும் இது வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்த சொத்தின் மதிப்பு சுமார் 100 கோடி ரூபாய் ஆகும்.

இப்படித்தான் திராவிட மாடல் ஆட்சியில் அரசு சொத்துக்களை கபளீகரம் செய்து கொள்ளையடித்து கொண்டு உள்ளார்கள். இதைக் கேள்வி கேட்டால் எங்களை சங்கி என்று கூறுவார்கள்.

தமிழக மக்களே! இந்துக்களே! சிந்திப்பீர்! வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் சிந்தித்து வாக்களிக்கவில்லை என்றால் நீங்கள் கஷ்டப்பட்டு சம்பாதித்து சேர்த்த சொத்து உங்களுக்குச் சொந்தமில்லை.

உங்கள் வீட்டில் உள்ள பெண் பிள்ளைகளின் வாழ்க்கை, எதிர்காலம் கேள்விக்குறியாகி விடும்.தேர்தலில் சரியான அரசியல்வாதிகளை தேர்ந்தெடுக்காவிட்டால் இன்று பங்களாதேஷில் உள்ள இந்துக்களுக்கு என்ன நிலைமை நடக்கிறது என்பதை நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். அந்த நிலைமை உங்களுக்கு வெகுதூரத்தில் இல்லை. ஆதலால் சிந்தித்து செயல்படுங்கள் சிந்தித்து வாக்களியுங்கள்.

இந்து கலாச்சாரத்தையும் இந்து கடவுள்களையும், கோவில்களின் சொத்துக்களையும் மீட்டெடுக்க உறுதி பூணுவோம்!!

பாரத் மாதா கி ஜே!

# அரசியல் உலா

**- கரிகாலன்**

***எச்சரிக்கை 1:***

இதே பத்திரிகையில பொறுப்புத் துறப்பு படிச்சிருப்பீங்க. என் பங்குக்கு நானும் சொல்லிடறேன். இந்தக் கட்டுரையில வர்ற விஷயங்கள் ஏன் நடக்கலன்னு கேட்கக் கூடாது, அப்படியே நடந்தாலும் அதுக்கு நாங்க பொறுப்புக் கிடையாது.

**உலாப் போகும் நேரம்:**

அன்றும் வழக்கம்போல அங்காடித் தெருவில் உலா போயிருந்தேன். “என்ன ஓய், ரொம்ப நாளா ஆளைக் காணலை?”, அக்கறையோடு விசாரித்தார் நண்பர் ஒருவர். “அது இருக்கட்டும், இந்த வாரம் கட்டுரை வருமா?”, சவுக்கால் அடித்தாற் போல இன்னொரு நண்பர் கேட்டார்.

நான் ஏதோ மண்டபத்தில் உட்கார்ந்து யூட்யூப் ஐக் கேட்டு கட்டுரை எழுதுவதாக அவர் நினைத்தார் போல. ரோஷம் பொத்துக் கொண்டு வந்தது. ஆனாலும் அமைதியாகப் பதில் சொன்னேன்.

“தலைநகருக்குப் போயிருந்தேன்!’’. முதலாமவருக்குப் பதில் சொல்லியாயிற்று. “நம்பிக்கையான விஷயங்கள் ரெண்டு இருக்கு!’’. நண்பர்கள் இருவருக்கும் ஆர்வம் கூடியது. “கட்டுரை கட்டாயம் வரும்!’’ இரண்டாமவருக்கான பதிலும் வந்துவிட்டது.

“இருக்கட்டும் ஓய், அந்த ரெண்டாவது விஷயம் என்ன? அதைத் தானே முதல்ல சொல்லிருக்கனும்!’’ இது முதலாமவர். “அப்ப, டெல்லி ராஜகோபால பாத்திருக்கீங்க!’’, இது இரண்டாமவர். இருவருக்கமான பதிலை இறுதியில்தான் சொல்லப் போகிறேன்.




**உள்ளூர் உலா:**

“சரி, நீங்க சொல்லுங்க. உள்ளூர் நிலவரம் என்ன?’’, அவர்களையும் பேச வைப்போமே என்ற நோக்கில் கேட்டேன். கடந்த முறை கட்டுரையில் நீங்கள் எழுதியதற்குப் பிறகு எந்த பெரிய மாற்றமும் இல்லை என்று சுருக்கமாகப் பதில் சொல்லிவிட்டார்கள் இருவருமே. நானும் அடுத்துப் பேசுவதாக இல்லை. அவர்களில் ஒருவர் ஆரம்பித்தார்.

“எங்களுக்கு நாற்காலியே கொடுக்காட்டியும் பரவாயில்ல, இதே கூட்டணியில இருப்போம் ன்னு சொல்றாரே, பாவம் அப்படி என்ன மன அழுத்தமோ!’’, ஒருவர். “தொகுதியே வேண்டாம்னு சொல்ற அளவு தோழமை நசுக்கல் இவ்ளோ பலமா இருக்குன்னா, என்ன காரணமா இருக்கும்?’’, மற்றவர். “தோல்வி பயம் தான்!’’, இது நான்.

ஆளும் கட்சியான திமுகவுக்கு தோல்வி பயம் கூடிக் கொண்டே வருகிறது. இப்போது இருக்கும் கூட்டணியைத் தக்க வைத்துக் கொள்ளத் தகுதியை மீறிப் பிச்சை போடுவார்கள். பணக்கட்டுக்கள் பாயும் என்பதால் சில்லறைகள் சிதறுவது கடினம்.

“காங்கிரஸ் கூட தவெக பக்கமா சாய்ற மாதிரி இருக்கே?’’, மூன்றாமவர் களத்திற்கு வந்து விட்டடார். “திமுக கிட்ட பேரம் பேசுறதுக்கான நாடகம்னு தான் நானும் ஆரம்பத்துல நினைச்சேன். விசிலை வாயில வைக்கிறதுக்கு ‘கை’ தான் தூக்கிவிடும்னு விஜய் கட்சி தீவிரமா நம்புது. தூக்கற அளவு ‘கை’ க்குப் பலம் இருக்குன்னு காங்கிரஸூம் நம்புது. அப்படியே ‘கை’ தூக்கி விட்டா அது திமுகவுக்கு ஊதுற சங்காவும் இருக்கலாம்!’’.

“தென்னையைப்பெத்தாஇளநீரு..!’’ என்றவரிகள் காதில் கேட்டவுடன், அரட்டை திசை திரும்பியது.

“மகன் மேல் இருக்கற ஊழல் புகாரை விசாரிக்கச் சொல்லி அப்பாவே மனு போட்ட சேதி தெரியுமோ!'', கேள்வி எழுப்பினார் ஒருவர். “தன் பேரை மகன் பயன்படுத்தக் கூடாதுன்னு சொன்னாரே, அவரைத் தெரியுமோ!'', மறு கேள்வி எழுப்பினார் மற்றவர்.

தன் குடும்பத்தினர் யாரும் அரசியலுக்கு வரமாட்டார்கள் என்பது உள்ளிட்ட எத்தனையோ வாக்குறுதிகளை அவரே தந்தார், அவரே மீறினார். அதிகாரம் அவர் வசம், யாராலும் கேள்வி கேட்க முடியவில்லை. அப்படிக் கட்சியின் பெயரில் சேர்த்த சொத்துக்கள் இன்று அவரைச் சாட்டையால் அடிக்கின்றன.

மார்கழி கழிந்தாலும் அந்தக் குடும்பத்தில் மனக்கசப்பு தீருமா என்பது தெரியவில்லை கன்னித்தீவு கதை போல நீண்டு கொண்டே இருக்கிறது. தேர்தல் நெருங்க நெருங்க போல இன்னும் பல அவலங்கள் பொதுவில் அரங்கேறலாம்.

***எச்சரிக்கை 2:***

கேள்வி: இவ்ளோ நல்லா(?) எழுதுறீங்களே, நீங்க ஏன் யூட்யூப்ல பேசக் கூடாது?

பதில்: அதுல ஒரு சின்ன சிக்கல். நான் மிரட்டினாலும் யாரும் காசு தர மாட்டாங்க.

கே: சரி, ஸ்ரீ டிவில பேசலாமே!

பதில்: உண்மையிலேயே மிரட்டுற மாதிரி இருக்கும். அப்படி ஏதும் நடக்குறதுக்கு முன்னாடி நீங்களே ஸ்ரீ டிவிக்கு பணம் அனுப்பிடுங்க.

உண்மையைச் சொல்லும் போது ஓரளவு சிரிப்பேன்; பொய் சொல்லும் போது ஒரேடியா சிரிப்பேன். அதனால ஜாக்கிரதையா எழுத்தோட நிப்பாட்டிக்கிறேன். அது தான் இப்போதைக்கு நல்லது.

“அடுத்த காஃபி குடிக்கற நேரமாச்சு. அந்த நம்பிக்கை தர்ற சேதியை இன்னும் சொல்லலையே!'' ஞாபகம் வைத்துக் கொண்டு கேட்டனர் அனைவருமே.

“எடப்பாடி பழனிச்சாமி எல்லோரையும் கூட்டணியில சேர்த்துக்கத் தயாரா இருக்கறதா ஒரு பேச்சு. ஆனா வெளியே போனவங்க கட்சிக்குள்ளே வர்றதே உயிர் மூச்சுன்னு சொல்றதாவும், அதனாலதான் அறிவிப்பு தள்ளிப் போச்சுன்னும் சொல்றாங்க!'', ரகசியத்தைப் போட்டு உடைத்தேன்.

“இப்போ என்னதான் சொல்ல வர்றீங்க?'', இடைமறித்துக் கேட்டார் ஒருவர். “அடுத்து வரப் போறது தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சி'', நான் சொல்லி முடித்த போது யார் முகத்திலும் ஈயாடவில்லை. நம்பிக்கையின்மை. அமித் ஷாவே வந்து சொன்னாலும், ராஜகோபால் வகையறாக்கள் சொல்லாமல் இவர்கள் ஏற்க மாட்டார்கள்.



“இதை இட்லின்னு சொன்னா சட்னி கூட நம்பாது'', நக்கலடித்தார் ஒருவர். “நாங்க நம்புறது இருக்கட்டும், அந்தந்தக் கட்சிக்காரங்க கூட நம்ப மாட்டாங்க!'', அங்கலாய்த்தார் மற்றொருவர். இப்பொழுது என்ன சொன்னாலும் பிரயோஜனமில்லை. அடுத்த இதழில் விளக்கம் சொல்லிக் கொள்ளலாம் என்று முடிவு செய்தேன்.

“போகப் போகத் தெரியும் இந்தப் பூவின் வாசம் புரியும்!'' என்ற பாடலைப் பாடியபடியே விடைபெற்றேன், நடையைத் தொடர்ந்தேன்.

***ஒன்று பட்டால்!***

பலமான அதிமுக தான் தமிழக அளவில் பலமான தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு அடிப்படை. கூடுதல் பலத்தை ஒன்றிணைக்கும் பாஜக தான் நூலிழை. இதில் யார் பெரியவர், யார் சிறந்தவர் என்ற கேள்விகள் தேவையில்லை. திமுகவை வீழ்த்துவதே ஒற்றை இலக்காக இருக்க வேண்டும். நோக்கம் ஒன்றானால் வெற்றி எளிதாகும்!

# வங்க தேசம் ஜனநாயக போராட்டமா? ஹிந்து இன அழிப்பா?

ப்ரியா வெங்கட்

நம் அண்டை நாடான வங்கதேசத்தில் கடந்த 2024ம் ஆண்டு ஜுலை மாதத்தில் இளைஞர் புரட்சி என்ற பெயரில் வன்முறை வெறியாட்டம் நடந்தது! இப்போது ஓஸ்மான் ஹாதி என்ற அடிப்படைவாத மாணவ தலைவனை சுட்டு கொன்றதற்காக கலவரம்! இரண்டு கலவரங்களிலும் அதிகளவில் பாதிக்கப்பட்டது ஹிந்துக்களே! 2005 ஆம் ஆண்டு, யூனஸ் பதவிப் பொறுப்பு எடுத்தபின், வங்கதேசத்தில் ஹிந்து, பௌத்த, கிறிஸ்தவ மத சிறுபான்மையினருக்கு எதிராக 2,900 க்கும் மேற்பட்ட வன்முறை சம்பவங்கள் நடந்தேறியுள்ளது.

இடஒதுக்கீடு, ஊழல், அரசியல் கொலைகள் ஆகிய குற்றசாட்டுகளை முன் வைத்து வங்கதேசத்தின் இளைஞர்கள் ஷேக்ஹசீனா ஆட்சியைக் கவிழ்த்தனர். ஷேக் ஹசீனா இந்தியாவில் தஞ்சம் புகுந்தார். அச்சமயத்தில், ஹிந்துக்கள் வீடுகள், வழிபாட்டுத்தலங்கள், சூறையாடப்பட்டன. பெண்கள் கற்பழிக்கப்பட்டனர். டாக்காவில் இருந்த இஸ்கான் கோவில் சூறையாடப்பட்டு தகர்க்கப்பட்டது. அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்ற முகமது யூனஸ் இடைக்கால பிரதமராக பொறுப்பேற்றார். யூனஸ் ஆட்சி பொறுப்பேற்றது முதல் இந்தியாவிற்கு எதிரான மனநிலையை கொண்டு செயல்படத் தொடங்கினார். சீனாவிற்கு சுற்றுப்பயணம் சென்ற யூனஸ், அங்கு வடகிழக்கு நாடுகள் நிலப்பகுதிகளால் சூழப்பட்டது. அங்கிருந்து கடல்வழி மார்கம் கிடையாது. முழு பிராந்தியமும், வங்கதேசத்தைச் சார்ந்து உள்ளது, இது சீனாவிற்கு ஒரு மிகப்பெரிய வாய்ப்பு என்று பேசினார்.

அதற்கடுத்தாக, இந்தியாவிற்கு எதிராக செயல்படும் பயங்கரவாத அமைப்பான அன்சருல்லா பங்களா குழுவின் தலைவன் முப்தி ஜஸிமுதின் ரஹ்மானியை சிறையிலிருந்து விடுவித்தார்.

இத்தோடு யூனஸ் இந்திய விரோதப்போக்கு நிறைவுறவில்லை. பாகிஸ்தானின் உயர் இராணுவ அதிகாரி வங்கதேசம் சென்ற போது, வடகிழக்கு மாநிலங்களை வங்கதேசத்துடன் இணைத்து Greater Bangladesh என்ற பெயரில் ஒரு மேப்பை வெளியிட்டு அதை அவருக்கு பரிசாக தந்தார் யூனஸ்.இப்படி தொடர்ந்து இந்தியாவிற்கு எதிரான போக்கை கையாண்டு கொண்டிருக்கிறார் யூனஸ் இந்நிலையில், பிப்ரவரி 12, 2026ல் பொதுத் தேர்தல் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த தேர்தல் தேதி அறிவிப்பு வெளியானதில் இருந்தே அந்நாட்டில் தொடர்ந்து வன்முறைகள் அரங்கேறி வந்த நிலையில், ‘இன்குலாப் மஞ்ச்’ என்ற மாணவர் அமைப்பின் செய்தித் தொடர்பாளரும், அடிப்படைவாதியும், இந்தியாவிற்கு எதிரான மனநிலையும் கொண்ட ஷெரீப் ஓஸ்மான் ஹாதி, டிசம்பர் 12ம் தேதி நடந்த துப்பாக்கிச் சூட்டில் உயிர் இழந்தார். அந்த கொலைக்கு காரணம் இந்தியா தான் என்ற வதந்தி பரப்பப்பட்டது. இதையடுத்து அந்நாட்டில் பெரும் வன்முறை வெடித்தது.

**இரண்டு கலவரங்களிலும் அதிகளவில் பாதிக்கப்பட்டது ஹிந்துக்களே! 2005 ஆம் ஆண்டு, யூனஸ் பதவிப் பொறுப்பு எடுத்தபின், வங்கதேசத்தில் ஹிந்து, பௌத்த, கிறிஸ்தவ மத சிறுபான்மையினருக்கு எதிராக 2,900 க்கும் மேற்பட்ட வன்முறை சம்பவங்கள் நடந்தேறியுள்ளது.**

இந்த கலவரத்தில் அந்நாட்டின் டெய்லி ஸ்டார், ப்ரோதோம் அலோ ஆகிய பத்திரிக்கை அலுவலகங்கள் வன்முறையாளர்களால் கொளுத்தப்பட்டது. அந்த பத்திரிக்கைகள் யூனஸ் அரசாங்கத்தை விமர்சித்து எழுதி வந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. பத்திரிகைக்கு எதிரான தாக்குதல்கள் இத்துடன் நின்று விடவில்லை, குளோபல் டி.வி நிறுவனத்தின் செய்திப் பிரிவுத் தலைவர் நஜீம் முனியை நீக்காவிட்டால், டெய்லி ஸ்டார், ப்ரோதோம் அலோ பத்திரிகை அலுவலகங்கள் எரிக்கப்பட்டதுபோல் குளோபல் டி.வியும் எரிக்கப்படும் என்று சில இளைஞர்கள் அலுவலகத்திற்குச் சென்று மிரட்டியுள்ளனர். இதற்கிடையே யூனஸ்-ன் பண முறைகேடு, மற்றும் ஹிந்துக்களுக்கு எதிரான போக்கு போன்றவற்றை குறித்து கட்டுரை எழுதி வருபவர் லண்டனை



இருப்பிடமாகக் கொண்ட பத்திரிக்கையாளர் சுசாந்த் குப்தா. இவர் வங்கதேசத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர். டாக்காவில் உள்ள இவரது பூர்வீக வீடு தாக்கப்பட்டது. காசா பத்திரிகையாளார்களுக்கு குரல் கொடுத்த பத்திரிகையாளர்கள் சங்கங்களும், கருத்துச் சுதந்திரவாதிகளும் காணாமல் போய்விட்டார்கள் !

இந்த வன்முறைப் பின்னணியில், ஹிந்து இளைஞரான தீபு சந்திர தாஸ் என்பவர் இஸ்லாத்தை குறித்து தவறான கருத்து தெரிவித்தார் என்று கூறி கொடூரமான முறையில் தாக்கப்பட்டு கொல்லப்பட்டு எரிக்கப்பட்டார். தீபு சந்திர தாஸ் இஸ்லாம் குறித்து தவறான கருத்துகள் எதையும் தெரிவிக்கவில்லை என்று காவல்துறை விசாரணைக்குப்பின் அறிவித்தது. ஹிந்துக்கள் மீதான தாக்குதலை வங்கதேச அரசு ஊக்குவிக்கிறது என்ற உண்மை வெளிப்படத்தொடங்கியவுடன், யூனஸ் அரசு, தீபு சந்திர தாஸ் என்ற தலித் இளைஞரை கொன்று எரித்த வன்முறை வழக்கில் ஏழு நபர்களை கைது செய்துள்ளதாக கூறியுள்ளது.

இந்த கலவரத்தினூடே ஹாதியின் இறுதி ஊர்வலம் நடந்தது. அதில் கலந்து கொண்ட யூனஸ், ஹாதியின் கருத்துக்களின் வழியே நடப்போம். ஹாதியை வங்கதேசம் மறக்காது என்றெல்லாம் ஹாதிக்கு புகழாரம் சூட்டி பேசினார். ஒருவழியாக கலவரம் கட்டுக்குள் வந்த நிலையில் மாணவர் அமைப்பின் மற்றொரு தலைவர் முகமது மொதாலெப் சித்தார் மீது டிசம்பர் 22 அன்று துப்பாக்கி சூடு நடத்தப்பட்டது. இந்தத் துப்பாக்கிச் சூட்டைக் காரணம் காட்டி, சிட்டகாங் நகரில் ஹிந்து சமயத்தைச் சார்ந்த ஜெயந்தி சங்கா மற்றும் பாபு ஷுகுஹில் வீடுகள் கொளுத்தப்பட்டுள்ளது. அதிர்ஷ்டவசமாக அவர்கள் உயிர் தப்பியுள்ளனர். இச்சம்பவம் நடந்த இடத்தின் அருகே, ஹிந்துக்களை மிரட்டும் வகையிலான ஒரு பதாகை கண்டெடுக்கப்பட்டுள்ளது. வங்க மொழியில் எழுதப்பட்ட அந்த பதாகையில், “முஸ்லீம்களுக்கு எதிராக செயல்பட்டீர்கள் என்றால் நீங்கள் யாரும் மிஞ்சமாட்டீர்கள் என்று எச்சரிக்கை விடப்பட்டிருந்தது”.

ஹாதி சுட்டுக்கொல்லப்பட்ட சமயத்தில் மம்தா மேற்கு வங்க எல்லையோர மாவட்டங்களில் உள்ள உள்ளூர் மக்களை BSF போஸ்ட் அருகே செல்லவேண்டாம் என்ற எச்சரிக்கை விடுத்தார். அதே நேரத்தில், கலவர குழு ஒன்று இந்தியாவின் மேற்கு வங்க எல்லையை நோக்கி அணி வகுத்து வந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

வங்கதேசத்தில் கலவரங்கள் சற்று ஓய்ந்த நிலையில், ஓஸ்மான் ஹாதியின் சகோதரர், ஓமர் ஹாதி, ஓஸ்மான் ஹாதி கொலையின் பின்னணியில் யூனஸ் இருப்பதாகவும், தேர்தலை ஒத்திவைத்து பதவியில் தொடர்ந்து நீடிக்கவே யூனஸ் இந்த சதியை செய்துள்ளார் என்று குற்றம் சாட்டியுள்ளார். டிசம்பர் 12 சுடப்பட்ட ஹாதி, டிசம்பர் 15ம் தேதியன்று தான், சிங்கப்பூர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்படுகிறார். டிசம்பர் 18 உயிரிழந்தார். ஹாதியை சிங்கப்பூருக்கு மேல் மருத்துவ சிகிச்சைக்குத்தாமதமாக கொண்டு சென்றது, ஓஸ்மான் ஹாதியின் குற்றச்சாட்டை வலுப்படுத்துகிறது. மேலும், கலவரத்திற்கான டார்கெட்களை திட்டமிட எடுத்துக்கொண்ட கால அவகாசமாக இந்த 6 நாட்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

பொதுத்தேர்தலில் போட்டியிட ஷேக் ஹசீனாவின் கட்சியான அவாமி லீக்கிற்கு தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், வங்கதேச தேசியவாத கட்சித் தலைவரும், முன்னாள் பிரதமருமான கலிதா ஜியாவின் மகன் தாரிக் ரஹ்மான் வங்கதேசத்திற்கு மீண்டும் திரும்பியுள்ளார். தாரிக் ரஹ்மான் ஷேக் ஹசீனா ஆட்சியில் இருக்கும் போது ஊழல், பயங்கரவாத தாக்குதல் போன்ற காரணங்களுக்காக பல வழக்குகளில் சிக்கியவர்.

வங்கதேசத்தில் ஹிந்துக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவேண்டும் என்று டெல்லி, கொல்கத்தா போன்ற நகரங்களில் போராட்டம் நடத்தப்பட்டு வருகிறது. மேலும், நேபாளத்திலும் யூனஸ் அரசை கண்டித்து மிகப்பெரிய ஆர்பாட்டம் நடத்தப்பட்டது. இந்திய அரிசி ஏற்றுமதியாளர்கள் சிலர் வங்கதேசத்திற்கு அரிசி ஏற்றுமதி தடை விதிக்க வேண்டும் என்ற கோரிக்கை வைத்துள்ளனர்.



இந்தியாவிற்கான சணல் இறக்குமதிக்கு தடை விதித்திருக்கும் வங்கதேச அரசுக்கு பதிலடி கொடுக்க வேண்டும் என்கின்றனர் அரிசி ஏற்றுமதியாளர்கள். இந்தியாவை பிரிவினைவாதிகள் துணைகொண்டு துண்டாக்குவோம் என்று நேஷனல் சிட்டிசன் கட்சி தலைவர் ஹஷ்நத அப்துல்லா டிசம்பர் 15 அன்று பேசியிருந்தார். இதற்கு, மத்திய அரசு வங்கதேச தூதரை வரவழைத்து கண்டனம் தெரிவித்திருந்தது. இரண்டாவது முறையாக ஹிந்துக்களுக்கு எதிராக நடந்த வன்முறையை குறித்து கண்டனம் தெரிவித்தது.மேலும், இந்தியா வங்கதேசத்தினருக்கான விசா சேவையை காலவரையின்றி நிறுத்துவதாக அறிவித்துள்ளது. இதையடுத்து டாக்கா, சிட்டகாங் விசா சேவை மையங்கள் மூடப்பட்டன.

டிசம்பர் 19 அன்று, ஐ.நா பொதுச்செயலாளர் அந்தோனியோ குத்தேரெஸ், வங்கதேசத்தில் அதிகரித்து வரும் வன்முறை குறித்து ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளார். அங்குள்ள சிறுபான்மையின மக்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்தியுள்ளார். மேலும், ஹிந்துக்களின் மேல் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள தாக்குதல்கள் குறித்தும் கவலை தெரிவித்ததோடு, யூனஸ் அரசு வங்கதேசத்தின் ஒவ்வொரு குடிமகனும் பாதுகாப்பு அளிக்க நடவடிக்கை எடுக்கும் என்று நம்புவதாகவும் கூறியுள்ளார்.

வங்கதேசக் கலவரங்களை நியாயப்படுத்த, தாக்குதல்களுக்குள்ளானவர்கள் அவாமி லீக்




கட்சியைச் சேர்ந்தவர்கள் என்கிறது வங்க அரசு! ஆனால் தாக்கப்படும் ஹிந்துக்கள், அவர்கள் மத அடிப்படையில் தாக்கப்படுவதாகவும், அரசியலுக்கும், தாக்குதல்களுக்கும் தொடர்பில்லை என்கிறார்கள்! ஆளும் கட்சிக்கும், சித்தாந்தத்திற்கும் எதிரானவர்களை தாக்குவதை நியாயப்படுத்துவது ஜனநாயகமா? இப்படி ஆட்சி நடத்துபவரின் நோபல் பரிசை வாபஸ் வாங்கும் தைரியம் நோபல் கமிட்டிக்கு இருக்கிறதா? 2024ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஹிந்துக்கள் மற்றும் இதர சிறுபான்மையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களைக் கண்டித்துப் போராடிய இஸ்கான் சன்யாசி சின்மாய் கிருஷ்ண தாஸ் கைது செய்யப்பட்டார். இவரை சிறையில் சென்று சந்தித்த மற்றொரு சாது ஷ்யாம் தாஸ் ப்ரபு கைது செய்யப்பட்டார். இந்த நடவடிக்கைகள், அடக்குமுறையை எதிர்ப்பவர்களுக்கு எச்சரிக்கையாக அமைந்தது.

ஊழல் கட்சியான வங்கதேச தேசியக்கட்சியின் தலைவர் தாரிக் ரஹ்மான், 17 ஆண்டுகளுக்குப்பின், அதுவும் இந்தக் கலவரத்திற்குப்பின் உற்சாகமாக வரவேற்கப்பட்டார். 2024ல் வராத ரஹ்மான் இப்போது ஏன் வருகிறார்?

அரசியல் லாபத்திற்காக சீனாவும், அமெரிக்காவும் பல நாடுகளில் ஊழலுக்கு எதிரான இளைஞர்களின் கிளர்ச்சி என்ற பெயரில், அந்நாடுகளின் ஸ்திரத்தன்மையை சீர்குலைத்து வருகிறார்கள். இந்த நாடுகளோ, மேலும் சீரழிகின்றன. இந்தச் சூழலை இஸ்லாமிய அடிப்படைவாதிகளும், இடதுசாரிகளும் பயன்படுத்தி, ஜனநாயகத்தை அழித்து வருகிறார்கள். இந்த சதிச் செயல் நம்மைச் சுற்றியுள்ள நாடுகளில் திட்டமிட்டு நடத்தப்படுவதால், பாரதத்திற்கும், ஹிந்துக்களுக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

**ஹிந்துக்களும், பாரத அரசும் கண்விழிக்குமா?**

**வங்கதேசக் கலவரங்களை நியாயப்படுத்த, தாக்குதல்களுக்குள்ளானவர்கள் அவாமி லீக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்கிறது வங்க அரசு ! ஆனால் தாக்கப்படும் ஹிந்துக்கள், அவர்கள் மத அடிப்படையில் தாக்கப்படுவதாகவும், அரசியலுக்கும், தாக்குதல்களுக்கும் தொடர்பில்லை என்கிறார்கள் !**




- நா.பாஸ்கரன்

**ஒரே மொழி, ஒரே ஆடை, ஒரே உணவு என எதிலும் ஒன்றே ஒன்று என மட்டும் இருக்க முடியாது - கமல்ஹாசன்**

*யோவ் பங்கு.... ஒண்ணே ஒன்னுனு சொன்னாலே (கண்ணா பின்னான்னு கற்பனை பண்ணாத) ஆழ்வார்பேட்டையாருக்கும், அரபு அடிமைகளுக்கும் ஒரே அலர்ஜிதான் போ!*

**கருப்புதான் இந்த மண்ணின் நிறம் - திருமாவளவன்**

*கலைஞர், வைகோ, கி. வீரமணி, ஸ்டாலின், தயாநிதி, உதய் இவங்க எல்லாம் யாருன்னு சொல்லு?*

**திமுக மீண்டும் நாடக குழுக்களை உருவாக்க வேண்டும் - பேராசிரியர் . மு. இராமசுவாமி [ நாடக செயற்பாட்டாளர்]**

என்னத்தையாவது தூக்கிட்டு வந்துருவ நீ ! அதுவே ஒரு நாடக கம்பனிதான். நீங்க வேணா, கார்பொரேட் கம்பெனியா மாத்த சொல்லி மனு போடுங்க... அப்பத்தான் Performance Based Increment கிடைக்கும். பாவம் இல்லைனா காலம் முழுவதும் உ.பிக்களுக்கு ரூ. 200-/தான்.

**200 கோடியை இழந்துவிட்டு வருகிறார் என்றால் 2 லட்சம் கோடி சம்பாதிப்பதற்காக ஒருவர் அரசியலுக்கு வருகிறார் - நடிகர் கருணாஸ்**

விஜய சொல்றதா நினைச்சு கருணாநிதியையும், உதயநிதியையும் வீதியில கொண்டு வந்து விட்டு விட்டீங்களே கருணாஸ் ! இது ஏதோ உள்குத்து மாதிரில இருக்கு....

**இடியாப்பம் விற்க உரிமம் வேண்டும் - உணவு பாதுகாப்புத் துறை உத்தரவு**

*ஏதோ ஐஞ்சு, பத்து சம்பாதிக்கிற அப்பாவி கிட்ட ஆட்டைய போட இப்படி ஒரு டெக்கினிக்கா... சரி! இந்த சட்டம் பிரியாணிக்கும், ஸவர்மாவிற்கும், பொருந்துமா?*

**நல்லவர்கள் இணைப்பு விரைவில் நடக்கும் - காங்கிரஸ் மூத்த நிர்வாகி வேலுச்சாமி**

ஆக, ஆக, கூடா நட்பில் இருந்து வெளில வரப்போறீங்க.... இளம் பெரியாருக்கு போட்டியாக இளம் எம்.ஜி.ஆர் னு விரைவில் மக்கள் காதுகளை puncher ஆக்க பஞ்ச் வசனங்களை கேட்கலாம்

**பிஹாரை போல தமிழகத்தில் 100% நடக்காது - நெல்லை முபாரக்**

*பிஹாரிய பிஹாரி தேர்ந்தெடுத்தது போல, தமிழன தமிழன் தேர்ந்தெடுக்க மாட்டான்.. சட்டவிரோத வந்தேறிதான் நமக்கு சட்டம் போடுவானு சொல்றாரோ... ?*

**மோசஸ் கடலை பிளந்தார்; புனித முகமது நிலவை பிளந்தார்; பிரதமர் மோடி, மதத்தால் இந்த தேசத்தை பிளக்கிறார் -ஆ .ராசா**

மோடிய விமர்சிக்கிறேன்னு நினைச்சுகிட்டு கடவுளுக்கு இணையா மோடிய சொல்லிட்டீயே ராசா ! ஏக இறைவனுக்கு இணை வைச்சுட்டீங்கனு சொல்லி உங்கள உங்க எசமானுங்க சோலிய முடிச்சற போறாங்க.. சூதானம் ராசா, சூதானம் !

# எச்சரித்தும் நடவடிக்கையில்லை

## ஆம்பூரில் சல்மான் அசாரியின் ஜிகாத் முழக்கம்

பால கௌதமன்

பாரதத்தின் மீது இறுதிப் போர் என்ற ஹதீஸ் மேற்கோளுடன் பிரச்சாரம். இன்று நாய்களின் காலம், நாளை நம் காலம்! இறுதிப் போர் வரயிருக்கிறது என்று ஜிகாதி வன்முறையைத் தூண்டி வரும் சல்மான் அஸாரி, நவம்பர் மாதம் ஆம்பூர் வரயிறுப்பதாகத் தெரிந்தவுடன், அவன் வரவால் ஏற்படும் ஆபத்தை விளக்கமாக ஸ்ரீ தமிழில் எழுதியிருந்தேன், ஸ்ரீ டிவியிலும் பேசியிருந்தேன். நவம்பர் நிகழ்ச்சி நடைபெறவில்லை.

டிசம்பர் 15, ஆம்பூரில் சல்மான் அசாரி உரையாற்றுவதாக அகல்-இ-சுன்னத் யூத் ஆம்பூர் மிலாத் கமிட்டி என்ற பெயரில் விளம்பரம் செய்யப்பட்டு, முப்தி சல்மான் அசாரி, டிசம்பர் 15 ஆம்பூரில் உரையாற்றினார். நாம் எச்சரித்ததைப் போலவே, கலவரத்தைத் தூண்டும் நோக்கம் கொண்டதாகவே இந்த உரை அமைந்திருந்தது.

உங்கள் வறுமையைப் பற்றி பயப்பட வேண்டாம். உலகம் முழுவதும் சக்திவாய்ந்தவர்கள் ஏழைகளைப் பார்த்து பயப்படுகிறார்கள்; காரணம், புரட்சிகளை உருவாக்கியவர்கள் பெரும்பாலும் ஏழைகள்தான். நபி (ஸல்) அவர்களின் தோழர்கள் மிகவும் ஏழைகளாக இருந்தார்கள். போரில் ஏற்பட்ட காயங்களுக்கு சிகிச்சை செய்யத் தேவையான சரியான உபாயங்கள் அவர்களிடம் இல்லை. பத்து தோழர்கள் சேர்ந்து ஒரு பேரீச்சம்பழத்தைப் பகிர்ந்து உண்டார்கள். இருந்தாலும் அவர்கள் ரோம மற்றும் பாரசீக பேரரசுகளை தோற்கடித்தார்கள். தங்கள் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும் தோழர்கள் போர்க்களத்திலிருந்து ஓடவில்லை.

> **உங்கள் எண்ணிக்கையைப் பற்றிய பயம் வேண்டாம், புரட்சி செய்யுங்கள், இந்தியாவை வெல்ல பல காலமாக முஸ்லீம்கள் போராடி வருகிறார்கள் என்று உணர்ச்சியைத் தூண்டும் விதமாகப் பேசினான். வழக்கம்போல், காவல்துறை நடவடிக்கை எடுக்கவில்லை.**

சலாஹுத்தீனின் படையில் வெறும் 16,000 வீரர்களே இருந்தார்கள்; ஆனால் கிறிஸ்தவ சிலுவைப் போராளிகளின் எண்ணிக்கை 4 லட்சமாக இருந்தது. சலாஹுத்தீன் தனது படையினரிடம் அவர்களது கருத்துகளை கேட்டார். அப்போது படைவீரர்கள், ரோம மற்றும் பாரசீக பேரரசுகளை தோற்கடித்த நபியின் தோழர்களைப் பற்றி அவருக்கு நினைவூட்டினார்கள். அதனால் உற்சாகமடைந்த அந்தப் படை கிறிஸ்தவர்களை வென்றது.

எண்ணிக்கையை மட்டுமே நம்பக் கூடாது. இன்று நாம் சிறுபான்மையினர் என்பதால், நிலைமை மோசமாக இருக்கிறது என்று சொல்லி அடங்கி நடக்க வேண்டும் என்று கூறப்படுகிறது. ஆனால் வரலாற்றில் இதே போன்ற சூழ்நிலைகளை நாம் ஏற்கனவே சந்தித்திருக்கிறோம்; அப்போது சிறுபான்மையாக இருந்த முஸ்லிம்கள் சக்திவாய்ந்தவர்களை தோற்கடித்தார்கள்.

பத்ரு, உஹுத், கந்தக், கைபர் போர்களின் போது முஸ்லிம்கள் சிறுபான்மை அளவிலேயே இருந்தார்கள். வலிமையான படைகளைப் பார்த்து அவர்கள் ஓடவில்லை; மாறாக போராடி வென்றார்கள். உண்மையான நம்பிக்கையாளர்கள் எண்ணிக்கையில் குறைவாக இருந்தாலும் ஒரு புரட்சியை உருவாக்க முடியும். அஹ்லுஸ் சுன்னத் தங்களது சிறுபான்மை நிலையைக் கண்டு பயப்படக் கூடாது.

நம்பிக்கையாளர்கள் சிலரே இருந்தாலும் அல்லாஹ் எப்போதும் அவர்களுக்கு அருள் புரிந்துள்ளார். பத்ரு, உஹுத், கந்தக் போர்களில் இஸ்லாமின் எதிரிகள் பெரும்பான்மையாக இருந்தனர்; முஸ்லிம்கள் சிறுபான்மையாக இருந்தபோதிலும் அவர்கள் வெற்றி பெற்றார்கள்.

இந்தியாவே ஒரு எடுத்துக்காட்டு. இந்தியா பல மகாராஜாக்களால் ஆட்சி செய்யப்பட்டது; அவர்களுக்கிடையே மோதல்கள் இருந்தன. கோரி இந்திய அரசர்களால் தோற்கடிக்கப்பட்டார். அவர் பின்னடைவில் இருந்தபோது சூஃபிகளை சந்தித்தார். இந்தியாவில் முகாமிட்டிருப்பதற்கான காரணம் என்ன என்று கேட்டார். அதற்கு சூஃபிகள், "இந்தியாவை வெல்லவே நாங்கள் வந்துள்ளோம்" என்று பதிலளித்தார்கள். கோரியின் படைவீரர்கள், தங்களுடைய வலிமையான படையே இந்தியாவை வெல்ல முடியாத நிலையில் இது எப்படி சாத்தியம் என்று ஆச்சரியப்பட்டார்கள். அப்போது சூஃபிகளில் ஒருவர், "நாங்கள் எண்ணிக்கையை அல்ல, தரத்தையே நம்புகிறோம்" என்று கூறினார்.







இவ்வாறு, உங்கள் எண்ணிக்கையைப் பற்றிய பயம் வேண்டாம், புரட்சி செய்யுங்கள், இந்தியாவை வெல்ல பல காலமாக முஸ்லீம்கள் போராடி வருகிறார்கள் என்று உணர்ச்சியைத் தூண்டும் விதமாகப் பேசினான். வழக்கம்போல், காவல்துறை நடவடிக்கை எடுக்கவில்லை. அவனது பேச்சை எடிட் செய்து வெளியிட்டனர் முஸ்லீம்கள். இந்த நிகழ்ச்சியை சையத் அலி அக்பர் ஹுசைனி ஏற்பாடு செய்திருந்தான். இதே சையத் அலி அக்பர் ஹுசைனி, மற்றொரு அடிப்படைவாதியான இஸ்ஹான் இக்பால் காதிரி என்பவனின் சொற்பொழிவை ஜனவரி 25, 2026 அன்று ஆற்காடில் ஏற்பாடு செய்துள்ளான். இஸ்ஹான் இக்பால் காதிரி, பாகிஸ்தான் அடிப்படைவாதியான தாஹிர் காதிரியை அண்மையில் மதீனாவில் சந்தித்தான். சல்மான் அசாரி பாகிஸ்தான் அடிப்படைவாதிகளை பாக்தாத்தில் சந்தித்ததை ஏற்கனவே விவரமாக ஸ்ரீ தமிழ் வெளியிட்டிருந்தது. இந்த சந்திப்பிற்குப்பின் சல்மான் அசாரி, தென் இந்தியாவில், கலவரத்தைத் தூண்டும் பேச்சுக்களை நிகழ்த்தி வருகிறான். இப்போது பாகிஸ்தான் அடிப்படைவாதிகள் சந்திப்பிற்குப்பின், தமிழகத்தில், சல்மான் அசாரியின் கூட்டத்தை ஏற்பாடு செய்த சையத் அலி அக்பர் ஹுசைனி, இஸ்ஹான் இக்பால் காதிரியின் கூட்டங்களை ஏற்பாடு செய்கிறான். தமிழகத்தில் அடிப்படைவாத ஜிஹாதிக் கருத்துக்களைப் பரப்பும் ஏஜெண்டாக உருவெடுத்துள்ளான் சையத் அக்பர் அலி ஹுசைனி.

இறைவனின் அருட்கொடையால் உருவானது பாகிஸ்தான் என்று பேசி வந்தவர் பீர் அஹமத் நக்ஷ்பந்தி. ஆபரேஷன் சிந்தூர் தாக்குதலின் போது, பாகிஸ்தான் சென்னையைத் தாக்கிவிட்டது என்று முழங்கிய புழுகுமூட்டை! இவர் டிசம்பர் 14, 2025 அன்று பாகிஸ்தானில் இறந்தார். சிஃபா-இ-சஹாபா பாகிஸ்தான், ஜெயிஷ்-இ-முகமத், லஸ்கர்-இ-ஜங்வி போன்ற பல பயங்கரவாத அமைப்புகள் தழைத்த பகுதி பாகிஸ்தானின் ஜாங். இந்த ஊரில் தான் இவர் பிறந்தார். இவர் மௌலானாவாக ஆனதும் இந்த ஊரிலேயே தான். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மூன்று இயக்கங்களும் தடை செய்யப்பட்டவை. இந்த பயங்கரவாதப் பின்னணிகொண்ட பீர் அஹமத் நக்ஷ்பந்தி மறைவுக்கு ஆம்பூரிலுள்ள மஸ்ஜித் ஹாஷிம் மற்றும் சென்னை திருவல்லிக்கேணி சயீதியா மஸ்ஜிதிலும் இரங்கல் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பெரியகுளம் பெண்கள் மதரஸா தலைவர் உஸ்தாத் பீர் முகமது, ஹதீஸை மேற்கோள்காட்டி, இந்தியாவைப் படையெடுக்க வேண்டும் என்று பேசியதற்கு அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பிரிவினைவாத, பயங்கரவாத மூளைச் சலவை அரசின் உதவியுடன் தமிழகத்தில் நடந்து வருகிறது என்பதை இந்த சம்பவங்கள் உறுதி செய்கின்றன.

டிசம்பர் 20 2025 அன்று திருநெல்வேலிக்கு விஜயம் செய்தார் முதல்வர் ஸ்டாலின். அச்சமயத்தில் தமிழக வாழ்வுரிமை கட்சியின் நிர்வாகியான முகமது யாசர் அராபத்தை தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்ற கழக நிர்வாகியான மேலப்பாளையம் கவுன்சிலர் ரசூல் மைதீனின் கூட்டம் கொலை வெறி தாக்குதல் நடத்திய வீடியோ இணையத்தில் வெளியானது. இந்த வீடியோவில் இடம்பெற்ற தேயிலை மைதீன் என்பவர் முதல்வரை சந்தித்தார். கொலை வெறி தாக்குதல் நடத்தியவர் முதல்வரையும் அதே நாளில் சந்திக்கிறார் என்றால் தமுமுகவின் வன்முறைக்கு கூட்டணி கட்சி திமுக அரசு ஆதரவு தருகிறதா! அல்லது இஸ்லாமிய அடையாளம் இருந்தால் முதல்வரை சந்திக்கலாம் என்ற கோட்பாட்டால் முதல்வரின் பாதுகாப்பு சமரசம் செய்யப்படுகிறதா?

# பாஜக உள்ளாட்சி தேர்தல்

## வெற்றியும், எச்சரிக்கையும்

- ராயன்

கேரளா, கோவா, மஹாராஷ்ட்ரா மற்றும் அருணாச்சல பிரதேச மாநிலங்களின் உள்ளாட்சி தேர்தல் முடிவுகள் அடுத்தடுத்து வெளியாகி அரசியல் களத்தில் சூட்டை கிளப்பியுள்ளது. இந்த 4 மாநில உள்ளாட்சித் தேர்தலிலும் பாஜக குறிப்பிடத் தகுந்த வெற்றியை பெற்றிருக்கிறது. ஒரு பக்கம் கட்சிக்கு மகிழ்ச்சியையும், எச்சரிக்கையும் தந்துள்ளது இந்த வெற்றி என்றால் மிகையில்லை.

**கேரளா:**

இரண்டு கட்டங்களாக நடந்த உள்ளாட்சித் தேர்தலில் UDF எனும் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி மிகப் பெரிய வெற்றியை பெற்று ஆளும் LDFக்கு அச்சத்தை தந்துள்ளது. அடுத்தாண்டு வரும் சட்டமன்ற தேர்தலின் முன்னோட்டமாக இது அமைந்திடுமோ என்ற பயம் காம்ரேடுகளுக்கு வர ஆரம்பித்து விட்டது.

**காவிக்கொடி பறக்குது:**

1980 முதல் தக்காரும் மிக்காருமில்லாமல் 5 தசாப்தங்களாக திருவனந்தபுரம் மாநகராட்சியில் கோலோச்சிய காம்ரேடுகள் இம்முறை மண்ணை கவ்வியுள்ளனர். அதிலும் கொள்கை எதிரியான பாஜகவிடம் தோற்றது இப்போது வரை ஜீரணிக்க முடியாமல் காம்ரேடுகள் தவிக்கின்றனர். 101 இடங்களில் 50 இடங்களை கைப்பற்றி பாஜக மாநகராட்சியை தன்வசப்படுத்தியிருப்பது, கேரள அரசியல் வரலாற்றில் குறிப்பிடத்தக்க மாற்றம். கேரளாவில் அரசியல் அதிகார காற்று காவிப்பக்கம் வீச ஆரம்பித்து விட்டதாகவே பலரும் பார்க்க



ஆரம்பித்திருக்கிறார்கள்.

மாநிலம் முழுவதும் கவனம் செலுத்துவதை விட குறிப்பிட்ட பகுதிகளில் திட்டமிட்டு கூடுதல் கவனம் கொடுத்து பணி செய்தால் வெற்றி கிடைக்காமலா போகும் என்று களமிறங்கி குறிப்பிட்ட இடங்களில் வெற்றியும் பெற்றுள்ளனர். 2020ல் இருந்த வாக்கு சதவீதம் குறையாமல் சில இடங்களில் கூடுதலாக கிடைத்திருப்பது பாஜகவிற்கு சாதகமாக அமைந்தது. தெற்கு மற்றும் மத்திய கேரளா ஹிந்துக்கள் பெரும்பான்மையாக உள்ள பகுதியில் கூடுதல் கவனம் கொடுத்து வாக்குகளை தங்கள் பக்கம் திருப்ப வீடு வீடாக ஏறி இறங்கி மக்களிடம் நேரடி சந்திப்பின் மூலம் மனமாற்றத்தை ஏற்படுத்தியதால் இந்த வெற்றி சாத்தியமானது என்கின்றனர். RSS இயக்க கட்டமைப்பு, பாஜக தொண்டர்களின் கடும் உழைப்பு நல்ல பலனை தந்துள்ளது. 5 வருடங்களுக்கு முன்பு வரை ஒரு முனிசிபல் பதவிகளில் கூட இல்லாமல் இருந்த பாஜக இப்போது இரண்டு இடங்களில் அதிலும் மிக முக்கியமாக திருப்புனித்துரா நகராட்சி யை கைப்பற்றியது. திருவனந்தபுரம், திருச்சூர் மற்றும் பாலக்காடு ஆகியவற்றின் ஆதிக்கம் மூலம் அறிய முடிகிறது.

**சரிந்த கம்யூனிச கோட்டைகள்**

2020ல் 6 க்கு 5 மாநகராட்சிகளில் கொடி நாட்டிய LDF தற்போது ஒரே ஒரு மாநகராட்சி கோழிக்கோடுடன் சுருண்டு விட்டது. அதுமட்டுமல்லாமல் 2020ல் 43 முனிசிபாலிட்டியை தன்வசம் வைத்திருந்த LDF இம்முறை 28 உடன் சுருங்கியது. 25 வருடங்களாக கொல்லத்தில் கோலோச்சிய கம்யூனிஸ்ட்கள் 15 இடங்களில் UDF வெற்றி பெற்றதன் மூலம் சாம்ராஜ்யம் சரிந்ததுள்ளது. கேரளாவின் தலைநகரை பாஜகவிடம் பறிகொடுத்த LDF வணிகத் தலைநகரான கொச்சியில் 22 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றது. UDF 47 இடங்களில் வெற்றி பெற்று காம்ரேடுகளின் முகத்தில் கரியை பூசியது.

**தோல்விக்கான காரணங்கள்:**

பினராயி விஜயன் தலைமையில் தொடர்ந்து இருமுறை ஆட்சியில் இருந்தும் கம்யூனிஸத்திற்கு ஏன் இந்தச் சரிவு என கட்சி மட்டத்தில் சுயபரிசோதனை நடந்து வருவது ஒரு பக்கம் என்றால் சில மூத்த அரசியல் கட்டுரையாளர்கள்

சொல்வது என்னவெனில் காம்ரேடுகளின் Soft Hindutva செல்லுபடியாகவில்லை என்கின்றனர். அக்மார்க் செக்குலர் கட்சி என நம்பிய வட கேரள முஸ்லீம்கள் ஐயப்பன் சங்கமம் மாநாடு நடத்தியதும், காங்கிரஸ் கூட்டணியை லீக் அல்லயன்ஸ் என பினராயி குறிப்பிட்டது, முஸ்லீம்கள் எதிர்த்த PM ஸ்ரீ பள்ளிகள் திட்டத்தை சமீபத்தில் ஏற்றுக் கொண்டது முஸ்லீம்களின் வெறுப்பை சம்பாதித்ததாக சொல்லப்படுகிறது. இதனால் மலப்புரத்தை காங்கிரஸிடம் இழந்தனர். அதே போல சபரிமலை தங்கத் திருட்டு ஹிந்துக்கள் மத்தியில் காம்ரேடுகளுக்கு கெட்டப்பெயர் ஏற்பட்டதும் UDFக்கு ஜாக்பாட் அடித்தது போல ஆகிவிட்டது.

**2026 சட்டமன்ற தேர்தல் முடிவு :**

1,200 உள்ளாட்சிகளில் 2,300 வார்டுகளை கைப்பற்றிய UDF மகத்தான வெற்றியை பதிவு செய்ததன் மூலம் வரும் சட்டமன்ற தேர்தலுக்கான முன்னோட்டமாக இது அமையும் என காங்கிரஸ் நினைக்கிறது. மும்முனைப் போட்டி நடக்கும் நிலையில் பாஜக 16-18% சதவீத ஓட்டுகளை கைப்பற்றினால், கண்டிப்பாக வரும் சட்டமன்ற தேர்தலில் UDF வெற்றி சாத்தியக்கூறுகள் அதிகம் என்றே கருதுகின்றனர். 2024 பாராளுமன்ற தேர்தலில் 11 சட்டமன்ற தொகுதிகளில் பாஜக கணிசமான வாக்குகளை பெற்று முதலிடத்திலும், 9 இடங்களில் இரண்டாவது இடமும் பிடித்தது. இந்த சட்டமன்ற தொகுதிகளை மட்டும் கவனத்தில் கொண்டு திருவனந்தபுர மாநகராட்சி தேர்தலில் பணியாற்றியது போல திட்டமிட்டால் வரும் சட்டமன்ற தேர்தலில் பாஜக ஒரு தவிர்க்க முடியாத சக்தியாக உருவாகும் என கணிக்கின்றனர்.

**அருணாச்சல பிரதேசம்:**

டிசம்பர் 21ல் அருணாச்சல பிரதேச ஜில்லா பரிஷத் தேர்தல் முடிவுகள் வெளியானது. 245 / 170 இடங்களில் பாஜக (இதில் 59ல் போட்டியின்றி) வெற்றி பெற்றுள்ளது. பீப்பிள்ஸ் பார்டி ஆஃப் அருணாச்சல் 28 இடங்களிலும் நேஷனல் பீப்பிள்ஸ் பார்டி 5 மற்றும் சுயேட்சைகள் 23 இடங்களிலும் வெற்றி பெற்றனர்.

மொத்தமுள்ள 8,208 கிராம பஞ்சாயத்துகளில் பாஜக 6,085 (இதில் 5,211 போட்டியின்றி) தேர்வாகியுள்ளனர். PPA - 648,NPP -160 சுயேட்சைகள் 627 பஞ்சாயத்துகளில் வெற்றி பெற்றுள்ளனர். இடாநகர் முனிசிபல் கார்ப்ரேஷன் தேர்தலில் 20 ல் 16 வார்டுகளில் பாஜகவும், பாசிகட் முனிசிபலில் ( PMC) பாஜக -2, PPA-5, சுயேட்சை 1லும் வெற்றி பெற்றுள்ளனர். இந்த இரண்டு முனிசிபலிலும் காங்கிரஸ் ஒரு இடத்தில் கூட வெற்றி பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



**மஹாராஷ்ட்ரா:**

மஹாராஷ்ட்ரா உள்ளாட்சி தேர்தல் முடிவுகள் வெளியானவுடன் உத்தவ்,காங்கிரஸ் கூட்டணி தேர்தல் ஆணையத்தை குறை சொல்ல ஆரம்பித்தனர். 288 முனிசிபல் கௌன்சில் நகர்பாலிகா பஞ்சாயத்தில் பாஜக மஹாயுத்தி கூட்டணி 207 இடங்களிலும் மஹாவிகாஸ் அகடி 44 இடங்களிலும் வெற்றி பெற்றன. இதில் பாஜக - 117, ஷிண்டே சிவ சேனா 53, அஜித்பவார் NCP 37, காங்-28 NCP(கு)-7 UBT-9 இடங்களில் வெற்றி பெற்றன. பாஜக 48% சதவீத வாக்குகளை தக்க வைத்திருப்பது பாஜகவின் முதல்வர்,பிரதமரின் வளர்ச்சி அரசியலின் விளைவு என சொல்லப்படுகிறது. மினி அசெம்ப்ளி தேர்தல் எனச் சொல்லப்படும் மும்பை,புனே,தானே மற்றும் நாக்பூர் மாநகராட்சி தேர்தல் அடுத்தகட்டமாக நடக்க உள்ளது. இதிலும் பாஜக வெற்றிக்கொடி நாட்டுமா? கூட்டணிக்கு அரசியல் கணக்குகள் மாறுமா? பொறுத்திருந்து பார்ப்போம்.

**கோவா:**

ஜில்லா பரிஷத் தேர்தலில் 50ல் 23 இடங்களில் பாஜக, காங்-9 AAP-1 சுயேட்சைகள் வெற்றி பெற்றுள்ளனர். சென்றமுறை 33 இடங்களிலிருந்து 23 என குறைந்திருந்தாலும் எதிர்க்கட்சிகள் பிரிந்து போட்டியிட்டதால் மட்டுமே பாஜக தப்பித்துள்ளது. தனிநபர்களை சார்ந்திருப்பது,ஊழல் குற்றச்சாட்டு இதெல்லாம் பாஜகவிற்கு வருங்காலங்களில் பாதகமாக அமையலாம் என சொல்லப்படுகிறது.

மக்களுடன் தொடர்பில் இருக்கும் உள்ளாட்சி பிரதிநிதிகள் செய்யும் நல்ல பணிகளும், லஞ்சம், கமிஷன் என முறைகேடாக செயலால் நேரடியாக பாதிக்கப்படுவது கட்சி தான். மத்தியில் பாஜக ஆட்சி செய்தாலும் டெல்லியை ஆள இரண்டு முறை ஏன் ஆம் ஆத்மிக்கு மக்கள் வாக்களித்தார்கள் என ஆராய்ந்தால் பாஜக எந்தளவு எச்சரிக்கையுடன் செயலாற்ற வேண்டும் என புரியும்.

புரிந்து செயல்படுவார்களா? பார்ப்போம்.

# புத்தாண்டு கொண்டாட்டத்திற்கு செக் வைத்த இஸ்லாமிய பயங்கரவாதம்!

ராமகிருஷ்ணன்

புத்தாண்டை கோலாகலமாக வரவேற்க உலகம் தயாராகிறது!

இந்த கிறிஸ்தவ புத்தாண்டு தொடக்கத்தைக் கொண்டாட மக்கள் மனதை தயார்படுத்தும் நரேட்டிவ் செட்டிங்கை ஊடகங்கள் ஆண்டு தோறும் செய்வார்கள்!

எவ்வளவு பட்டாசு, எவ்வளவு வானவேடிக்கைகள், எவ்வளவு மதுபானம், எவ்வளவு கிலோ கேக், ஆர்பாரிக்கும் மக்கள் கூட்டம் எவ்வளவு என்றெல்லாம் பல டிரெய்லர்களையும் வெளியிடுவார்கள்.

இந்த ஆண்டு இவர்கள் எல்லாம் அமைதியாகி விட்டார்கள். ஏன்?

கிறிஸ்தவ புத்தாண்டை வரவேற்கும் முதல் பெரிய நிகழ்வு என்று அறியப்படுவது சிட்னி புத்தாண்டு கொண்டாட்டங்கள்.. வண்ண வண்ண வானவேடிக்கைகளுடன் ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம் என இந்த விழா ஜொலிக்கும். இதை வேடிக்கைப் பார்ப்பதற்காக பல நாடுகளிலிருந்து சிட்னிக்குச் செல்வார்கள். இலட்சகணக்கானோர் இதை நேரலையில் கண்டு களிப்பார்கள். இந்த சிட்னி நகரில் அமைந்துள்ள போண்டி கடற்கரையில் 15,000 பேர் கலந்துகொள்ளும் அளவிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த புத்தாண்டுக் கொண்டாட்டம் இந்த ஆண்டு ரத்து செய்யப்பட்டுள்ளது.

டிசம்பர் 14 2024 அன்று ஆஸ்திரேலியாவில் உள்ள போண்டி கடற்கரையில் யூதர்கள் அவர்களது மத மரபான ஹனுக்காவை கொண்டாடினார்கள். முதியவர்கள், பெண்கள், குழந்தைகள் என 1000 நபர்கள் குழுமியிருந்தனர். அப்போது அங்கு வந்த சஜீத் அக்ரம் என்பவனும், அவன் மகன் நவீத் அக்ரம் என்பவனும் துப்பாக்கியால் சரமாரியாக சுடத் தொடங்கினார்கள். இந்த துப்பாக்கிச் சூட்டில் ஒரு குழந்தை உட்பட 15 பேர் இறந்தனர். இந்த தாக்குதலை நடத்தியவன் தெலுங்கானா தலைநகர் ஹைதராபாத்திலிருந்து ஆஸ்திரேலியாவிற்கு குடி சென்றவன். இவனது அடையாளம் வெளிபட்டவுடன் அவன் இங்கு வருவதே இல்லை என்று அவன் குடும்பத்தினர் பேட்டி கொடுத்தனர். ஆனால் அவன் இந்தியா வந்து சென்றான் என்பதை விசாரணைகள் உறுதிபடுத்தியுள்ளது. மேலும், அவனுடன் தொடர்பில் உள்ள நபர்கள், அமைப்புக்கள் ஆகியவற்றை கண்டறிய இந்திய பாதுகாப்பு அதிகாரிகள் முற்பட்டுள்ளனர் என்ற செய்தி வருகிறது. யூதமதத்தினரை குறி வைத்து நடத்தப்பட்ட தாக்குதல் இது.

இது போலவே 2023 ஆண்டு அக்டோபர் 7 அன்று இஸ்ரேலில் சுக்கோத் என்ற யூத விழாவில் ஹமாஸ் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினார்கள். அந்த தாக்குதலைக் கண்டிக்காதவர்கள் இஸ்ரேலிய இராணுவம் ஹமாஸ்க்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் போது முஸ்லீம்களுக்கு எதிரான வன்முறை என்று ஒப்பாரி வைத்தனர்!

இதே ஆஸ்திரேலியாவில் ஹிந்து கோவில்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த தாக்குதல்களை காலிஸ்தான் பயங்கரவாதிகள் செய்தார்கள். பின்னணியில் இருந்து செயல்பட்டவர்கள் இஸ்லாமிய பயங்கரவாதிகள்! 2025ம் ஆண்டு பிற்பகுதியில் ஆஸ்ரேலியாவின் பல நகரங்களில் இந்தியர்களுக்கு எதிரான பேரணி நடைபெற்றது. இதை தடுக்க அந்த நாட்டை ஆளும் லிபரல் சித்தாந்த அரசு எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

வங்கதேசத்தில் ஹிந்துக்கள், கிறிஸ்தவர்கள், பௌத்தர்களுக்கு எதிரான இஸ்லாமிய வன்முறையை கண்டிக்க லண்டனில் நடந்த போராட்டத்தில் புகுந்து காலிஸ்தான் பிரிவினைவாதிகள் தாக்குதல் நடத்தினர். இச்சம்பவங்கள் இஸ்லாமிய பயங்கரவாதிகளும், காலிஸ்தான் பயங்கரவாதிகளும் இணைந்து செயல்படுகிறார்கள் என்பதை உறுதி செய்கிறது.

ஐரோப்பிய நாடான பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் புத்தாண்டு கோலாகலமாக கொண்டாடப்படும். இந்த கொண்டாட்டத்திற்கு சேம்ஸ் எலிஸீஸ் கொண்டாட்டம் என்று பெயர். இது ஐரோப்பாவின் அடையாள கொண்டாட்டமாக கருதப்படுகிறது. இந்த கொண்டாட்டத்தை பாரீஸ் மேயர் ரத்து செய்துள்ளார். பிரான்ஸில் குடியேறிய இஸ்லாமியர்கள் கொண்டாட்டகாரர்கள் மீது தாக்குதல் நடத்துவார்கள் எனவே விழாவை ரத்து செய்ய வேண்டும் என்ற காவல்துறையின் அறிவுறுத்தலின் பெயரில் இந்த விழா ரத்து செய்யப்பட்டுள்ளது.

ஜெர்மனியில் கிறிஸ்மஸ் மற்றும் நியூ இயர் சந்தைகள் மிகவும் பிரபலம். இதில் பல சந்தைகள்





இந்த ஆண்டு இடம் பெறாது என்ற அறிவிப்பு வந்துள்ளது. இதற்கு வெவ்வேறு காரணங்கள் சொல்லப்பட்டாலும் இஸ்லாமிய பயங்கரவாதிகளின் அச்சுறுத்தலும் சில இடங்களில் இருப்பதாக அறியப்படுகிறது. ஆஸ்திரேலியா, பிரான்ஸ், ஜெர்மனி போன்ற நாடுகள் அவைகளின் அடையாளங்களை இழந்து வருகின்றன. இஸ்லாமிய பயங்கரவாதத்திற்கு பயந்து இந்நாடுகள் புத்தாண்டு கொண்டாட்டங்களை ரத்து செய்துள்ளன. இந்த நிகழ்வுகளை ரத்து செய்த நாடுகள் லிபரல் கொள்கைகளை கொண்ட கட்சி களால் ஆளப்படுகின்றன. லிபரல் கொள்கை என்ற பெயரில் தேசியத்திற்கு எதிராகவும், பாரம்பரியத்திற்கு எதிராகவும் அந்நிய குடியேற்றதால் ஏற்படும் ஆபத்துக்களை புறந்தள்ளி இந்த நாட்டு மக்களை பலி பீடத்தில் ஏற்றுகின்றனர் ஆட்சியாளர்கள்.

**ஐரோப்பிய நாடான பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் புத்தாண்டு கோலாகலமாக கொண்டாடப்படும். இந்த கொண்டாட்டத்திற்கு சேம்ஸ் எலிஸீஸ் கொண்டாட்டம் என்று பெயர். இது ஐரோப்பாவின் அடையாள கொண்டாட்டமாக கருதப்படுகிறது. இந்த கொண்டாட்டத்தை பாரீஸ் மேயர் ரத்து**

லிபரல் ஆட்சியே இப்படி இருந்தால் இஸ்லாமிய அடிப்படைவாதிகள் கட்டுப்பாட்டில் இருக்கும் நாடுகள் எப்படி இருக்கும்?

வங்கதேச தலைநகர் டாக்காவிலிருந்து 120 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பரித்பூர் என்ற ஊரில் பிரபல இசைக் கலைஞர் ஜேம்ஸ்ன் இசை கச்சேரி போலீஸ் அனுமதியுடன் நடந்து வந்தது. இசை இஸ்லாத்திற்கு விரோதமானது என்று இஸ்லாமிய அடிப்படைவாதிகள் தாக்குதல் நடத்தினர். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட இளைஞர்கள் தாக்கிய இஸ்லாமிய அடிப்படைவாதிகள் மீது எதிர் தாக்குதல் நடத்தினர். எதிர் தாக்குதல் நடத்தியவுடன் அங்கு வந்த போலீசார் நிகழ்ச்சியை ரத்து செய்ய உத்தரவிட்டனர். அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற முகமது யூனஸ் ஒரு லிபரல் என அறியப்படுபவர்!

எங்கெல்லாம் இஸ்லாமியர்களால் நேரடியாக ஆதிக்கம் செலுத்த முடியாதோ அங்கெல்லாம் லிபரல் சித்தாந்தவாதிகளை அடிப்படைவாதிகள் திறமையாக பயன்படுத்துகின்றனர். பண்பாட்டை, விழுமியங்களை, தேச அடையாளங்களை அழிக்க இடதுசாரிகளும் இஸ்லாமிய அடிப்படைவாதிகளும் இணைந்து செயல்படுகிறார்கள்!

GenZ போராட்டம், மக்கள் புரட்சி என்று ஆட்சிமாற்றம் ஏற்பட்ட நாடுகள் எதுவும் பொருளாதார முன்னேற்றமும் காணவில்லை, பாதுகாப்பாகவும் இல்லை. இந்நாடுகளில் அடிப்படைவாதமும், அரசியல் ஸ்திரதன்மையின்மையுமே வலுப்பெற்றுள்ளது. இந்தப் போராட்டங்களை சுட்டிக் காட்டுவது, இவைகளை முன்மாதிரியாக கொள்ள வேண்டும் என்று பரப்புரை செய்வது நாட்டின் ஒற்றுமைக்கும், ஒருமைபாட்டிற்கும் குந்தகம் விளைவிக்கும் சதியின் அங்கம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்!

ஆஸ்திரேலியா, ஐரோப்பாவை போல் நம் நாட்டில் அடையாள அழிப்பு நடைபெறாமல் இருக்க பொதுமக்களும், அரசும் விழிப்புடன் செயல்பட வேண்டும். மதத்தின் அடிப்படையில் பயங்கரவாத தாக்குதலை முஸ்லீம் நடத்தினால் அமைதியாக இருந்து விட்டு தாக்குதல் நடத்திய இஸ்லாமிய பயங்கரவாதிகள் மீது நடவடிக்கை எடுக்கும் போது மனித உரிமை, இஸ்லாமோபோபியா என்று கருத்தியலை உருவாக்கி பயங்கரவாதிகளை பாதிக்கப்பட்டவர்களாக சித்தரிக்கின்றனர்.

இதனால், இஸ்லாமிய பயங்கரவாதம் உலகம் முழுவதும் வலுபெற்று வருகிறது. இந்த கருத்தியலுக்கு பயந்து இஸ்லாமிய பயங்கரவாதத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்க அரசுகள் தயங்குகின்றன. இஸ்லாமிய பயங்கரவாதம் என்பது கற்பனை என்ற அளவிற்கு மக்கள் மூளைச்சலவை செய்யப்படுகிறார்கள்.

***இதை உறுதியாக எதிர்கொள்ள தவறினால் உலகம் பேரழிவை சந்திக்கும்!***

# செய் சிந்த

**செய்தி:**

**கடன் சுமையில் உத்திரபிரதேசத்தை மிஞ்சிய தமிழகம் கனிமொழிக்கு காங்கிரஸ் பிரவின் சக்ரவர்த்தி பதில்**

**சிந்தனை**

உத்திரபிரதேசத்தில் யோகியின் சிறப்பான ஆட்சி. தமிழக்கத்திலோ கடன் வாங்கியும் வளர்ச்சி பணிகளில் தொய்வு. இது ஊழலின் அடையாளம். பழனிவேல் தியாகராஜன் ஆடியோ சர்ச்சையில் தொடர்புடையவர் பிரவின் சக்ரவர்த்தி. திமுகவிடம் பேரம் பேச அடிக்கும் ஸ்டண்ட்.!

**செய்தி:**

**சி டெட் தேர்வு விண்ணப்பம் பூர்த்தி செய்ய திணறிய ஆசிரியர்கள்**

**சிந்தனை**

தமிழகத்தின் கல்வி தரம் குன்றுவதற்கான பல காரணங்களில் ஆசிரியர்களின் திறனின்மையும் ஒரு காரணி. ஆசிரியர் தகுதி தேர்வு கூடாது என்று மறுப்பதற்கு இவர்களின் திறனின்மையே காரணம்! தமிழகத்தின் எதிர்காலம் என்னவாகும்? என்ற கவலையை ஏற்படுத்தும் செய்தி

**செய்தி:**

**தூய்மை பணியாளர்களுக்கான காலை உணவு நிறுத்தம் - திமுகவினர் மீது கடுங்கோபம்**

**சிந்தனை**

தூய்மை பணியாளர் போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வர செட் அப் வழக்கு போட்டது தமிழக அரசு. கொடுத்த வாக்குறுதிகளை மதிக்காமல் ஏமாற்றும் அரசு. பட்டியலினத்தின் மீதுள்ள வன்மத்தை அமல்படுத்தும் திராவிடம்.

**செய்தி:**

**நெல்லையில் ஸ்டாலின் வரு**
**திருவிழாவை நிறுத்த காவல்து**
**அதிர்ச்சி**

**சிந்தனை**

திமுக அரசின் ஹிந்து வெ
கொண்டாட்டத்திற்குச் சென்
பூக்குழி திருவிழா நிறுத்தப்ப
ஹிந்துக்களை அவமதிக்கும் நே

**செய்தி:**

**உத்திரபிரதேச ஷாஜ**
**மதமாற்ற நெட்வொ**
**ரஸுக்கு தொடர்பா**

**சிந்தனை**

ஹிந்து தெய்வங்
பிரச்சாரத்தில் ஈ
தண்டனை
காப்பாற்றிய
சட்டவிரோத நட
உலகம் முழுவது
உருவாக்கும் தளம

# திகள்
# னைகள்

**செய்தி:**

**திருவான்மியூர் வரசித்தி விநாயகர் கோயில் இடிக்க முயற்சி - பக்தர்கள் எதிர்ப்பு**

**சிந்தனை**

ஹிந்து கோவில்களை இடிக்க காரணங்களைக் கண்டுபிடித்து செயல்படுத்தி வருகிறது தமிழக அரசு. அடக்குமுறைக்கு எதிராக ஹிந்துக்கள் விழித்துக்கொள்ள தொடங்கி விட்டனர்.

**கையால் ஸ்வாமி ஐயப்பன் பூக்குழி**
**துறை கெடுபிடி; ஐயப்ப பக்தர்கள்**

றுப்பின் உச்சம் இது! கிறிஸ்மஸ்
ற ஸ்டாலினுக்காக ஐயப்பன்
டுவது கிறிஸ்தவ ஓட்டுக்களுக்காக
நாக்கமே!

**ஹான்பூர் கிறிஸ்தவ**
**ார்க்கில் மோகன் லாச**
**?**

களை இழிவுபடுத்தி தொடர்
டுபட்டு வரும் லாசரஸ்க்கு
கொடுக்காமல்
நீதிமன்றம் இந்த
படிக்கைக்கு பொறுப்பேற்குமா?
நம் மதமாற்ற நிபுணர்களை
ாக தமிழகம் மாறியிருக்கிறது.

**செய்தி**

**புதிய ஹஜ் இல்லத்திற்கு அடிக்கல் நாட்டிய ஸ்டாலின்**

**சிந்தனை**

சென்னை ரிப்பன் பில்டிங் அருகாமையில் ஏற்கன்வே ஒரு ஹஜ் இல்லம் இருக்க புதிய ஹஜ் இல்ல்த்திற்கு தேவை என்ன? விமானநிலையம், தேசிய பாதுகாப்பு கழகம் மற்றும் இராணுவ கண்டோன்மெண்ட் அருகில் ஹஜ் இல்லம் அமையவிருப்பது தேசிய பாதுகாப்பிற்கு ஊறுவிளைக்கும்! கட்டிடங்களுக்குத் தடைசெய்யப்பட்ட பகுதியில் கட்டப்படுவது சட்ட மீறல்.

**செய்தி**

**சேலத்தில் நீதிமன்ற உத்தரவை மதிக்காத தாசில்தார் நாகூர் மீராஷா நீதிமன்றம் வெச்ச பலமான ஆப்பு**

**சிந்தனை**

சட்டவிரோதமாக தீவட்டிபட்டியில் அரசு நிலத்தில் மசூதி கட்ட உதவியதற்கு வழக்கு நிலுவையில் உள்ளது. பல நீதிமன்ற அவமதிப்பு வழக்குகள் இவர் மேல் உள்ளன. இவர் வாடிக்கை குற்றவாளி

# கடல்களை வெல்லும் இந்தியாவின் K4 நீர்மூழ்கி கப்பல் ஏவுகணை

N.C. பிபிந்தரா

ஐஎன்எஸ் அரிகாத் அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து, 3,500 கிமீ தூரம் வரை பாயும் K-4 நீர்மூழ்கிக் கப்பல் ஏவுகணை (SLBM) சோதனையை இந்தியா சமீபத்தில் நடத்தியுள்ளது. அதிகாரப்பூர்வமாக இது பெரிய அளவில் விளம்பரப்படுத்தப்படவில்லை என்றாலும், இதன் மூலோபாயத் தாக்கம் மிகவும் ஆழமானது.

விசாகப்பட்டினம் கடற்கரைக்கு அப்பால் வங்காள விரிகுடாவில் நடத்தப்பட்ட இந்தச் சோதனை, பிராந்திய மற்றும் உலகளாவிய ஸ்திரமற்ற நிலைக்கு மத்தியில், இந்தியா இதுவரை கண்டிராத நீர்வழி, வான்வழி, தரைவழியே தொடுக்கும் அணுசக்தி தாக்குதல் திறனை அடைந்துள்ளது. தற்காப்புத் திறன் கொண்ட கடல்வழித் தடுப்பாற்றலை வலுப்படுத்தும் இந்தியாவின் உறுதியான முயற்சியை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

பாதுகாப்பு அமைச்சகத்தின் அடையாளம் தெரியாத அதிகாரிகளின் கூற்றுப்படி, திட எரிபொருளால் இயங்கும் இரண்டு நிலைகளைக் கொண்ட K-4 ஏவுகணை, 6,000 டன் எடையுள்ள இந்தியாவின் இரண்டாவது அணுசக்தி ஏவுகணை நீர்மூழ்கிக் கப்பலான (SSBN) ஐஎன்எஸ் அரிகாத்-திலிருந்து ஏவப்பட்டது.

சுமார் 3,500 கிமீ தூரம் வரை இரண்டு டன் வரையிலான அணுசக்தி ஆயுதங்களைச் சுமந்து சென்று துல்லியமாக தாக்கும் திறன் கொண்ட K-4 ஏவுகணை, இந்தியாவின் நீருக்கடியிலான தாக்குதலின் எல்லையை கணிசமாக விரிவுபடுத்துகிறது. பாதுகாப்பு அமைச்சகம் இது குறித்து அதிகாரப்பூர்வ அறிக்கை எதையும் வெளியிடவில்லை என்றாலும், இந்தியாவின் மிகவும் ரகசியமான மூலோபாயப் படைகளின் கட்டளை (Strategic Forces Command) நடவடிக்கைகளில் இத்தகைய மௌனம் இயல்பானதே.

**K-4 ஏவுகணை இந்திய நீர்மூழ்கிக் கப்பல்கள் பாது காப்பாக ஆழ்கடலில் இருந்து கொண்டே முக்கிய இலக்குகளைத் தாக்க வழிவ குக்கிறது. இது நீர்மூழ்கிக் கப்பலின் பாதுகாப்பையும், அணுசக்தி தாக்குதலுக்குப் பின் பதிலடி தாக்குதல் கொடுக்கும் திறனையும்** (Second-strike credibility) **வியத்தகு முறையில் மேம்படுத்துகிறது.**

முக்கியமாக, K-4 என்பது வெறும் ஏவுகணைச் சோதனை மட்டுமல்ல, அது இந்தியாவின் திறனை மேம்படுத்தும் ஒரு கருவியாகும். இதுவரை இந்தியாவின் முதல் அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பலான ஐஎன்எஸ் அரிகந்த் (INS Arihant), 750 கிமீ தூரம் மட்டுமே செல்லக்கூடிய K-15 ஏவுகணைகளை ஏவும் வசதி கொண்டிருந்தது.

அந்தக் குறை பாட்டினால் இந்திய நீர்மூழ்கிக் கப்பல்கள் எதிரி நாடுகளின் கடற்கரைக்கு அருகிலேயே ரோந்து செல்ல வேண்டியிருந்தது, இதனால் அவை எளிதாக தாக்குதலுக்கு உள்ளாகும் அபாயம் இருந்து வந்தது. இதற்கு நேர்மாறாக, K-4 ஏவுகணை இந்திய நீர்மூழ்கிக் கப்பல்கள் பாதுகாப்பாக ஆழ்கடலில் இருந்துகொண்டே முக்கிய இலக்குகளைத் தாக்க வழிவகுக்கிறது. இது நீர்மூழ்கிக் கப்பலின் பாதுகாப்பையும், அணுசக்தி தாக்குதலுக்குப் பின் பதிலடி தாக்குதல் கொடுக்கும் திறனையும் (Second-strike credibility) வியத்தகு முறையில் மேம்படுத்துகிறது.

இந்தச் சோதனையானது K-4 ஏவுகணை தயாரிப்பு நிலையிலிருந்து செயல்பாட்டுத் தயார்நிலைக்கு மாறுவதைக் குறிக்கிறது. கடந்த சில ஆண்டுகளில் தண்ணீருக்கு அடியில் உள்ள மிதவைகளில் இருந்து பலமுறை ஏவப்பட்ட பிறகு, கடந்த ஆண்டு

நவம்பரில் ஐஎன்எஸ் அரிகாத்-திலிருந்து இந்த ஏவுகணை முதன்முதலில் சோதிக்கப்பட்டது.

டிசம்பர் 24, 2025 அன்று நடத்தப்பட்ட இந்த ஏவுதல், இறுதிச் சரிபார்ப்புச் சுழற்சியின் ஒரு பகுதியாகத் தெரிகிறது. இருப்பினும், நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து ஏவப்படும் ஏவுகணைகள் முழுமையாகச் செயல்பாட்டுக்கு வருவதற்கு முன்பு இன்னும் சில வெற்றிகரமான சோதனைகள் தேவை என்று நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.

கடந்த ஆண்டு ஆகஸ்ட் 29 அன்று நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்ட இந்த நீர்மூழ்கிக் கப்பல், இந்தியாவின் 'மேம்பட்ட தொழில்நுட்பக் கப்பல்' (ATV) திட்டத்தின் இரண்டாவது படியாகும். இந்த தொழில்நுட்ப வளர்ச்சியில் ஐஎன்எஸ் அரிகாத் முக்கியப் பங்கு வகிக்கிறது. ஐஎன்எஸ் அரிகாத் அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பலை உள்நாட்டிலேயே உருவாக்க 90,000 கோடி ரூபாய்க்கும் அதிகமான செலவில் பல தசாப்தங்களாக மேற்கொள்ளப்பட்டு வரும் ஒரு முயற்சியாகும்.

**ஐஎன்எஸ் அரிகாத் அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பலை உள்நாட்டிலேயே உருவாக்க 90,000 கோடி ரூபாய்க்கும் அதிகமான செலவில் பல தசாப்தங்களாக மேற்கொள்ளப்பட்டு வரும் ஒரு முயற்சியாகும்.**

இத்திட்டம் அடுத்த கட்டத்தை எட்டியுள்ளது. இந்தியா தனது மூன்றாவது அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பலான ஐஎன்எஸ் அரிதமன் (INS Aridhaman)-ஐ 2026-ன் தொடக்கத்திலும், நான்காவது கப்பலை 2027-28-க்குள்ளும் செயல்பாட்டுக்குக் கொண்டுவரத் திட்டமிட்டுள்ளது. இந்த புதிய நீர்மூழ்கிக் கப்பல்கள் 7,000 டன் எடை கொண்டதாக இருக்கும். தற்போது பயன்பாட்டில் இருக்கும் அரிகந்த் மற்றும் அரிகாத் 6000 டன் எடை கொண்டது.

இனி வர இருக்கும் காலங்களில், இந்தியா 13,500 டன் எடையுள்ள மிகப் பெரிய அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்களை உருவாக்கத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிகிறது. இவை 190 MW pressurized light-water reactors-ஐ கொண்டிருக்கும். இது முதல் நான்கு கப்பல்களில் பயன்படுத்தப்பட்ட 83 MW pressurized light-water-ஐ விட அதிக தொழில்நுட்பத்தை கொண்டதாக இருக்கும்.



இத்தகைய நீர்மூழ்கிக் கப்பல்கள் அதிக காலம் கடலில் இருக்கும் திறன், அதிக வேகம் மற்றும் அதிக தூரம் செல்லக்கூடிய ஏவுகணைகளைச் சுமந்து செல்லும் திறனைக் கொண்டிருக்கும். இந்த முன்னேற்றங்கள் இருந்தபோதிலும், நீர்மூழ்கிக் கப்பலின் அளவு, ஏவுகணை வீச்சு மற்றும் எண்ணிக்கை ஆகியவற்றில் அமெரிக்கா, ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகளை விட இந்தியா இன்னும் பின்தங்கியே உள்ளது. இருப்பினும், நீர்மூழ்கி கப்பலிலிருந்து ஏவப்படும் ஏவுகணை K-4ன் பயன்பாடு மற்றும் எதிர்காலத்தில் 5,000-6,000 கிமீ தூரம் செல்லக்கூடிய நீர்மூழ்கி கப்பலிலிருந்து ஏவப்படும் ஏவுகணை K-5 மற்றும் K-6 இந்த இடைவெளியைக் குறைக்க உதவும்.

இந்த வகையான நீர்மூழ்கி கப்பலிலிருந்து ஏவப்படும் ஏவுகணைகள், வல்லரசுகளின் கண்டம் விட்டு கண்டம் பாயும் அணுசக்தி ஏவுகணைகளுக்கு (ICBM) இணையாக இல்லாவிட்டாலும், ஆபத்து காலத்தில் பிராந்திய எதிரிகளை எதிர்கொள்ள இவை போதுமானவை.

முக்கியமாக, இந்தியாவின் அணுசக்தித் தடுப்பாற்றல் தரைவழியிலும், வான்வெளியிலும் ஏற்கனவே வலுவாக உள்ளது. அக்னி-5 ஏவுகணை 5,000 கிமீ-க்கும் அதிகமான தூரம் சென்று தாக்கும் திறன் கொண்டது. அதேபோல் ரஃபேல், சுகோய்-30, எம்கேஐ மற்றும் மிராஜ்-2000 போன்ற விமானங்கள் அணு குண்டுகளை வீசும் திறன் கொண்டவை. இருந்த போதிலும், அணுசக்தித் தடுப்பாற்றலின் மணிமகுடமாக அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்களே விளங்குகின்றன. நீருக்கடியில் அடியில் மறைந்திருக்கும் இவை, ஒரு தாக்குதலுக்குப் பிறகு உறுதியான பதிலடி கொடுப்பதற்கான மிகவும் பாதுகாப்பான தளங்களாகக் கருதப்படுகின்றன.

அந்த வகையில், ஐஎன்எஸ் அரிகாத்-திலிருந்து நடத்தப்பட்ட நீர்மூழ்கி கப்பலிலிருந்து ஏவப்படும் ஏவுகணை K-4 சோதனை ஒரு நிதானமான குழப்பமற்ற செய்தியை வெளிப்படுத்தி இருக்கிறது. இந்தியா அணு ஆயுதங்களை பயன்படுத்தி முதலில் தாக்காது (No First Use Policy) என்ற கொள்கையை வலுசேர்க்கும் விதமாக, ஒரு தாக்குதலைத் தாங்கிய பிறகும் தீர்க்கமாகப் பதிலடி கொடுக்கும் திறன் கொண்ட அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்கள் விளங்குகின்றன என்றால் மிகையாகாது.



கார்த்திகை தீபம் இந்து பண்டிகை அல்ல தமிழர் பண்டிகை-அமைச்சர் ரகுபதி..

சரி வா தமிழ் மூச்சன் தமிமுன் அன்சாரியையும், வீரத் தமிழன் விக்டர் ஜேம்ஸையும் கார்த்திகை தீபம் ஏத்தி கொண்டாட சொல்லு...??!



கரூர் சம்பவத்தினால் த.வெ.கவினர் தீபாவளி கொண்டாட வேண்டாம் - விஜய்



நண்பர் 1: டேய்! தீபாவளி கொண்டாட வேண்டாம் சொன்ன விஜய்.. கிறிஸ்மஸ் கொண்டாட வேண்டாம் என்று சொல்லடா.




நண்பர் 2: டேய் சங்கி மாதிரி பேசாதேடா..

நண்பர் 1: என்னது சங்கியா... இது என்னடா உங்க நியாயம்..?





- தொகுப்பு : சி.பாண்டிக்குமார்

ரயில் கட்டண உயர்வை திரும்ப பெற வேண்டும் - வெங்கடேசன் எம்பி




ஏண்டா தமிழ்நாட்டுல
சொத்து வரி,தண்ணி வரி
தள்ளுவண்டி கடைகளுக்கு வரி
கரண்ட் பில் உயர்வு
இதெல்லாம் உயர்த்தும்போது வாயில என்னத்த டா வெச்சிட்டு இருந்த






தமிழன் பாதி பேருக்கு..
தந்தையாக ஈ. வே. ராமசாமியும்
அப்பாவாக மு. க. ஸ்டாலினும் இருக்கிறாங்க...



தந்தை யார்..? அப்பா யார்..? குழப்பத்தில் திராவிடத்தமிழன்.!



# பொருளாதாரம்

கோ. ரமேஷ், பொருளாதார நிபுணர்.

## பங்குச் சந்தை வழிகாட்டி: விலை நிர்ணயம், ஓப்பன் இன்ட்ரஸ்ட் மற்றும் சந்தை இயக்கவியல்

பங்குச் சந்தை என்பது வெறும் எண்கள், வர்த்தக கணக்குகள் அல்லது லாப-நஷ்ட பட்டியல்கள் மட்டுமல்ல. அது முதலீட்டாளர்களின் மனநிலை, எதிர்பார்ப்பு, பயம், பேராசை மற்றும் கணிதக் கணக்கீடுகள் அனைத்தும் ஒன்றிணையும் ஒரு சிக்கலான அமைப்பாகும். ஒரு பங்கின் விலை எப்படி நிர்ணயிக்கப்படுகிறது, சந்தையின் போக்கை எவ்வாறு முன்கூட்டியே கணிக்கலாம் என்பவற்றைப் புரிந்துகொள்வது வெற்றிகரமான முதலீட்டிற்கு மிகவும் அவசியமாகிறது. இந்த அடிப்படைகளைப் புரிந்துகொண்டால் மட்டுமே சந்தையில் நீண்ட காலம் நிலைத்திருக்க முடியும்.

**1. ஏல விலை மற்றும் கேட்கும் விலை** (Bid and Ask Price)

பங்குச் சந்தை வர்த்தகத்தின் அடிப்படை அலகுகளாக ஏல விலை **(Bid Price)** மற்றும் கேட்கும் விலை (Ask Price) விளங்குகின்றன. இவை ஒரு பங்கின் உடனடி சந்தை நிலையைத் தெளிவாக காட்டுகின்றன.

**ஏல விலை (Bid Price):**

ஒரு பங்கிற்கு வாங்குபவர் அல்லது முதலீட்டாளர் அதிகபட்சமாக செலுத்தத் தயாராக இருக்கும் விலையே ஏல விலை. இது வாங்குபவர் தரப்பிலிருந்து நிர்ணயிக்கப்படும் விலையாகும். எளிமையாகச் சொன்னால், ஒருவர் தன்னிடம் உள்ள பங்கை உடனடியாக விற்க விரும்பினால், சந்தையில் அவருக்குக் கிடைக்கும் விலை இதுவாகும்.

**கேட்கும் விலை (Ask Price):**

ஒரு பங்கை விற்கும் முதலீட்டாளர், அந்தப் பங்கைக் கொடுக்கப் பெற விரும்பும் குறைந்தபட்ச விலையே கேட்கும் விலை. வாங்குபவர் அந்தப் பங்கை வாங்க இந்த விலையை செலுத்த வேண்டும். இந்த இரண்டு விலைகளுக்கிடையிலான வேறுபாட்டை "ஸ்பிரெட்" (Spread) என்று அழைக்கின்றனர். அதிக வர்த்தகம் நடைபெறும் பங்குகளில் ஸ்பிரெட் குறைவாக இருக்கும். இது அந்தப் பங்கில் அதிக Liquidity இருப்பதைக் குறிக்கிறது.

**2. ஓப்பன் இன்ட்ரஸ்ட் (Open Interest) – ஆழமான பார்வை**

ஓப்பன் இன்ட்ரஸ்ட் என்பது குறிப்பாக ஃப்யூச்சர்ஸ் மற்றும் ஆப்ஷன்ஸ் **(Futures & Options)** வர்த்தகத்தில் மிக முக்கியமான குறியீடாகும். நிறைவேற்றப்படாமல் நிலுவையில் இருக்கும் மொத்த ஒப்பந்தங்களின் எண்ணிக்கையே ஓப்பன் இன்ட்ரஸ்ட்.

உதாரணமாக, ஒரு நிறுவனத்தின் பங்கில் 100 ஒப்பந்தங்கள்செய்யப்பட்டுள்ளனஎனக்கொள்வோம். இதில் 60 ஒப்பந்தங்கள் முடிக்கப்பட்டுவிட்டால், மீதமுள்ள 40 ஒப்பந்தங்களே ஓப்பன் இன்ட்ரஸ்ட் ஆகும். இந்த எண்ணிக்கை சந்தையில் எவ்வளவு புதிய பணம் நுழைகிறது அல்லது வெளியேறுகிறது என்பதைப் புரிந்துகொள்ள உதவுகிறது.

**ஓப்பன் இன்ட்ரஸ்ட் மூலம் சந்தை கணிப்பு – நான்கு நிலைகள்:**

- விலை உயர்வு + அதிக **OI:** புதியதாக வாங்குபவர்கள் சந்தையில் நுழைகிறார்கள்; பங்கு பலமாக உள்ளது.
- விலை சரிவு + அதிக **OI:** அதிக அளவில் Short Selling நடைபெறுகிறது; சரிவு வலுப்பெறுகிறது.
- விலை சரிவு + குறைந்த **OI:** விற்பவர்கள் விலகுகிறார்கள்; திருப்பம் (Trend Reversal) ஏற்பட வாய்ப்பு உள்ளது.
- விலை உயர்வு + குறைந்த **OI:** வாங்குபவர்கள் குறைவாக இருக்கிறார்கள்; விலை மீண்டும் இறங்கக்கூடும்.

3. **தொடக்க விலை ஏன் மாறுகிறது?** (Price Volatility)

நேற்றைய முடிவு விலையிலேயே இன்றைய சந்தை தொடங்க வேண்டும் என்பதே பலரின் எண்ணம். ஆனால் நடைமுறையில் இது அரிதாகவே நடக்கும். பங்கின் விலை அதன் தற்போதைய தேவை மற்றும் அளிப்பை (Demand & Supply) பொறுத்தே நிர்ணயிக்கப்படுகிறது.

இரவு நேரத்தில் வெளியாகும் நிறுவனச் செய்திகள், காலாண்டு முடிவுகள், அரசியல் முடிவுகள் அல்லது உலகச் சந்தை மாற்றங்கள் காலை நேரத்தில் பங்கின் விலையில் Gap Up அல்லது Gap Down உருவாக்குகின்றன. இதுவே விலை ஏற்ற இறக்கங்களுக்கு முக்கிய காரணமாகும்.

**4. முன் சந்தை** (Pre-Opening Session) **மற்றும் அதன் அவசியம்**

சந்தை தொடங்கும் போதே ஏற்படும் திடீர் ஏற்ற இறக்கங்களைத் தவிர்க்கவே Pre-Opening Session அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது தினமும் காலை 9:00 மணி முதல் 9:15 மணி வரை நடைபெறும்.

இந்த நேரத்தில் முதலீட்டாளர்கள் விலையைக் குறிப்பிட்டு ஆர்டர்கள் இடலாம். ஆனால் அவை உடனடியாக நிறைவேறாது. 9:15 மணிக்கு சந்தை

முறையாகத் தொடங்கும் போது, இந்த ஆர்டர்களின் அடிப்படையில் ஒரு நியாயமான தொடக்க விலை நிர்ணயிக்கப்படுகிறது. இது சந்தைக்கு ஒரு சீரான மற்றும் நிலையான தொடக்கத்தை வழங்குகிறது.

ஒரு பங்கின் தொடக்க விலை, அதிகபட்சம், குறைந்தபட்சம், முடிவு விலை, வர்த்தக அளவு, ஏல விலை, கேட்கும் விலை மற்றும் ஓப்பன் இன்ட்ரஸ்ட் போன்ற அனைத்துமே அதன் தற்போதைய நிலையை மட்டும் அல்ல, எதிர்காலப் போக்கையும் சுட்டிக்காட்டுகின்றன. இந்த தரவுகளை உணர்ந்து, சரியாக பகுப்பாய்வு செய்யும் முதலீட்டாளர்களே பங்குச் சந்தையில் நீண்ட கால வெற்றியை அடைய முடியும்.

**5. ஆதரவு நிலை**

பங்குச் சந்தை முதலீட்டை அடிப்படை அல்லது தொழில்நுட்ப ஆய்வு மூலமாக மேற்கொள்வதாக இருந்தால் மூன்று முக்கிய விஷயங்களை அறிந்திருப்பது அவசியம்.

அவை,

1. ‘சப்போர்ட்’ நிலை (Support Level)
2. ‘ரெஸிஸ்டன்ஸ்’ நிலை (Resistance Level)
3. ஸ்டாப் லாஸ் (Stop Loss)

அவைகள் பற்றி ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

பங்குச் சந்தை புள்ளிகள் அல்லது பங்கின் விலையில் ஒவ்வொரு இறக்கத்திற்கும் ஒரு ஆதரவு (சப்போர்ட்) நிலை உண்டு. அதாவது, தொடர்ந்து இறங்கிக் கொண்டே வரும் பங்குச் சந்தையின் புள்ளிகள் அல்லது பங்கின் விலை இறங்குவது நின்று, மீண்டும் மேலே செல்ல ஆரம்பிக்கும் இடம் ‘ஆதரவு நிலை’ எனப்படுகிறது.

இந்த ஆதரவு நிலையில் வாங்குபவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும். அதாவது, பங்குகளின் அளிப்பு குறைந்து, தேவை அதிகமாக இருக்கும்.

இதன் மூலம்தான், பங்கின் விலை இந்த அளவு வரை இறங்கி வந்தால் பங்கை வாங்கலாம் என்ற முடிவுக்கு வர முடியும். இதை வைத்து ஒரு பங்கை, குறைந்த விலையில் வாங்கி, அதிக விலைக்கு விற்று லாபம் பார்க்க முடியும்.

**ஆதரவு நிலை வகைகள்**

தொழில்நுட்ப ஆய்வில் ஆதரவு நிலை என்பது பங்கின் ஒரு விலை நிலை அல்லது குறியீட்டின் ஒரு புள்ளி நிலை. அந்த நிலை வரை ஒரு பங்கின் விலை அல்லது குறியீட்டின் புள்ளி இறங்கி வந்தவுடன் விலை மேலே ஏறுகிறது, இதை ஆதரவு நிலை என்கிறோம்.

இந்த ஆதரவு நிலையில் இரு வகை இருக்கிறது. முதல் வகை இளவல் ஆதரவு (மைனர் சப்போர்ட்) நிலை, அடுத்த வகை பிரதான ஆதரவு (மேஜர் சப்போர்ட்) நிலை. இறங்கு முகத்தில் இருக்கும் பங்கின் விலையை சற்றே நிறுத்தி வைப்பது ‘இளவல் ஆதரவு நிலை’ இறங்கும் போக்கையே மாற்றி விலையை ஏறச் செய்வது பிரதான ஆதரவு நிலை.

# ஆயுத உற்பத்தியில் சாதனை படைக்கும் இந்தியா

2025-ஆம் ஆண்டில் அமெரிக்கா மற்றும் சீனாவிற்கு அடுத்தபடியாக, உலகின் மூன்றாவது மிகப்பெரிய இராணுவ சக்தியாக இந்தியா உருவெடுத்துள்ளது. ‘ஆபரேஷன் சிந்தூர்’ (Operation Sindoor) மூலம் இந்தியாவின் உள்நாட்டு ஆயுதங்கள் மற்றும் ட்ரோன்களை முறியடிக்கும் திறன்கள் நிரூபிக்கப்பட்டுள்ளன.

அதே வேளையில், 2026-ஆம் ஆண்டிற்கான இராணுவத்தின் வரவு செலவுத் திட்டத்தை (Defence Budget) 20-25% உயர்த்த அரசு திட்டமிட்டுள்ளது. மேலும், இராணுவ தளவாடங்கள் ஏற்றுமதியை ₹30,000 கோடியாக உயர்த்துவதையும் இலக்காகக் கொண்டுள்ளது. சுயசார்பு மற்றும் நவீன தொழில்நுட்பத்திற்கு அளிக்கப்படும் முக்கியத்துவம், சர்வதேச ஆயுதச் சந்தையில் இந்தியாவை ஒரு வலிமையான நாடாக மாற்றி வருகிறது.2025-ஆம் ஆண்டில் இந்தியாவின் ஆயுதங்கள் உற்பத்தி முன்னெப்போதும் இல்லாத வகையில் ரூ. 1.54 லட்சம் கோடியை எட்டியுள்ளது. அதே நேரத்தில், ஏற்றுமதி சுமார் 12% வளர்ச்சியடைந்து ரூ. 24,000 கோடியாக உயர்ந்துள்ளது. தற்போது 65%-க்கும் அதிகமான இராணுவத்திற்கு தேவையான உபகரணங்கள் உள்நாட்டிலேயே பெருமளவில் தயாரிக்கப்படுவதால், இறக்குமதி மீதான சார்பு குறைந்துள்ளது. மத்திய அரசின் கொள்கைகள் மற்றும் ‘மேக் இன் இந்தியா’ (Make in India) முன்னெடுப்பு ஆகியவை உலகளாவிய பாதுகாப்புச் சந்தையில் இந்தியாவை ஒரு வளர்ந்து வரும் சக்தியாக நிலைநிறுத்தியுள்ளன.

2026-27 நிதியாண்டிற்கான பாதுகாப்பு வரவுசெலவுத் திட்டத்தில் 20-25% உயர்வு இருக்கும் என்ற எதிர்பார்ப்பும், தனியார்துறையின் பங்களிப்பைத் தொடர்ந்து ஊக்குவிப்பதும் இந்தியாவின் பாதுகாப்பு உற்பத்தி மற்றும் ஏற்றுமதியை முன்னோடியில்லாத உயரத்திற்குக் கொண்டு செல்லவுள்ளது. மார்ச் 2026-க்குள், ஆயுதங்கள் ஏற்றுமதியில் ரூ. 30,000 கோடியைக் கடக்கக்கூடும். இது இந்தியாவிற்கு ஆயுத வர்த்தகத்தில் மற்றுமொரு மைல்கல்லாக அமையும்.

# வெற்றியும் தோல்வியும்

- வெங்கட் பிரசாத், D.

அரசியல் மற்றும் விளையாட்டு ஆய்வாளர்

**புதிய வெற்றி இனிய ஆண்டு** 2025:

உலகில் யுத்தங்கள், இயற்கை பேரிடர், விபத்துக்கள் போன்ற பல நிகழ்வுகள் 2025 தந்திருந்தாலும், விளையாட்டு துறையை பொறுத்தவரையில் வெற்றி பெறாத பல அணிகளுக்கு வெற்றி கொடுத்த ஒரு அற்புதமான ஆண்டாகவே இருந்துள்ளது.

அதில் ரோகித் சர்மாவிற்கு முதல் ODI ஐசிசி கோப்பை, RCB ஆண்கள் அணிக்கு முதல் ஐபிஎல் சாம்பியன் பட்டம், சவுத் ஆப்பிரிக்கா அணிக்கு முதல் உலகக் கோப்பை, இந்திய பெண்கள் கிரிக்கெட் அணிக்கு முதல் உலகக் கோப்பை, சையத் முஷ்டாக் அலி கோப்பையை வென்ற ஜார்கண்ட், சதுரங்கப் போட்டியில் பல புதிய வெற்றியாளர்கள், செயிண்ட் ஜெர்மன் யு இ எஃப் ஏ சாம்பியன்ஸ் போன்றவைகள் அடங்கும்.

**சமூக வலைதளங்களின் சக்தி:**

கடந்த வாரங்களில் ஆந்திர மாநிலத்தை சேர்ந்த இந்திய வீராங்கனை ஜோதி யர்ராஜி ஏசியன் சாம்பியன்ஷிப் 100 மீட்டர் தடை தாண்டுதல் போட்டியில் தங்கம் வென்ற போதும், கைதட்ட கூட ஆட்கள் இல்லாமல்,அதன் இடையே இந்திய தேசிய கீதம் ஒலித்த காணொளி கோடிக்கணக்கில் பகிரப்பட்டு வந்தது.



ஆனால் இந்த வெற்றி 2025 மே மாதத்தில் சவுத் கொரியாவில் நிகழ்ந்த ஒன்று என்பது பலருக்கும் தெரியாது. பல காலமாக கிரிக்கெட் அல்லாத மற்ற போட்டி வெற்றியாளர்களை பற்றி பல காணொளிகளும் கட்டுரைகளும் நான் வெளியிட்ட நேரத்திலும் அவை பெரிதும் பேசப்படவில்லை. ஆனால் இன்று ஒரு காணொளி மே மாதத்தில் நடந்த ஏசியன் சாம்பியன்ஷிப் இந்திய வெற்றியாளர்களை கொண்டாடுவது சமூக வலைதளங்களின் சக்தியை எடுத்துரைக்கிறது. தாமதமாகினும் உழைப்பிற்கு பலன் கிடைத்தால் நல்லதே. அரசாங்கம் இதை கருத்தில் கொண்டு மற்ற போட்டி வெற்றியாளர்களை இன்னுமும் பிரபலப்படுத்தும் முயற்சியில் இறங்க வேண்டும் என்பதே நமது வேண்டுகோள்.

2026 **உலகக்கோப்பை இந்திய டி**20 **அணி:**

நாம் கணித்தது போலவே இந்தியா, தென்னாபிரிக்காவை டி20 தொடரில் வீழ்த்தியுள்ளது. இதைத்தொடர்ந்து டி20 உலகக் கோப்பைக்கான இந்திய அணி பின்வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

சூரியகுமார்யாதவ் (கேப்டன்), அக்சர் படேல் (துணை கேப்டன்), அபிஷேக் சர்மா, சஞ்சு சாம்சன், திலக் வர்மா, ஹர்திக், ஷிவம் துபே, ரிங்குசிங், பும்ரா, ஹர்ஷித் ராணா, அர்ஷ்தீப் சிங், குல்தீப், வருண் சக்ரவர்த்தி, வாஷிங்டன் சுந்தர், இஷான் கிஷன். இதில் கில் இடம்பெறாததற்கு அவரது காயமும் அணியின் தேவைகளுமே காரணம் என்று தேர்வு நிர்வாகி அஜித் மற்றும் அணித்தலைவரால் குறிப்பிடப்பட்டுள்ளது.

சாம்சன் நல்ல தேர்வு என்றாலும் சேசிங்கில் அவரது பங்களிப்பு தொய்ந்திருப்பது கவனிக்க வேண்டிய ஒன்று. தொடக்க ஆட்ட+விக்கெட் கீப்பர் என்ற அடிப்படையில் சாம்சன் தேர்வு செய்யப்பட்டு இருப்பதால் அவருக்கு அவசரநிலை மாற்றாக மற்றொரு தொடக்க ஆட்ட+ விக்கெட் கீப்பரான, சமீபத்தில் சையத் முஷ்டாக் அலி கோப்பையை வென்ற ஜார்கண்ட் அணியின் தலைவரும் அத்தொடரின் சிறந்த பேட்ஸ்மனாகவும் விளங்கிய இஷான் கிஷனுக்கு அணியில் இடம் தரப்பட்டுள்ளது.

இந்த அணி உலக கோப்பையை வெல்லும் என்பதே நமது கணிப்பு. அணியில் உள்ள வீரர்களின் திறன்கள் பற்றிய ஆய்வினை இனிவரும் கட்டுரைகளில் காண்போம்.

# சங்கத் தமிழில் சனாதனம்

— பத்மன்



## அத்தியாயம் 2 : சங்கம் இருந்ததற்கான சான்றுகள்

சங்கம், தென்மொழியாம் தமிழுக்கும் வடமொழியாம் சம்ஸ்கிருதத்துக்கும் பொதுவான சொல். சனாதனச் சொல்! சங்கம் என்ற சொல்லுக்கு ஒருமித்து இணைதல், ஒன்றுசேர்தல், கூடுதல் என்று பொருள். இதன் அடிப்படையில்தான் வடமொழியில் திரிவேணி சங்கமம் என்பது தனித்தமிழில் முக்கூடல் எனப்படுகிறது. அப்படியானால், கூடல், கூட்டம் என்பதுதானே தமிழ்ச் சொற்கள்? சங்கம் எப்படி தமிழ்ச் சொல்லாகவோ, பொதுச் சொல்லாகவோ இருக்கக் கூடும்? என்று கேள்வி எழலாம்!

சங்கு என்பது என்ன? நத்தைக் கூடு. முனைகள் ஒன்றுகூடி இருப்பதற்குப் பெயர் கூடு. கூடு என்பதில் இருந்து கூடல், கூட்டம் என்ற சொல் எவ்விதம் பிறந்ததோ, அதேபோலத்தான், கூடு என்பதற்கு மற்றொரு சொல்லான சங்கு என்பதில் இருந்து சங்கம் தோன்றியுள்ளது. இதுபோல் தமிழுக்கும், சம்ஸ்கிருதத்துக்கும் பொதுவான சொற்கள் பல உள்ளன. அவை இருக்கட்டும். தமிழ்ச் சங்கம் இருந்ததா? என்ற ஐயப்பாட்டுக்கு வருவோம்.

அக்காலத்தில் தமிழ்ச் சங்கம் இருந்தது என்பதற்கு, பழம்பெரும் இலக்கண நூலான தொல்காப்பியத்துக்குப் புலவர் பனம்பாரனார் எழுதியிருக்கும் சிறப்புப் பாயிரத்தில், "நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்து" என்றுரைத்திருக்கும் சொற்களே சான்று. நிலந்தரு திருவில் பாண்டியனின் அரண்மனையில் தமிழ்ச் சங்கம் இருந்தது என்பதையே அவையம் என்ற சொல் குறிக்கிறது. இதனையே, இந்த மன்னன் காலத்தில், சிறந்த புலவர்கள் ஒன்றுகூடிய புகழ் பெற்ற தமிழ்ச் சங்கம் இருந்தது என்பதை, மதுரைக் காஞ்சியில் புலவர் மாங்குடி மருதனார், "தொல்லாணை நல்லாசிரியர் புணர்கூட்டுண்ட புகழ்சால் சிறப்பின் நிலந்தரு திருவின் நெடியோன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

தலையானங்கானத்துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைப் போற்றி, மாங்குடி மருதனார் பாடிய இலக்கியம், மதுரைக் காஞ்சி. நெடுஞ்செழியன் காலத்தில் இருந்த தமிழ்ச் சங்கத்துக்கு மாங்குடி மருதனார் தலைமைப் புலவராக இருந்திருக்கிறார் என்பதை புறநானூற்றின் 76-ஆவது பாடலைப் பாடியுள்ள அந்த அரசனே உரைத்திருக்கிறான். "ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி மாங்குடி மருதன் தலைவனாக" என்பது அந்தப் பாடல் வரிகள். இங்கே கேள்வி என்பதற்கு கேள்வி ஞானத்தோடு, ஸ்ருதி எனப்படும் வேத அறிவு என்றும் பொருள் கொள்ளலாம். இதேபோல் புறநானூற்றின் 56-ஆவது பாடலில் பாண்டிய அரசன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெரு வழுதியை, புலவர் காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக் கண்ணனார், "தமிழ்கெழு கூடல் தண்கோல் வேந்தே" என்று புகழ்ந்துரைக்கும் வரிகளிலும், மதுரையில் தமிழ் ஒளிவீசும் சங்கம் இருந்தது என்பதற்குச் சான்றாதாரம் கிட்டுகிறது.

மேலும், சிறுபாணாற்றுப் படை நூலில், புலவர் நத்தத்தனார், "தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின் மகிழ்நனை மறுகின் மதுரை" என்று குறிப்பிட்டிருக்கிறார். "தமிழ் மொழி நிலைத்து நிற்கும் பெருமையைப் பெறுகின்ற வகையில் அதனைத் தாங்கிப் பிடிக்கும் மரபைச் சார்ந்தவர்களால், மக்கள் மகிழ்ச்சியோடு வாழ்கின்ற நகரம் மதுரை" என்பது இதன் பொருள்.

மதுரையில் அமைந்திருந்த புலவர்கள் கூடும் அவையைச் சங்கம் என்று, பொ.பி. 7-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சைவ சமயக் குரவர் நால்வரில் ஒருவரான அப்பர் எனப்படும் திருநாவுக்கரசர் குறிப்பிட்டிருக்கிறார். பன்னிரு திருமுறைகளில் ஆறாம் திருமுறையில் உள்ள அப்பரின் தேவாரப் பாடல் ஒன்றில், ஏழைப் புலவர் தருமிக்காக, இறைவன் சிவபெருமான், புலவர் போல் வேடமிட்டு வந்து தமிழ்ச் சங்கத்தில் தோன்றி பொற்கிழி வாங்கிக் கொடுத்து அருளினார் என்ற திருவிளையாடல் புராணச் செய்தி தெரிவிக்கப்பட்டுள்ளது. "நன்பாட்டுப் புலவனாய் சங்கம் ஏறி, நற்கனகக் கிழி தருமிக்கு அருளினோன் காண்" என்பன அப்பாடல் வரிகள்.

இதேபோல் 8-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வைணவ பெண் ஆழ்வாரான ஆண்டாள் நாச்சியார், திருப்பாவையில் தாம் எழுதிய முப்பது பாசுரங்களையும், சங்கத் தமிழுக்கு இணையான தகுதியும், கருத்தும், அழகும் கொண்டவை என்று சாற்றியுள்ளார். இதனை, முப்பதாவது பாசுரத்தில், "சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே" என்ற வார்த்தைகளால் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இதே 8-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மற்றொரு வைணவ ஆழ்வாரான திருமங்கையாழ்வார்,

தமது பெரிய திருமொழிப் பாசுரம் ஒன்றில், "நலந்திகழ் முனிவர் சங்கமலி தமிழ்மாலை நண்ணி'' என்று சங்கத்தமிழைச்சிறப்பித்துள்ளார். நலம் நிறைந்த முனிவர்களான தமிழ்ப் புலவர்களால் சங்கம் வைத்து வளர்க்கப்பட்ட தமிழ்ப் பாடல்களைப் பொருந்தி நின்று என்று இதற்குப் பொருள். மற்றொரு பாசுரத்தில் சங்கத் தமிழை, "பொங்கொளி விசும்பின் சங்கமுகத் தமிழ்மாலை கொண்டு'' என்றும் போற்றியுள்ளார்.

**தமிழ் இலக்கியங்களை மட்டுமின்றி, பிற மொழி இலக்கியங்களைத் தமிழ்ப்படுத்துவதையும் மதுரைச் சங்கம் ஊக்குவித்தது என்பதற்கு 9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சின்னமனூர்ச் செப்பேடுகளே சான்று. அந்தச் செப்பேடு ஒன்றில் "மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்'' என்ற வரிகள் பொறிக்கப்பட்டுள்ளன.**

தமிழ் இலக்கியங்களை மட்டுமின்றி, பிற மொழி இலக்கியங்களைத் தமிழ்ப்படுத்துவதையும் மதுரைச் சங்கம் ஊக்குவித்தது என்பதற்கு 9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சின்னமனூர்ச் செப்பேடுகளே சான்று. அந்தச் செப்பேடு ஒன்றில் "மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்'' என்ற வரிகள் பொறிக்கப்பட்டுள்ளன. இதற்கு, மகாபாரத இதிகாசத்தைத் தமிழில் மொழிபெயர்ப்பதற்காக மதுரையில் சங்கம் வைத்து என்று பொருள் கொள்ளலாம். மிகப் பெரிய நாடான பாரதத்தின் பல்வேறு இலக்கியங்களைத் தமிழில் மொழிபெயர்ப்பதற்காக என்றும் எடுத்துக் கொள்ளலாம். இவ்வாறாக, சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மன்னர்கள் சனாதனப் பண்பாட்டையும் சேர்த்தே வளர்த்துள்ளார்கள்.

இத்தகைய சங்கத் தமிழ் நூல்கள் யாவை? ....

(தொடரும்)

# உலகின் தொன்மையான மொழி தமிழ்

## - மோடி புகழாரம்

பிரதமராக பதவியேற்றது முதல், மாதந்தோறும் கடைசி ஞாயிற்றுக்கிழமைகளில், 'மன் கீ பாத்' எனப்படும் மனதின் குரல் என்ற ரேடியோ நிகழ்ச்சி வாயிலாக பிரதமர் நரேந்திர மோடி பேசி அவர்கள் நாட்டின் பண்பாடு, கலாசாரம், மொழிகளின் சிறப்பு உட்பட பல்வேறு விஷயங்கள் குறித்து நாட்டு மக்கள் மத்தியில் பிரதமர் பேசி வருகிறார். இந்த நிகழ்ச்சியின் 129வது பகுதியில் தமிழ் மொழியின் சிறப்பை குறித்து அவர் பேசியது பின்வருமாறு,



என் மனம்நிறை நாட்டுமக்களே, நான் இப்போது பாரதத்தை விட்டு ஆயிரக்கணக்கான கிலோமீட்டர் தொலைவில் இருக்கும், ஃபிஜியில் பாரதநாட்டு மொழி மற்றும் கலாச்சாரத்தைப் பரப்ப ஒரு பாராட்டுதற்குரிய முன்னெடுப்பு நடந்து வருகிறது. அதில் கலந்து கொள்ள இருக்கிறேன். கடந்த மாதம் ஃபிஜியில் ராக்கீராக்கீ பகுதியில், அங்கிருக்கும் ஒரு பள்ளிக்கூடத்தில் முதன்முறையாக தமிழ் தினம் கொண்டாடப்பட்டது.

அன்றைய தினத்தன்று குழந்தைகள் மேடையில் தமிழ் மொழியின் பெருமை குறித்து தங்கு தடையின்று உரையாற்றினார்கள். தமிழில் கவிதைகளை உரைத்தார்கள், சொற்பொழிவு ஆற்றினார்கள்,

நண்பர்களே, நம் தேசத்திலேயும் கூட, தமிழ் மொழியின் பரவலாக்கம் தொடர்பாக தொடர்ந்து பணிகள் நடந்து வருகின்றன. இந்த ஆண்டு வாராணசியில் காசி தமிழ் சங்கமத்தின் போது தமிழ் கற்பது தொடர்பாக சிறப்பான கவனம் செலுத்தப்பட்டது. தமிழ் கற்கலாம் என்ற மையக்கருவையொட்டி, வாராணசியின் 50க்கும் மேற்பட்ட பள்ளிகளில் சிறப்பு இயக்கம் நடத்தப்பட்டது.

தமிழ் மொழியில் சரளமாகத் தன்னுடைய கருத்தை சொல்லக் கூடியவர்களாக மாறியுள்ளனர் காசியைச் சேர்ந்த பல குழந்தைகள். இவர்களுடைய தாய்மொழி ஹிந்தி, ஆனால் தமிழ்மொழியிடம் கொண்ட ஈடுபாடு இவர்களைத் தமிழ் கற்க உத்வேகப்படுத்தியிருக்கிறது.

நண்பர்களே, தமிழ்மொழி உலகின் மிகவும் பழமையான மொழி. தமிழ் இலக்கியம் மிகவும் வளமானது. இன்று தேசத்தின் பிற பாகங்களிலும் கூட குழந்தைகள்-இளைஞர்கள் மத்தியில் தமிழ் மீதான ஆர்வம் அதிகரித்திருக்கிறது. இதுதான் மொழியின் பலம், இதுவே பாரதத்தின் ஒற்றுமை.

# நமக்கான USER MANUAL





இரா. முகுந்த கிருஷ்ணன்,
Wellness Centre for Yoga & Holistic Yogic Healing.

## கண்களும் காதுகளும்

சென்ற தொடரிலிருந்து நம்முடைய 5 உடல்களில் முதலாவதான பருவுடலைப் பற்றி தெரிந்துகொள்ள ஆரம்பித்துள்ளோம். இந்த 5 உடல்களும் எந்நேரமும் ஒன்றாக இணைந்துதான் இயங்குகின்றன. இப்போது எழுத்துக்களில் விளக்கிக் கொண்டிருப்பதுபோல் ஒவ்வொரு உடம்பும் தனித்தனியாக இருந்துகொண்டு இயங்குவதில்லை. நமது அறிவுக்கு புரியவேண்டியிருப்பதால் நாம் ஒவ்வொன்றைப் பற்றியும் தனித்தனியாக பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

அனைத்து உடல்களும் ஒன்றாகத்தான் இயங்குகின்றன என்பதற்கு பசி ஒரு உதாரணம். நமது மற்ற உடலுறுப்புக்களைப் பார்ப்பதுபோல் பசியை கண்ணால் பார்க்கமுடியாது. உணரத்தான் முடியும். பசி என்பது உயிரின் உணர்வு. முன்னர் உண்ட உணவின் சாரம் செரிக்கப்பட்டு உடலின் இயக்கத்தால் செலவழிந்து, இந்த உடலுக்கு மீண்டும் சக்தி தேவைப்படுகிறபோது, நமது உயிரானது பசியுணர்ச்சியை ஏற்படுத்துகிறது. பிராணன்களால் உருவான 2வது உடலில் அது பிரதிபலிக்கிறது. உடனே 3வது உடலான மனம் அதை உணர்கிறது. மனம் பசியுணர்ச்சியை 4வது உடலான அறிவினிடம் கொண்டு சேர்க்கின்றது. அறிவு அந்த மனிதனுக்கு கட்டளையிட்டு உடனே உணவு உட்கொள்ளச்சொல்கிறது. இந்த நிலையில் உடனே உணவு உட்கொண்டால் பசி அடங்கி 5 உடல்களிலும் அமைதியும் சக்தியும் நிறைகிறது. இல்லாவிட்டால் உடலும் மனமும் சோர்ந்து, தன்னுணர்வு இழந்து மனிதன் மயக்கமடைகிறான்.



**காயப்பை ஒன்று, சரக்கு பலவுள** என திருமூலர் கூறுவதுபோல் நமது உடலில் உள்ள எத்தனையோ பாகங்களில் அறிவுசார் கருவிகள் (ஞானேந்திரியங்கள்) என 5ம் அவற்றிற்கான இயந்திரக்கருவிகள் (கர்மேந்திரியங்கள்) என 5ம் சேர்ந்து பத்து கருவிகள் இருக்கின்றன. இவையிரண்டில் ஞானேந்திரியங்கள் கர்மேந்திரியங்களை விட நுட்பமானவை. இந்த ஞானேந்திரியங்களில் முதலாவதாக வருவது கண்கள். நம்மைச் சுற்றியுள்ள வெட்டவெளியின் தன்மை ஒளி. ஒளியானது நமது கண்ணிலும் இருக்கின்றது. வெளிச்சம், இருள், சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், ஆகாயம், பல நிறங்கள், மற்றும் இயற்கையிலுள்ள எல்லா பொருள்களையும் பார்ப்பது என்பது கண்களின் இயக்கம். பொருட்களை ஒளியின் துணைகொண்டு பார்ப்பதால் இது ஒரு ஞானம் சார்ந்த புலன். இதற்கான கர்மேந்திரியம் அதாவது இயந்திரக்கருவி நமது கைகள். கண் பார்ப்பதை கை செய்யவேண்டும் என இதனால் தான் சொல்லப்பட்டது.

இரண்டாவது ஞானேந்திரியம் காதுகள். ஓசையைக் கேட்டுணர காதுகள் உதவுகின்றன. ஒரு கொசுவின் ரீங்காரத்திலிருந்து இடியோசை வரை எந்த ஒலியானாலும், அது பக்கத்திலிருந்து எழுகிறதா அல்லது தொலைவிலிருந்து எழுகிறதா என்பதையும் எந்த திசையிலிருந்து வருகிறது என்பதையும் கேட்டுணர்ந்து தீர்மானிக்கும் கருவி நமது காதுகள். இந்த ஓசை அல்லது ஒலி என்பது ஐம்பெரும்பூதங்களில் முதலாவதான ஆகாயத்தின் தன்மையாகும். முதலில் சொன்ன வெட்டவெளி என்பதும் ஆகாயமும் ஒன்றல்ல. ஒரு இடத்திலிருந்து எழும் ஒலியை மற்றொரு இடத்திற்கு கடத்திச் சென்று சேர்ப்பது ஆகாயத்தின் தன்மை. ஆகாயம் இல்லையானால் நம்மால் எந்த ஓசையையும் கேட்கமுடியாது. காதுகளுக்கான செயல்கருவி நமது கால்கள். எந்தத் திசையிலிருந்து ஓசை வருகிறதோ அந்தப் பக்கம் நடந்துசெல்ல கால்கள் உதவுகின்றன.

நமது இஷ்டம்போல் சுதந்திரமாக நாம் நினைத்தபடி வாழ்ந்துகொண்டிருக்கிறோம் என்று இதுவரை நினைத்திருந்தால் அந்த எண்ணம் பெறும் தவறு என்பதை உணரவேண்டும். நமது கற்பனைக்கு எட்டாத எத்தனையோ சூக்ஷ்மமான சக்திகளின் இயக்கம் தான் நம்மை வாழ வைக்கின்றன என்பது உள்ளத்தில் புரியும்.

(கேள்விகளுக்கு தொடர்புகொள்ள - holisticyogichealing@gmail.com)

(தொடரும்)

# எல்லாம் தெரிஞ்ச ஏகாம்பரம்

வ ரங்கநாதன்,
ஆளுமைத் திறன் பயிற்றுநர்

சில பேர் இந்த “சுபீரியாரிடி காம்ப்ளெக்ஸ்”ல அலைவாங்க. எல்லாம் தெரிந்தது போலக் காட்டிக் கொள்வதில் பெருமை. அது உண்மையில் தற்பெருமை. வலிந்து போய் உதவி செய்வது, ஆலோசனை சொல்வது, கருத்து சொல்வது என்று தங்களை திணித்துக் கொள்வார்கள். பிறகு எல்லா வேலையும் தன் மேலே திணிக்கப்படுவதாக அலட்டிக் கொள்வார்கள்.

உயர்வு மனப்பான்மை என்பது ஒருவர் தனது உள்ளார்ந்த ஆழமான அவநம்பிக்கை அல்லது அச்சத்தை மறைக்க தன்னை பலவானாக காட்டிக்கொள்ளும் முகமூடி ஆகும். இது தாழ்வு மனப்பான்மையின் மறுபக்கம்.

**உயர்வு மனப்பான்மை வரக் காரணங்கள்:**

1.**சிறு வயது சங்கடங்கள்:** பெற்றோராலோ, மற்றோராலோ மிகவும் கண்டிக்கப்பட்டதால் தன்னம்பிக்கை இழந்து, அதை மறைக்க வளர்ந்து வந்த பின்னே இப்படி அலட்டிக் கொள்வது ஒரு காரணம்

2.**உள்ளார்ந்த அச்சம்:** அதிக கண்டிப்பால் மனதில் படிந்த அச்சத்தால் அதை மறைக்க உதார் விடும் குணம்

3.**ஒதுக்கப்படுவோம் என்ற உணர்வு:** பிறர் பாராட்டும்படி இல்லை என்றால் ஒதுக்கப்படுவோம் என்ற பயம்

**இந்த தவறான மனப்பான்மையை எப்படி மாற்றுவது**?

உங்களுக்குள் இந்த மனப்பான்மை இருப்பதை நீங்கள் உணர்ந்தால், சுய விழிப்புணர்வு மூலம் மாற்றம் சாத்தியமாகும்:

1. **மூல காரணத்தை ஒப்புக்கொள்ளவும்:** ஆணவம் என்பது பாதுகாப்பின்மைக்கான முகமூடி என்பதை ஒப்புக்கொள்ளவும்.

2. **ஒப்பிட்டுப் பார்த்து உங்கள் மதிப்பை கணக்கிடுவதை நிறுத்தவும்:** உங்கள் மதிப்பு மற்றவர்களை விட “சிறந்தவராக” இருப்பதன் மூலம் தீர்மானிக்கப்படுவதில்லை என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

3. **உங்கள் குறைகளை ஏற்றுக்கொள்ளவும்:** செய்வதில் இயல்பாக தவறுகள் நேரலாம் அது பரவாயில்லை என்ற சமாதான மனதை அமைத்துக் கொள்ளவும் தவறை பிறர் சுட்டிக்காட்டினால் ஒப்புக்கொள்ளவும். இது ஒரு பலவீனமான தோற்றத்தைவிட உண்மையான நம்பிக்கையை உருவாக்குகிறது.

4. **தொழில்முறை உதவியை நாடுங்கள்:** தேர்ந்த மனநல ஆலோசகரிடம் வழிகாட்டுதல் பெறலாம். இது உங்களையும் அறியாமல் ஆழ்மனதில் படிந்துள்ள வேர்களைக் களைய உதவும். நீங்கள் புதிய மனிதராக எல்லோராலும் இயல்பாக பாராட்டபடுபவராக ஆவீர்கள்

**உயர்வு மனப்பான்மை கொண்ட ஒருவரைக் கையாள்வது எப்படி**?

இந்த மனப்பான்மை கொண்ட நபரைக் கையாள்வது சலிப்பாகத்தான் இருக்கும் இருந்தாலும் எப்படிக் கையாள்வது என அறிவோம்-

- அவர் என்ன சொன்னாலும் அதை தனிப்பட்ட முறையில் எடுத்துக்கொள்ளாதீர்கள். அந்த குணம் அவரது பதட்டத்தின் வெளிப்பாடு.
- அவர்களின் ஈகோவுக்கு நேரடியாக சவால் விடாதீர்கள் அல்லது வாதத்தில் “வெற்றி” பெற முயற்சிக்காதீர்கள், ஏனெனில் இது அவர்களை மேலும் ஆக்ரோஷமாக மாற்றும்.
- எல்லைகளை அமைக்கவும்: கண்ணியமாக ஆனால் உறுதியாக இருங்கள். அவர்களின் கீழ்த்தரமான கருத்தை ஏற்றுக்கொள்ளாமல் சரி சரி என நகர்ந்து செல்வதே நல்லது.
- பரிவு காட்டுங்கள்: ஏதேனும் சிறிய அளவில் அவர்களின் நல்ல குணத்தைப் பாராட்டுங்கள்.

இது அவர்களை அமைதியாக்கும். உங்களோடு இணக்கமாக்க உதவும்,அவரின் மனச் சிக்கல் உங்கள் உறவில் சிக்கல் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ளவும்.



# ஆர்.எஸ்.எஸ். 100
# இந்த நாடு ஹிந்து நாடு (பகுதி 6)

இராம . வெங்கடாத்ரி

### வெள்ளைக்காரன் வரும் முன்பே இந்தியா

1857ல் விக்டோரியா அரசியின் ஆளுகைக்கு வந்த பிறகுதான் இந்தியா என்ற நாடு வெள்ளைக்காரர்களால் உருவாக்கப்பட்டதாக இடது சாரிகள் தொடர் பிரச்சாரம் செய்து வருகின்றனர். இந்தியா என்ற நாடு அதற்கு முன் இல்லை என்றால், 1600ல் இங்கே வியாபாரம் செய்ய வந்த கம்பெனிக்கு எப்படி East India Company என்று பெயர் வைத்திருக்க முடியும்?

### இந்தியாவுக்கு கடல் வழி

அதே கால கட்டத்தில் போர்ச்சுகல், ஸ்பெயின் நாட்டவர்கள் இந்தியாவுக்குக் கடல் வழி கண்டுபிடிக்க முனைந்தனர் ஐரோப்பாவில் இருந்து மேற்கு திசையில் இந்தியா போக கடல் வழி கண்டுபிடிக்க முனைந்த கிறிஸ்டோபர் கொலம்பஸ் 1492ல் அடைந்த தீவுக்கூட்டத்தை முதலில் இந்தியா என்று நினைத்தார். பிறகு அது பாரத நாடு இல்லை என்று அறிந்ததும் அந்தத் தீவுக் கூட்டங்களுக்கு மேற்கு இந்தியா (West Indies) என்ற பெயர் சூட்டப்பட்டது.




இந்தியா என்ற நாடே வெள்ளைக்காரன் வெள்ளைக்காரன் ஆட்சிக்குப் பின்புதான் உருவாகியது என்றால், வெள்ளையன் ஆட்சிக்கு 365 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவைத் தேடி எப்படி பயணம் தொடர்ந்து இருக்க முடியும்? மேற்கு இந்தியா என்று பெயர் வைத்து இருக்க முடியும்?

### கோழிக்கோடும் பிளாஸியும்

கொலம்பஸுக்குப் பிறகு 1498ல் கிழக்கு நோக்கிப் பயணம் தொடங்கிய வாஸ்கோடகாமா என்ற போர்ச்சுகல் நாட்டுப் பயணி இந்தியாவை அடைந்த வரலாற்றைப் படித்திருக்கிறோம். குஜராத்தில் இருந்து வந்து திரும்பிச் சென்று கொண்டிருந்த மிகப்பெரிய சரக்குக் கப்பலைப் பின் தொடர்ந்தே வாஸ்கோடகாமா இந்தியா வர முடிந்தது என்பதும், அதன் பிறகே தென்னாப்பிரிக்காவின் அந்த முனைப்பகுதியில் இருந்து இந்தியா வர முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டதால் அந்த இடத்திற்கு நன்னம்பிக்கை முனை (cape of good hope) என்று போர்த்துகீசியர்கள் பெயர் வைத்ததும் தனிக் கதை.

கேரளாவில் உள்ள கோழிக்கோடு வந்த வாஸ்கோடகாமாவும், கோழிக்கோட்டில் இருந்து 2300 கிலோ மீட்டர் தள்ளி வங்காளத்தில் உள்ள பிளாஸிக்கு வந்த ராபர்ட் கிளைவ் இவர்கள் இருவரும் இந்தியா வந்ததாகத்தான் பதிவு செய்கின்றனர்.

### மகாபாரதத்தின் பீஷ்மபர்வம்

இன்றைய தமிழகம் பண்டைய கால கட்டத்தில் சேர, சோழ, பாண்டிய நாடுகளாகப் பிரிந்து இருந்தன. இது போன்று, பாரத நாட்டின் மொத்த நிலப்பரப்பையும் 540 ஜனபதங்களாக மகாபாரதம் குறிப்பிடுகிறது.

இந்த 540 ஜனபதங்கள் இன்றைய இந்தியா, பாகிஸ்தான், ஆப்கனிஸ்தான், பங்களாதேஷ், திபெத்(சீனா) ஆகியவற்றில் முழுமையாக அடங்கும். இதுதவிர இன்றைய ஈரான், தஜகிஸ்தான், கிர்கிஸ்தான், துர்க்மெனிஸ்தானின் மற்றும் மியான்மரின் சில பகுதிகளும் இந்த ஜனபதங்களுக்குள் அடக்கம். இந்த ஜனபதங்கள் இடையே நடைபெற்ற முதல்

உலகப் பெரும் போர் மகாபாரதப் போர் என்று அழைக்கப்படுகின்றது. இந்த ஜனபதங்களுக்கு உட்பட்ட மாபெரும் நிலப்பரப்பு பாரத வருஷம் எனவும், பரத கண்டம் எனவும் பன்னெடுங்காலமாக அழைக்கப்பட்டு வந்துள்ளது.

**சங்கல்ப மந்திரத்தில் பாரத வருஷம்**

நாம் எந்தவொரு வைதீக ஆன்மீக காரியங்களை மேற்கொண்டாலும் சங்கல்பம் செய்து கொள்வது வழக்கம். நாம் செய்யக்கூடிய செயலில் தடைகள் வராமல் இருக்கவும் வந்தால் அதையும் தாண்டி அந்த செயலை முடிக்கவும் உறுதியுடன் செயல்படுவதை சங்கல்பம் குறிக்கும்.

மாமோ பார்த்த சமஸ்தா துரிதக்ஷய துவார, ஸ்ரீ பரமேஷ்வர / ஸ்ரீ நாராயண ப்ரீத்யர்த்தம் என்று ஆரம்பிக்கும் சங்கல்ப மந்திரத்தில், பாரத வர்ஷே, பரத கண்டே என்று பாரத கண்டத்தின் பெயரை சொல்லி, அந்த பாரத வர்ஷத்தில் நாம் எந்த இடத்தில் இருந்து இந்த ஆன்மிகப் பணியைச் செய்கிறோம் (உதாரணமாக: காவேரி நதி தீரே) என்று சொல்லி உறுதி மொழி எடுக்கிறோம். ஆலயங்களிலும், தனி நபர் வழிபாட்டு முறைகளிலும் நாம் எடுக்கும் இந்த சங்கல்பத்தில் நாம் பாரத தேசத்தவர் என்றே நாடு முழுவதும் காலம் காலமாகச் சொல்லி வந்துகொண்டிருக்கிறோம்.

**தமிழர் திருநாள் பொங்கல்**

தை1 ஆம் நாள் பொங்கல் திருநாளாகத் தமிழகம் முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது. பொங்கல் விழாவை தமிழர் திருநாள் என்று அழைப்பதன் மூலம் ஏதோ தமிழ் நாட்டில் மட்டும் பொங்கல் விழா கொண்டாடப்படுவது போன்ற தோற்றம் ஏற்படுத்தப்படுகிறது. ஆனால் நாடு முழுவதும் இதே பொங்கல் திருநாள் வெவ்வேறு பெயர்களுடன் அந்தந்த பகுதிக்கேற்ற சில மாறுதல்களுடன்

**இமயம் முதல் குமரி வரை இந்த பாரதம் ஒரே நாடு, ஒரே மக்கள், ஒரே பண்பாடு**

கொண்டாடப்படுவதை அறியலாம்.

வான வெளியில் ஆண்டு முழுவதும் சூரியன் மற்றும் பூமிக்கு இடையே உள்ள கோணம் மாறிக்கொண்டே இருக்கிறது. இந்த கோணமாற்றத்தை




12 சம பாகங்களாகப் பிரித்து அவை ஒவ்வொன்றையும் ராசி என்று பெயரிட்டு அழைக்கிறோம். சூரியன் மகர ராசியில் வடக்கு நோக்கி தனது பயணத்தைத் தொடங்கும் நாளே மகர சங்கராந்தி அல்லது பொங்கல் ஆகக் கொண்டாடப்பட்டு வருகிறது. நாடு முழுவதும் கொண்டாடப்பட்டு ஒருமைப்பாட்டின் அடையாளமாகத் திகழும் மகர சங்கராந்தி விழாவையே, தமிழர் திருநாள் என்று பிரித்துப் பேசி பிரிவினைக்கு அச்சாரம் போடுகிறோமே

**கலாச்சார ஒருமைப்பாடு**

1947ல் சுதந்திரம் வந்ததும், இங்கே உள்ள சமஸ்தானங்களை ஒருங்கிணைத்ததில் வல்லபாய் படேல் அவர்களது பங்கு மகத்தானது. இன்று நாம் காணும் இந்தியா எனும் அரசாங்கமாக அமைவதற்குப் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கலாச்சார ரீதியாக பாரதம் ஒருங்கிணைந்து இருந்திருக்கிறது. இமயம் முதல் குமரி வரை இந்த பாரதம் ஒரே நாடு, ஒரே மக்கள், ஒரே பண்பாடு என்பதை மறந்த மக்களுக்கு மீண்டும் அதை நினைவூட்டுவதே ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் தலையாய பணியாக இருக்கிறது.

(தொடரும்)

# இரண்டாம் பாரதியின் எழுச்சி கீதங்கள் - பகுதி 3

- ஏழுமலை




**இரண்டாவது பாரதி**

மகாகவி சுப்ரமணிய பாரதியாருக்குப் பிறகு, தமிழிலே அதிகமான தேசபக்திப் பாடல்களை எழுதிய தேசியக் கவி, இரண்டாவது பாரதி என்று அழைக்கப்படும் வீரத்துறவி இராம.கோபாலன்ஜி அவர்கள். நமது நாடு சுதந்திரம் அடைந்த காலகட்டத்தில் அவர் எழுதிய இரவு கழிந்தது இரவி எழுந்தான் என்ற பாடலின் சில வரிகளைப் பற்றிய விளக்கத்தைக் காண்போம்.

**இரவு கழிந்தது இரவி எழுந்தான்**

இந்தப் பாடல் நமது நாடு சுதந்திரம் அடைந்த கால கட்டத்தில் எழுதப்பட்டது. விடுதலை அடைந்த பாரதம் எப்படி இருக்க வேண்டும் என்ற இலக்கினை பாரத நாட்டு மக்களுக்குச் சொல்லும் செய்தியாக இந்தப் பாடல் அமைந்துள்ளது.

மகர சங்கராந்தி நன்னாளில் சூரியன் வடக்கு நோக்கி நகர்வதால் இரவுப் பொழுது குறைந்து பகல் வேளை அதிகரிக்க ஆரம்பிக்கும். சங்கராந்தி என்பது சம்யக் + கிராந்தி என்ற இரு சொற்களின் கூட்டுச் சொல். இதன் பொருள் “நல்ல மாற்றம்” என்பதாகும். பொங்கல் விழாச் செய்தியாக எழுதிய இந்தப் பாடலில் சுதந்திர பாரதம் அடைய வேண்டிய நல்ல மாற்றங்களைப் பட்டியல் இட்டு அவற்றை இலக்குகளாக முன் வைக்கிறார் திரு. இராம. கோபாலன் அவர்கள்.

**பாரதியாரின் ஆனந்தப் பள்ளு**

நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்பாகவே

ஆடுவோமே பள்ளு பாடுவோமே<br>ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம்

என்று சுதந்திரப் பள்ளு எழுதியவர் மகாகவி பாரதியார்.

அந்தப் பாடலின் இறுதியில், நாமிருக்கும் நாடு நமதென்பதறிந்தோம் என்று பாரதியார் பாடுகிறார். நமது நாடு எப்படிப்பட்ட நாடு என்பதை அறிந்து கொள்ள இந்தப் பாடலில் அதைத் தெளிவுபடுத்தி இருக்கிறார் இரண்டாம் பாரதி ஆகிய இராம.கோபாலன் ஜி அந்த வகையில் ஆடுவோமே பள்ளு பாடுவோமே பாடல் முடியும் இடத்தின் அடுத்த தொடர்ச்சியாக (next version) இந்தப் பாடல் உள்ளது என்றும் கருதலாம்.

**இந்த இதழிலில் சிந்திக்க இருக்கும் பாடல் வரிகள்**

ஆயிரம் ஆண்டுகள் ஓய்ந்து கிடந்த<br>ஹிந்து மஹாசக்தி எழுந்தது சீறி<br>நல்லோரை வாழ்த்திட தீயோரை வீழ்த்திட<br>போர்க்கோலம் பூண்டு எழுந்தது காண்பாய்

**ஆயிரம் ஆண்டுகள் அன்னியன் ஆட்சியில்**

அரேபியாவில் இருந்து முகமது பின் காசிம் கிபி.711ல் இந்த நாட்டின் மீது படையெடுத்து சிந்து அரசினைக் கைப்பற்றினான். அதன் பிறகு கி.பி.971ல் துருக்கியில் இருந்து வந்த முகமது கஜினி இந்த நாட்டின் மீது 17 முறை படையெடுத்து கொள்ளையடித்தான். உலகப் புகழ் பெற்ற சோமநாதர் ஆலயத்தைச் சீரழித்தான். பிறகு கிபி 1149ல் கோரி முகமது, பின்பு குத்புதீன் ஐபக்-ன் அடிமை வம்சங்களின் ஆட்சி, துக்ளக் ஆட்சி, தைமூர் நடத்திய கொலை வெறியாட்டம், மொகலாயர் படையெடுப்பு என்று 800 ஆண்டுகள் இஸ்லாமியர்களிடம் அகப்பட்டு சீரழிந்த இந்தத் திருநாட்டை அடுத்து வந்த கிறிஸ்தவ ஆங்கிலேயர்கள் 200 ஆண்டுகள் சுரண்டினர். இப்படியாக மொத்தமாக ஆயிரம் ஆண்டுகள் அன்னியன் ஆட்சியில் பாரத நாடு அடிமைப்பட்ட வரலாற்றை “ஆயிரம் ஆண்டுகள் ஓய்ந்து கிடந்த” என்ற வரிகளின் மூலம் வெளிப்படுத்தி உள்ளார் இரண்டாம் பாரதி.

**சத்ரபதி சிவாஜி தன் படைகளுக்குக் கூறியது**

மேற்கண்ட கருத்தையே, ஹிந்து சாம்ராஜ்யத்தை நிறுவிய சிவாஜியின் வாய்ச் சொற்களாக சுப்ரமணிய பாரதியார் பின்வருமாறு கூறுகிறார்:

வேதநூல் பழிக்கும் வெளித்திசை மிலேச்சர்<br>பாதமும் பொறுப்பளோ பாரத தேவி?<br>தாய்த்திரு நாட்டைத் தறுகண் மிலேச்சர்<br>பேய்த்தகை கொண்டோர் பெருமையும் வண்மையும்<br>ஞானமும் அறியா நவைபடு துருக்கர்<br>வானகம் அடக்க வந்திடும் அரக்கர் போல்<br>இந்நாட் படைகொணர்ந் தின்னல்செய் கின்றார்<br>ஆலயம் அழித்தலும் அருமறை பழித்தலும்<br>பாலரை விருத்தரைப் பசுக்களை ஒழித்தலும்<br>மாதர்கற் பழித்தலும் மறையவர் வேள்விக்<br>கேதமே சூழ்வதும் இயற்றி நிற்கின்றார்.<br>தாய் பிறன் கைப்படச் சகிப்பவ னாகி<br>நாயென வாழ்வோன் நமரிலிங் குளனோ?!

**இந்தியர்களில் ஜாதீய ஐக்கியம் எங்ஙனம் உண்டாகும்?**

புதுவை சூரியோதயம் பத்திரிகையில் வெளி வந்த பாரதியாரின் கட்டுரையின் ஒரு பகுதியை இங்கு பார்ப்போம்:

“ஆதி முதல் அந்தம் வரையில் இந்தியா மேல் படையெடுத்து வந்த ஒவ்வொரு மிலேச்ச ஜாதியும் இந்தியர்களில் வேற்றுமைகளுண்டு பண்ணி

அவர்களில் தேசத் துரோகிகளாயும், ஸகோதரத் துரோகிகளாயுமிருந்த சிலரைத் தம் வசம் சேர்த்துக் கொண்டு வஞ்சனையாலும் பலவித மோசங்களாலும் இராஜ்யங்களைக் கைவசப்படுத்திக் கொண்டார்களேயொழிய வீரத் தன்மையோடும் தரும வழியிலும் ஒருவராவது ஒரு அடி பூமி கூட ஸம்பாதிக்கவில்லை.

ஆங்கிலேயர்கள் சென்னை இராஜதானியிலும் மற்றுமுள்ள இந்தியாவின் பிராந்தியங்களிலும் என்னென்ன மோசங்களும் மித்திர துரோஹங்களும் செய்து இராஜ்யம் ஸம்பாதித்தார்களென்பது சரித்திரங்களை வாசிக்கத் தெரியும். பூர்வீக பிரதேச மஹம்மதீய எதிரிகளும் இவ்வாறே தான் ஸம்பாதித்தார்கள். இன்றைக்கும் நாளைக்கும் இது தான் ஆங்கிலேயரின் இராஜதந்திரம்.

முகம்மதியர்களிடமும், பரங்கியர்களிடமும் அடிமைப்பட்ட பாரத்தை தனது கட்டுரை, கவிதை மூலம் வெளிப்படுத்தும் பாரதியின் உள்ளக் கிடக்கையும், ஆயிரம் ஆண்டுகள் ஓய்ந்து கிடந்த ஹிந்து மஹாசக்தி எழுந்தது சீறி என்ற இரண்டாம் பாரதியின் வரிகளும் ஒத்திசைப்பதை இங்கு பொருத்திப் பார்த்து உணர முடிகிறது.

**நல்லோரை வாழ்த்திட தீயோரை வீழ்த்திட**

துஷ்ட நிக்ரஹம் சிஷ்ட பரிபாலனம் என்பது வேதத்தின் மகாவாக்கியங்களில் ஒன்று. துஷ்ட நிக்ரஹம் என்பது சமூகத்துக்கு, சூழலுக்கு கேடு விளைவிப்பவர்களை அழிப்பது. சிஷ்ட பரிபாலனம் என்பது தர்ம நெறியோடு வாழ்பவர்களை ஊக்குவித்து நலம் சூழ வைப்பது. இவை இரண்டையும் செய்யவே யுகங்கள்தோறும் அவதாரம் எடுப்பதாக கண்ணன் பகவத் கீதையில் பின்வரும் சுலோகத்தில் கூறுகிறார்:

“பரித்ராணாய ஸாதூநாம் விநாசாய ச துஷ்க்ருதாம்,
தர்மஸம்ஸ்தாப நார்த்தாய ஸம்பவாமி யுகேயுகே.”

**பாதகம் செய்பவரைக் கண்டால்**

இதே கருத்தை பாரதியார்

பாதகம் செய்பவரைக் கண்டால் -
நீ பயம் கொள்ளல் ஆகாது பாப்பா
மோதி மிதித்து விடு பாப்பா -
அவர் முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா

என்று பாப்பாவுக்காகப் பாடுகிறார்.

மேலும்,

நன்மை வந்தெய்துக, தீதெலாம் நலிக, அறம் வளர்த்திடுக, மறமடிவுறுக

என்று தீதுகள் ஒழியவும் அதர்மம் அழியவும் பாரதி வாழ்த்துக் கூறுகிறார்.

**இன்னொரு பாடலில்**

“நல்லோர் பெரியர் என்னும் காலம் வந்ததே -
கெட்ட நயவஞ்சகக் காரருக்கு நாசம் வந்ததே’’

என்று பாரதி குரல் கொடுக்கிறார்.

தீயவர்கள், சமூகத்திற்கு எதிரானவர்கள், கொடுமைக்காரர்கள், தேசவிரோதிகள் முதலியோருக்கு அஞ்சாமல் அவர்களை எதிர்த்துப் போராடி அத்தீய சக்திகளைப் மாய்க்க வேண்டும் என்பதை பாரதி வலியுறுத்திக் கூறுகிறார்.

கண்ணனும், பாரதியாரும் கூறிய இக்கருத்தையே, நல்லோரை வாழ்த்திட தீயோரை வீழ்த்திட என்ற பாடல் வரிகளில் வீரத்துறவி குறிப்பிட்டுள்ளார். (தொடரும்)

இரவு கழிந்தது இரவி எழுந்தான்
கிருதயுகக் கதிர்தூவிப் புரவி யமர்ந்தான்
வையகமே இனி புதுமைகள் காண்பாய்
பாரத சூரியன் மகிமைகள் காண்பாய்

ஆயிரம் ஆண்டுகள் ஓய்ந்து கிடந்த
ஹிந்து மஹாசக்தி எழுந்தது சீறி
நல்லோரை வாழ்த்திட தீயோரை வீழ்த்திட
போர்க்கோலம் பூண்டு எழுந்தது காண்பாய்

வேதமுழக்கம் ஞான விளக்கம்
நரவுருவில் நடமாடிடும் தெய்வம்
கதையல்ல மிகையல்ல கற்பனையல்ல
கண்ணாரக் காண்பாய் நீ சற்றே பொறுப்பாய்.

ஹனுமனின் பக்தி சீதையின் கற்பு
ராமனின் அறவர சாட்சியும் காண்பாய்
வீமனும் பார்த்தனும் தருமனும் கண்ணனும்
மீண்டும் இந்நாட்டினில் உலவுதல் காண்பாய்

சங்கரன் மேதை வள்ளுவன் கவிதை
சிவராஜன் வாளுமே மின்னிக் கிளம்பும்
ரஜபுத்ரர் வீரம் சோழர் சீராட்சி
பூமண்டலம் வெல்ல திக் விஜயம் செய்யும்

விஞ்ஞான விந்தையும் மெய்ஞ்ஞான மேன்மையும்
இன்பங்கள் கோடி இணைந்த நற்காட்சியும்
வீட்டுக்குப் பூட்டுப் போடாத நல் மாட்சியும்
புதுமைகள் பலவும் நீ விரைவினில் காண்பாய்

பற்பல ஆண்டுகள் மோனத் தவத்தால்
கேசவர் மாதவர் புண்ய பலத்தால்
அந்நியன் தீட்டிய அஞ்சனம் நீங்கி
தன்னை உணர்ந்த நல்பாரதம் காண்பாய்

இரவு கழிந்தது இரவி எழுந்தான்
கிருதயுகக் கதிர் தூவிப் புரவியமர்ந்தான்
வையகமே இனி புதுமைகள் காண்பாய்
பாரத சூரியன் மகிமைகள் காண்பாய்

இந்தப் பாடலின் இசை வடிவத்திற்கு இந்த QRCODE SCAN செய்யவும்.

# வெளிச்சம் படாத வேர்கள்

## வீரமங்கை ராணி வேலுநாச்சியார்

யா.சு. கண்ணன்

ராணி வேலு நாச்சியார் இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு தனித்துவமான, வீரமிக்க அத்தியாயத்தைப் படைத்தவர். ஜான்சி ராணி லட்சுமி பாய்க்கு சுமார் 85 ஆண்டுகளுக்கு முன்பே, கிழக்கிந்திய கம்பெனிக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போரிட்ட முதல் இந்தியப் பெண் ஆட்சியாளர் இவரே ஆவார். "வீரமங்கை", "தென்னிந்தியாவின் ஜான்சி ராணி" போன்ற சிறப்புப் பெயர்களால் தமிழர்களால் போற்றப்படும் இவரது வாழ்க்கை வரலாறு, வீரம், தியாகம், தலைமைத்துவம் மற்றும் இந்திய விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பகாலத் தீப்பொறியை உணர்த்தும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

**ஆரம்ப கால வாழ்க்கை மற்றும் இணையற்ற கல்வி**

வேலு நாச்சியார் ஜனவரி 3, 1730 ஆம் ஆண்டு இராமநாதபுரம் சமஸ்தானத்தின் மன்னர் செல்ல முத்து விஜயரகுநாத சேதுபதி மற்றும் சக்கந்தி முத்தாத்தாள் ஆகியோருக்கு ஒரே வாரிசாகப் பிறந்தார். அரச குடும்பத்தில் பிறந்திருந்தாலும், அந்த கால மரபுகளுக்கு மாறாக, ஒரு ஆண் மகனுக்கு உரிய அனைத்துப் பயிற்சிகளும் இவருக்கு வழங்கப்பட்டன.



**பல்மொழிப் புலமை:** இவர் தமிழ், ஆங்கிலம், பிரஞ்சு, உருது போன்ற பல மொழிகளைக் கற்றுத் தேர்ந்தார். குறிப்பாக, உருது மொழி அறிவு பிற்காலத்தில் மைசூர் மன்னர் ஹைதர் அலியுடன் இராஜதந்திர உறவுகளை மேற்கொள்ள பெரிதும் உதவியது.

**போர்க் கலைகளில் தேர்ச்சி:** சிலம்பம், வாள்வீச்சு, ஈட்டி எறிதல், வில்வித்தை போன்ற பாரம்பரிய மற்றும் நவீன தற்காப்புக் கலைகளில் மிகச் சிறந்த பயிற்சி பெற்றார். குதிரையேற்றம் மற்றும் கள நிர்வாகத்திலும் வல்லவராகத் திகழ்ந்தார். இந்தப் பன்முகப் பயிற்சிகள் பிற்காலத்தில் அவர் போர்க்களத்தில் ஒரு தலைசிறந்த தளபதியாகச் செயல்பட அடிப்படையாக அமைந்தன.

**திருமணம் மற்றும் சிவகங்கை ஆட்சிப் பொறுப்பு**

தனது 16வது வயதில், சிவகங்கை சீமையின் மன்னர் சசிவர்ண பெரிய உடையாரது மகனும், பின்னாளில் மன்னரான முத்து வடுகநாதர் பெரிய உடையாரைத் திருமணம் செய்து கொண்டார். இந்தத் திருமணம் இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை சமஸ்தானங்களுக்கிடையே நிலவிய அரசியல் ரீதியான நல்லுறவை மேலும் பலப்படுத்தியது. இவர்களுக்கு வெள்ளச்சி நாச்சியார் என்ற மகள் பிறந்தார். திருமணத்திற்குப் பிறகும், வேலு நாச்சியார் தனது அறிவாற்றலால் கணவருடன் இணைந்து சிவகங்கை நிர்வாகத்தில் முக்கியப் பங்கு வகித்தார். அமைதியான நிர்வாகம் தொடர்ந்தது.

**1772 ஆம் ஆண்டின் துயரம்: போரின் ஆரம்பம்**

1772 ஆம் ஆண்டு, தென்னிந்தியாவில் ஆதிக்கத்தை நிலைநாட்டத் துடித்த கிழக்கிந்திய கம்பெனியின் படைகள் மற்றும் ஆற்காடு நவாப் படைகள் இணைந்து சிவகங்கை மீது திடீர் தாக்குதல் நடத்தின. வரி வசூலிப்பதில் ஆங்கிலேயருக்கு இருந்த முரண்பாடுகள் இத்தாக்குதலுக்கு முக்கியக் காரணம். காளையர் கோவில் போரில், மன்னர் முத்து வடுகநாதர் எதிர்பாராத விதமாக ஆங்கிலேயப் படைகளால் துரோகத்தனமாகக் கொல்லப்பட்டார்.

இந்தத் துயரச் சம்பவம் வேலு நாச்சியாரின் வாழ்க்கைப் பாதையை முற்றிலுமாக மாற்றியது. கணவரின் இழப்பால் துவண்டு போகாத அவர், உடனடியாகச் சுதாரித்துக்கொண்டார். எதிரிகளின் பலம் வாய்ந்த படையை உடனடியாக எதிர்கொள்ள முடியாத யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு, தனது மகள் மற்றும் விசுவாசமான தளபதிகளான மருது சகோதரர்களுடன் (பெரிய மருது மற்றும் சின்ன மருது) திண்டுக்கல் அருகே உள்ள விருப்பாட்சி கோட்டைக்குத் தப்பிச் சென்றார். அங்கே பாளையக்காரர் கோபால் நாயக்கரின் பாதுகாப்பில்

சுமார் எட்டு ஆண்டுகள் தலைமறைவாகவும், பாதுகாப்பாகவும் வாழ்ந்தார்.

**இராஜதந்திர நகர்வுகள் மற்றும் ஹைதர் அலியின் ஆதரவு**

தலைமறைவு வாழ்க்கையின் போது வேலு நாச்சியார் தனது நேரத்தை வீணடிக்கவில்லை. இது பழிவாங்கும் படலத்திற்கான ஆயத்தக் காலம். ஆங்கிலேயருக்கு எதிரான ஒரு பெரிய படையைத் திரட்டும் பணியில் ஈடுபட்டார். மருது சகோதரர்கள் இந்தப் பணியில் அவருக்கு பக்கபலமாக இருந்தனர். வேலு நாச்சியாரின் மிக முக்கிய இராஜதந்திர நகர்வு, மைசூர் சமஸ்தானத்தின் வலிமை வாய்ந்த மன்னரான ஹைதர் அலியின் உதவியை நாடியதுதான். உருது மொழியில் ஹைதர் அலியுடன் நேரடியாகப் பேசிய அவர், ஆங்கிலேயருக்கு எதிராகப் போராடத் தனக்குத் தேவையான படைகள் மற்றும் ஆயுத உதவிகளைக் கோரினார். வேலு நாச்சியாரின் ஆளுமையையும், துணிச்சலையும், இலட்சியத்தையும் கண்டு வியந்த ஹைதர் அலி, அவரது கோரிக்கையை ஏற்று, அவருக்குத் தேவையான 5,000 படைவீரர்களையும், நவீன ஆயுதங்களையும் வழங்க ஒப்புக்கொண்டார். இது ஆங்கிலேயருக்கு எதிரான தென்னிந்தியக் கூட்டணியை வலுப்படுத்தியது.

1780 ஆம் ஆண்டு, வேலு நாச்சியார் தனது பலம் வாய்ந்த படைகளுடன் சிவகங்கையை நோக்கிப் புறப்பட்டார். இந்தப் போரில், ஆங்கிலேயருக்கு எதிராகப் பல வியூகங்களை அமைத்துப் போரிட்டார். ஆண் வேடமிட்டுப் போர்க்களத்தில் குதிரை மீதேறிப் போரிட்டதாகக் கதைகள் உண்டு.

**உடையாள் எனும் தியாகத் தீபம்:**

உடையாள் என்ற ஆடு மேய்க்கும் சிறுமி, ஆங்கிலேயரால் கொல்லப்பட்டதால், அந்த இடத்திலேயே அவளுக்கு நடுகல் வைத்து மரியாதை செலுத்திவிட்டுப் போரைத் தொடர்ந்தார். இது படைவீரர்களின் மன உறுதியை அதிகரித்தது.

**தளபதி குயிலியின் தற்கொலைப் படைத் தாக்குதல்:**

வேலு நாச்சியாரின் மிக முக்கியமான பெண் தளபதியும், தோழியுமான குயிலி, ஒரு தீரமிக்க முடிவை எடுத்தார். விஜயதசமி அன்று, சிவகங்கை கோட்டையில் உள்ள ராஜராஜேஸ்வரி அம்மன் கோவிலுக்குள் ஆயுதங்களை மறைத்து வைத்திருப்பதை அறிந்து, குயிலி தன் உடலுக்குத் தானே தீ வைத்துக் கொண்டு, முதல் மனித வெடிகுண்டாகத் தன்னையே அழித்துக் கொண்டு ஆயுதக் கிடங்கை அழித்தார். இத்தியாகம் போரின் திருப்புமுனையாக அமைந்தது.

இறுதியில், வேலு நாச்சியார் ஆங்கிலேயப் படைகளைத் தோற்கடித்து, சிவகங்கை கோட்டையைக் கைப்பற்றினார். இழந்த தனது ராஜ்ஜியத்தை மீட்டு, 1780 ஆம் ஆண்டில் மீண்டும் அரியணையில் அமர்ந்தார். இதன் மூலம், இந்தியாவில் ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்டு வென்று முடிசூடிய முதல் பெண் ஆட்சியாளர் என்ற வரலாற்றுச் சாதனையைப் படைத்தார்.



**பிந்தைய வாழ்க்கை மற்றும் அழியாப் புகழ்**

வெற்றிக்குப் பிறகு, வேலு நாச்சியார் சுமார் 10 ஆண்டுகள் சிவகங்கையை மிகச் சிறப்பாக ஆட்சி செய்தார். அவரது ஆட்சிக்காலத்தில் மருது சகோதரர்கள் அமைச்சர்களாகவும், தளபதிகளாகவும் செயல்பட்டனர். 1790 ஆம் ஆண்டில் தனது மகள் வெள்ளச்சி நாச்சியாரிடம் ஆட்சியைக் ஒப்படைத்த பிறகு, உடல்நலக் குறைவு காரணமாக, டிசம்பர் 25, 1796 அன்று வீரமங்கை வேலு நாச்சியார் இவ்வுலகை விட்டு மறைந்தார்.

**வேலு நாச்சியாரின் வாழ்க்கை, இந்தியப் பெண்களுக்கு வீரம், தேசப்பற்று மற்றும் உரிமைக்காகப் போராடும் உணர்வை ஊட்டிய ஒரு அழியாச் சின்னமாகும்.** தமிழக அரசு அவரது நினைவைப் போற்றும் வகையில் சிவகங்கையில் நினைவிடமும், சென்னை கிண்டியில் மணிமண்டபமும் அமைத்துள்ளது.

வீரவேலுநாச்சியாரின் வரலாறு, அடிமைப்படுத்த நினைத்த அந்நிய சக்திகளுக்கு எதிராகத் தென்னிந்திய மண் கொடுத்த முதல் பதிலடியை காட்டுவதாகும்.

## மஹான்களின் தரிசனம்

# பகவன் நாம ஸாம்ராஜ்ய சக்ரவர்த்தி: ஸ்ரீமத் போதேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள்

**- நிதீஸ்வரன்**

**"பகவந்நாம சாம்ராஜ்ய லக்ஷ்மி ஸர்வஸ்வ விக்ரஹம் ஸ்ரீமத் போதேந்த்ர யோகீந்த்ர தேசிகேந்த்ரம் உபாஸ்மஹே"**

(பொருள்: பகவன் நாமம் என்கின்ற சாம்ராஜ்யத்தின் செல்வங்கள் அனைத்தையும் தன்னுடைய வடிவமாகவே கொண்டவரும், யோகிகளில் சிறந்தவரும், ஆச்சார்யர்களில் சிறந்தவருமான ஸ்ரீமத் போதேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகளை உபாசிக்கிறேன்).

**"யஸ்ய ஸ்மரண மாத்ரேண நாமபக்தி: ப்ரஜாயதே தம் நமாமி யதிஸ்ரேஷ்டம் போதேந்த்ரம் ஜகதாம் குரும்"**

(பொருள்: எவரை நினைத்த மாத்திரத்திலேயே பகவானுடைய திருநாமத்தில் பக்தியானது ஏற்படுகிறதோ, அப்படிப்பட்ட யதிகளில் சிறந்தவரும், ஜகத்குருவானவருமான ஸ்ரீமத் போதேந்த்ரஸரஸ்வதிஸ்வாமிகளைவணங்குகிறேன்).

**அவதார மஹிமை:**

கலியுகத்தின் இருளை விரட்ட வந்த ஞானச் சூரியனான ஸ்ரீமத் போதேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள், ஸ்ரீமத் ஆதிசங்கர பகவத்பாதர்களால் ஸ்தாபிக்கப்பட்ட பெருமைமிகு காஞ்சி காமகோடி பீடத்தின் ஆசார்ய பரம்பரையில் 59-வது ஆசார்யராக விளங்குகிறார்.

இவர் காஞ்சிபுரத்தில் உள்ள மண்டனமிஸ்ர அக்ரஹாரத்தில், கேசவ பாண்டுரங்கன் என்னும் மகானுக்கும், பதிவ்ரதா சிரோமணியான அன்னைக்கும் ஸங்கர பகவத்பாதாள் அனுக்ரஹத்தில் அவதரித்தார். இவருடைய தெய்வீக குணங்களின் மஹிமையால் இவருக்குப் 'புருஷோத்தமன்' என்று பெயரிட்டனர். தக்க காலத்தில் உபநயனம் முதலான ஸம்ஸ்காரங்கள் அடையப்பெற்று, மிகச் சிறிய வயதிலேயே வேத அத்யயனம் செய்து முடித்தார்.

இவருடைய ஞானத்தையும், வைராக்கியத்தையும் கண்ட 58-வது பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீமத் விச்வாதிகேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள், இவருக்கு ஸந்யாஸ தீக்ஷை அளித்து, காஞ்சி காமகோடி பீடத்தின் 59-வது பீடாதிபதியாகப் பட்டாபிஷேகம் செய்வித்தார்.

பீடத்தை ஏற்றவுடன், "இந்தக் கோரமான கலியுகத்தில் கர்மானுஷ்டானங்களுடன் பகவானுடைய நாம ஜபத்தாலேயே எல்லோருக்கும் சித்த ஶுத்தி ஏற்படும்" என்று மக்களுக்கு உபதேசிக்கத் தொடங்கினார். குருவின் அனுக்ரஹத்தால் லக்ஷ்மீதர கவி எழுதிய "பகவன் நாம கௌமுதி" என்ற க்ரந்தமே நாம மஹிமையை உணர்த்தும் முக்யமான நூல் என்பதை அறிந்தார். அந்த நூலைப் பெறுவதற்காக வட தேசத்திலுள்ள ஜகந்நாத பூரி க்ஷேத்ரத்திற்கு விஜயம் செய்தார்.

**பூரி க்ஷேத்திரத்தில் நிகழ்ந்த அற்புதம்:**

ஜகந்நாத பூரியில் லக்ஷ்மீதர கவியின் இல்லம் சென்று, அந்த க்ரந்தத்தை நன்கு படித்தார். அங்கு இவர் தங்கியிருந்த சமயம், நாம மஹிமையை உலகிற்கு உணர்த்தும் ஒரு வரலாற்றுச் சம்பவம் நிகழ்ந்தது.

ஒரு தம்பதியினர் லக்ஷ்மீதர கவியின் இல்லத்திற்கு வந்து, ஒரு தர்ம சங்கடமான நிலையை முறையிட்டனர். அந்தப் பக்தரின் மனைவி, துரதிர்ஷ்டவசமாக மிலேச்சர்களால் (பிற மதத்தினர்) கவர்ந்து செல்லப்பட்டிருந்தாள். பல போராட்டங்களுக்குப் பிறகு கணவன் அவளை மீட்டுக் கொண்டு வந்தாலும், சாஸ்திரப்படி அவளை மீண்டும் குடும்பத்தில் ஏற்பதா? என்ற சந்தேகம் அவருக்கு இருந்தது.

அப்போது லக்ஷ்மீதர கவியின் மகனான ஜகந்நாத





கவி ஒரு பரிகாரம் கூறினார்: "நாளை காலை, ஜகந்நாதர் கோயிலுக்கு அருகில் உள்ள குளத்திற்கு இவளை அழைத்துச் சென்று, மூன்று முறை 'ராம' நாமத்தை உச்சரித்து ஸ்நானம் செய்வித்தால் அவள் தூய்மையாவாள்" என்றார்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த ஜகந்நாத கவியின் தாயார் (லக்ஷ்மீதர கவியின் மனைவி), இடைமறித்து, "ஏன் மூன்று முறை? ஒரு முறை ராம நாமத்தை உச்சரித்தாலே போதுமே!" என்று கூறித் திருத்தினார்.

மறுநாள் காலை, மக்கள் அனைவரும் பார்த்துக் கொண்டிருக்க, அந்தப் பெண் குளத்தில் மூழ்கி, ஒரு முறை ராம நாமத்தைச் சொல்லி எழுந்தாள். என்ன ஆச்சரியம்! அவள் தீர்த்தத்திலிருந்து எழும்போது ஒரு திவ்ய தேஜஸுடன், சூரியனைப் போலப் பிரகாசமாக வெளியே வந்தாள். ராம நாமத்தின் சக்தி எப்பேர்ப்பட்டது என்பதை அந்தச் சம்பவம் நிரூபித்தது.

பூரியிலிருந்து காஞ்சிபுரத்திற்குத் திரும்பிய ஸ்வாமிகள், நாம மஹிமையை எல்லோருக்கும் உணர்த்துவதற்காகப் பல க்ரந்தங்களை இயற்றினார். அதில் தலையாயது 'நாமாம்ருத ரஸாயனம்'.

சுமார் 54 வருட காலம் காமகோடி பீடத்தின் ஜகத்குருவாக விளங்கி, பாரத தேசம் முழுவதும் ஸஞ்சாரம் செய்து, அத்வைத ஸித்தாந்தங்களையும், நாம சங்கீர்த்தனத்தையும் பரப்பினார். இவருடைய அருளால், பிறவி ஊமையான ஒரு சிறுவன், பெரும் பண்டிதர்களைப் போலப் பேசும் வாக் விலாஸம் பெற்ற அற்புதம் நிகழ்ந்தது.

இவருடைய காலம் காவிரி கரையின் 'ஆன்மீகப் பொற்காலம்' என்றே போற்றப்படுகிறது. நாம ஸித்தாந்தத்தை ஸ்தாபிக்க ஸ்ரீ போதேந்த்ராளுடன் கைகோர்த்தவர் திருவிசைநல்லூர் ஸ்ரீதர வேங்கடேச அய்யாவாள். இவர்கள் இருவரும் ஒரே காலகட்டத்தில் வாழ்ந்து, ஒருவருக்கொருவர் மிகுந்த ஆத்மார்த்தமான நட்பு பாராட்டி, நாம சங்கீர்த்தனத்தைப் பரப்பினர். அதேபோல், நெரூர் ஸ்ரீஸதாசிவ ப்ரஹ்மேந்த்ராளும் இதே காலகட்டத்தில் வாழ்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தன்னுடைய அவதார நோக்கம் நிறைவுறும் காலம் வந்ததை உணர்ந்த ஸ்வாமிகள், ஸ்ரீமத் அத்வைதாத்ம ப்ரகாஸேந்த்ர ஸரஸ்வதி என்னும் உத்தமரான ஸிஷ்யரைத் தேர்ந்தெடுத்து, அவரை காஞ்சி பீடத்தின் 60-வது பீடாதிபதியாகப் பட்டாபிஷேகம் செய்து வைத்தார்.

**கோவிந்தபுரத்தில் ஸித்தி:**

இறுதிக்காலத்தில், திருவிடைமருதூருக்கு அடுத்த கோவிந்தபுரம் என்ற புண்ய க்ஷேத்ரத்தில் தங்கி அனுஷ்டானங்கள் செய்து வந்தார்.

ஒரு நாள் மாலை, காவிரி நதிக்கரையில் விளையாடும் குழந்தைகளுடன் ஸ்வாமிகள் கலந்து கொண்டார். அவர்களிடம் தன்னை மணலில் புதைக்கச் சொல்லிவிட்டு, தான் வேறு இடத்திலிருந்து வெளியே வருவதாகக் கூறி ஒரு லீலை புரிந்தார். குழந்தைகள் அவரை மணலில் புதைப்பதும், அவர் வேறொரு இடத்தில் சிரித்துக் கொண்டே வெளிவருவதுமாக விளையாட்டுத் தொடர்ந்தது.

ஒரு கட்டத்தில், குழந்தைகள் அவரை மணலில் மூடிய பிறகு, அவர் வெகு நேரமாகியும் வெளியே வரவில்லை. பயந்துபோன குழந்தைகள் பெரியவர்களை அழைத்தனர். ஊர் மக்கள் கூடி, ஸ்வாமியைத் தேடி அந்த இடத்தைத் தோண்ட முற்பட்டனர்.அப்போது பூமிக்கு அடியில் இருந்து ஒரு அசரீரி வாக்கு கேட்டது!

**"யாரும் தோண்ட வேண்டாம். நான் இங்கேயே இருக்க விரும்புகிறேன்."**

ஸ்ரீசாலிவாகன சகாப்தம் 1614 , பிரஜோத்பத்தி வருடம், புரட்டாசி மாத பௌர்ணமி தினத்தில் அவர் அந்த இடத்தில் ஸித்தி ஆனார்.

**முடிவுரை:**

இன்றும் கும்பகோணத்திற்கு அருகே உள்ள கோவிந்தபுரத்தில், ஸ்ரீமத் பகவன் நாம போதேந்த்ராள் அதிஷ்டானம் ஒரு காமதேனுவாக விளங்கி வருகிறது. அங்கு ஸ்வாமிகள் ஸூக்ஷ்ம வடிவில் 24 மணி நேரமும் ராம நாமத்தை ஜபித்துக் கொண்டிருப்பது பல பக்தர்களுக்கு ப்ரத்யக்ஷம்.

**"கர்மானுஷ்டானங்களுடன் கூடிய பகவன் நாம ஜபமே கலியுகத்தில் நமக்கு சித்த ஸுத்தியைக் கொடுத்து, மோக்ஷ மார்க்கத்தை அடையச் செய்கிறது" என்பதே அந்த ஜகத்குருவின் உபதேசம்.**

நாமும் அவர் காட்டிய வழியில் நாம ஜபத்தைச் இடையறாது செய்து, குருவருளையும் திருவருளையும் பெறுவோமாக.

"ஸ்ரீராம ஜய ராம ஜய ஜய ராம "

# விழாக்களும் விரதங்களும்

-செல்வம்

**ஜனவரி 03 2026 - ஆருத்ரா தரிசனம் - மார்கழி திருவாதிரை: சிவபெருமானின் அற்புத நடனத் தரிசனம்**

மாதங்களில் சிறந்த மாதமாக கருதப்படும் மார்கழி மாதம் திருவாதிரை நட்சத்திரத்தன்று வருகிறது ஆருத்ரா தரிசனம். இந்த ஆண்டு ஜனவரி 3ம் தேதியன்று ஆருத்ரா தரிசனம் அனுசரிக்கப்படுகிறது.

மார்கழி திருவாதிரை, சைவ சமயத்தில் சிறப்பு வாய்ந்தது, ஏனெனில் இந்த நாளில் சிவபெருமானின் ஆனந்த தாண்டவம் நிகழ்ந்ததாக நம்பப்படுகிறது. பொதுவாக, சிவபெருமான் தங்கள் பக்தர்களுக்கு லிங்க வடிவில் காட்சி அளிப்பார்; ஆனால், நடராஜர் ரூபத்தில் அவரின் அற்புத நடனக் காட்சி கள் காணப்படும் இடங்கள் மிகக் குறைவாக இருக்கின்றன. இந்த நடனத்தின் மூலம் சத்யம், தர்மம் மற்றும் பக்தி அனைத்தும் உண்டாகின்றன என்ற நம்பிக்கையும் உள்ளது. ஆருத்ரா தரிசனம், சிவபெருமானின் சித்தி நிலையைப் பிரதிபலிக்கும் நாள் என்பதால், மிகுந்த ஆன்மிக மகத்துவம் கொண்டது. சிவபெருமானுக்கு நடத்தப்படும் உயர்வான ஆறுவகை அபிஷேகங்களில் ஒன்று ஆருத்ரா தரிசன திருமஞ்சனம்



**ஆருத்ரா தரிசனத்தின் சிறப்பு கதை:**

ஒரு சமயம் மகாவிஷ்ணு பாற்கடலில் ஆதிசேஷன் மீது பள்ளி கொண்டிருந்தபோது, மகாவிஷ்ணுவின் பாதங்களில் அமர்ந்து தனது சேவையை செய்து கொண்டிருந்தார் மகாலட்சுமி தாயார். கண்களை மூடியபடி இருந்த திருமால் திடீரென்று, "ஆஹா! அற்புதம்! அற்புதமான காட்சி!' என்று மனமுருகி சத்தம் போட்டார்.

அவரது இந்த நிலையைக் கண்டு ஆதிசேஷனும், மகாலட்சுமி தாயாரும் ஒன்றும் புரியாமல் திகைத்தனர். கண் விழித்து பார்த்த மகாவிஷ்ணுவிடம், தங்களின் சந்தேகத்தை ஆதிசேஷனும், மகாலட்சுமியும் கேட்டனர்."சிவபெருமான் ஆடிய ஆனந்தத் தாண்டவத்தை என்னுடைய ஞானக் கண்ணால் பார்த்தேன். அதைக் கண்டு மெய்சிலிர்த்ததால்தான் அவ்வாறு கூறினேன்" என்றார் மகாவிஷ்ணு. மேலும், அவர் சிவபெருமானின் ஆனந்தத் தாண்டவத்தைப் பற்றி சொல்லச் சொல்ல ஆதிசேஷனுக்கும் கூட உடல் சிலிர்த்தது. ஆதிசேஷனின் பரவசத்தை கண்ணுற்ற மகாவிஷ்ணு, "ஆதிசேஷா! உனது ஆசை எனக்குப் புரிகிறது. நீயும் சிவபெருமானின் ஆனந்தத் தாண்டவத்தை பார்க்க வேண்டுமானால், பூவுலகில் பிறந்து தவம் இருக்க வேண்டும். அப்போது அந்த அற்புத நடனத்தை நீயும் காணலாம். இப்போதே புறப்பட்டு போய் வா!" என்று கூறி விடை கொடுத்தார் மகாவிஷ்ணு. ஆதிசேஷனும் பூலோகத்தில் பதஞ்சலி முனிவராக அவதரித்தார்.

அவரது உடல் இடுப்பு வரை மனித உடலும், இடுப்புக்குக் கீழே பாம்புத் தோற்றமும் கொண்டதாக இருந்தது. பதஞ்சலி முனிவர் பல காலம் தவம் இருந்து வந்ததன் காரணமாக, மார்கழி திருவாதிரை தினத்தன்று, சிதம்பரத்தில் தம் திருநடனக் காட்சி யை சிவபெருமான், பதஞ்சலி முனிவருக்குக் காட்டி அருளினார்.

திருவாதிரை நாளில் இறைவனுக்குக் களி படைப்பது சிறப்பு. தினமும் சிவனடியார் ஒருவருக்கு அமுதிட்டு உண்ணும் வழக்கம் கொண்ட சேந்தன் இல்லத்தில் இறைவன் களி உண்டு அவன் புகழை உலகறியச் செய்த தினமும் மார்கழித் திருவாதிரையே.

இந்த நிகழ்வு, திருவாலங்காடு ரத்தின சபை, சிதம்பரம் கனகசபை, மதுரை வெள்ளி சபை, திருநெல்வேலி தாமிர சபை, மற்றும் திருக்குற்றாலம் சித்திர சபை ஆகிய சைவ பஞ்ச சபைகளின் தனிச் சிறப்பாக அனுசரிக்கப்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டும், ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள உத்திரகோசமங்கை திருத்தலத்தில் மிகச் சிறப்பாக ஆருத்ரா தரிசனம் கொண்டாடப்படும். இதில், ஆண்டு முழுவதும் சந்தனத்தால் மூடப்பட்டிருக்கும் மரகத நடராஜர் சிலையில் இருந்து சந்தனக் காப்பு களையப்பட்டு, மகா அபிஷேகம் செய்யப்படும். ஆண்டுக்கு ஒருமுறை மட்டுமே கிடைக்கும் இந்த தரிசனம், பக்தர்களின் வாழ்வில் ஒருமுறை அனுபவிக்க வேண்டிய நிகழ்வாகக் கருதப்படுகிறது.

**ஜனவரி 14, 2026 : போகிப் பண்டிகை:**

மார்கழி மாதத்தின் கடைசி நாள் போகி பண்டிகையாக கொண்டாடப்படுகிறது. இந்த நாள் பழையன கழிந்து, புதியன புகவிடும் நாளாகக் கருதப்படுகிறது. பழந்துயரங்களை அழிப்பதான இப்பண்டிக்கையப் போக்கி என்றனர். அந்தச் சொல் நாளடைவில் மருவி போகி என்றாகி விட்டது. இந்திரன் உள்ளிட்ட தேவதைகளை



பூஜித்து அவர்களை திருப்தி செய்யும் நாளாகக் கருதப்படுகிறது. இந்த நாளில் காக்கை முதல் அனைத்து உயிரினங்களுக்கும் உணவிடுவது ஒரு முக்கியமான விசேஷமாக உள்ளது. இவ்வருடம் ஜனவரி 14ம் தேதியன்று போகி பண்டிகை வருகிறது

**ஜனவரி 15, 2026:**

தை முதல் நாளை பொங்கலாக கொண்டாடுகிறோம். இந்நாளையே மகர சங்கராந்தி என்றும் அழைக்கிறோம். "க்ராந்தி" என்ற சொல்லுக்கு மாற்றம் என்று பொருள். அதாவது சூரியனின் மாற்றத்தை இது குறிக்கிறது. சூரியன் மகர ராசிக்குள் நுழைவதை இது குறிக்கிறது, அதாவது சூரியனின் இது வடக்கு நோக்கிய பயணத்தின் தொடக்கத்தைக் குறிக்கிறது (உத்தராயணம்).

மனதில் உள்ள இருளை அகற்றி, வாழ்க்கைக்கு வழிகாட்டும் ஒளியை வழங்குபவராக சூரிய பகவான் போற்றப்படுகிறார். இந்து மரபில் கூறப்படும் ஆறுவித வழிபாடுகளில் சூரிய வழிபாடு முக்கியமானதாக கருதப்படுகிறது. சூரிய வழிபாட்டின் மூலம் ஆரோக்கியம், தெளிவு மற்றும் சிந்தனை வலிமை கிடைக்கும் என்பது நம்பிக்கை. அதனால்தான்,




பொங்கல் திருநாளில் சூரிய பகவானை வழிபட்டு மனமும் வாழ்வும் ஒளி பெற வேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்படுகிறது. இந்த நாளில் இந்தியா முழுவதும் பொங்கல் வெவ்வேறு பெயர்களில் கொண்டாப்பட்டு வருகிறது.

நல்ல நாளில் நல்ல காரியத்தைச் செய்தால், அதன் பலன் சிறப்பாக கிடைக்கும் என்பது நம்பிக்கை. அந்த நம்பிக்கையின் அடிப்படையில்தான், பொங்கல் போன்ற புண்ணிய நாட்களில் சூரியனை வழிபட்டு, நல்ல செயல்களைத் தொடங்கி, வாழ்க்கையில் நலம், வளம் மற்றும் நல்ல பயன் பெற்று மேன்மையுறுவோமாக !

**ஜனவர் 16, 2026:**


பொங்கலுக்கு மறுநாள் மாட்டுப் பொங்கல் அனுசரிக்கப்படுகிறது. இந்த நாள் உழவுக்கு உதவும்



கால்நடைகளான மாடுகளுக்கு நன்றி தெரிவிக்கும் நாள்; மாட்டுப் பொங்கல் நாளில், கிராமப்புறங்களில் மக்கள் தங்கள் பசுக்களையும், காளைகளையும் நன்றாக கழுவி அலங்கரிப்பர். அவற்றின் கொம்புகள் வர்ணம் பூசப்பட்டு, பளபளக்கும் உலோகத் தொப்பிகளால் அலங்கரிக்கப்படுகிறது. பல வண்ண மணிகள், சோளக்கட்டுகள் மற்றும் மலர்மாலைகள் காளைகளின் கழுத்தில் கட்டப்பட்டு, மஞ்சள், குங்குமம் ஆகியவை கால்நடைகளின் நெற்றியில் பக்தியுடன் இடப்படும். பின்னர் கால்நடைகளை கோவிலுக்கு அழைத்துச்சென்று பொங்கல் வைத்து, பூஜை செய்து, வழிபடுகிறார்கள். அடுத்து பசுக்களுக்கும், காளைகளுக்கும் பொங்கல், பழங்களை சாப்பிட கொடுத்து அவைகளுக்கு நன்றி செலுத்துகிறார்கள்.

சூரியக் கடவுளான சூரியனுக்கும், இயற்கையின் சக்திகளுக்கும், விவசாயத்தை ஆதரிக்கும் பண்ணை விலங்குகள் மற்றும் மக்களுக்கும் நன்றி தெரிவிப்பது

**வாசகர்கள் அனைவருக்கும்**
**ஸ்ரீ தமிழ் இதழின் பொங்கல்**
**நல் வாழ்த்துக்கள் !**



# கொன்றை வேந்தன் கதைகள்

## ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்

*நிழல் பிரதாப்*

ஒரு அழகான கிராமத்தில், ஒரு பழைய அரண்மனை வீட்டில் இராவணன் என்பவர், நோயினால் கடும் அவதிப்பட்டு பின் உயிரிழந்தார்.

அரண்மனை வீட்டிலுள்ள இராவணனுக்கு யாரும் உதவ முன் வரவில்லை. இதைக் கண்டு பரிதாபமுற்ற அந்த ஊரில் வசிக்கும் இராமனின் குழந்தைகளான மதுநிஷாவும், ஹர்ஷினியும் இராமனிடம் சென்று ஏன் இராவணனுக்கு யாரும் இல்லை? எல்லாருக்கும் உதவும் நம் ஊர்காரர்களும் ஏன் கண்டுகொள்ளவில்லை என்று கேட்டனர். இராமன் மெல்ல கதை சொல்ல ஆரம்பித்தார்.

இராவணன் குழந்தையாக இருக்கும் போதே எல்லாரிடமும் சண்டை போடுவான். இராவணன் பேட்டிங் செய்து விட்டு பீல்டிங் செய்யாமல் கிளம்பி விடுவான். அடுத்தமுறை அவனை நீ ஆட்டத்துக்கு வேண்டாம் என்று சொன்னால் அவர்களை விளையாட விடமாட்டான். அவனை தட்டிக் கேட்பவர்களை அடிப்பான். அவன் பெற்றோரிடம் சென்று கூறுவார்கள் அவர்களும் இவன் ஒரே பையன் என்பதால் அவனை கண்டிக்க மாட்டார்கள்.

அவனுக்கு 16 வயது இருக்கும் போது அவன் அப்பா இறந்து விட்டார். அதன்பின் பள்ளிப் படிப்பிலும், ஒழுக்கத்திலும் தவறியதால் ஆசிரியர் தட்டிக்கேட்டதற்கு, மரியாதையில்லாமல் பேசி விட்டு பள்ளிப்படிப்பை நிறுத்தினான். நீ பள்ளிக்கு சென்று தான் ஆகவேண்டும் என்று அவனுக்கு செல்லம் கொடுத்த வளர்த்த அம்மாவின் பேச்சையும் கேட்கவில்லை மாறாக அவன் அம்மாவிடமும் சண்டையிட்டான்.



வளர்ந்த பின்னும், தன்னை மாற்றிக் கொள்ளாமல் ஊரில் இருப்பவர்களிடம் தேவையில்லாமல் பல சண்டைகளை போடத் தொடங்கினான். பைக் பார்கிங்கில் ஆரம்பித்து, வண்டியில் யாராவது பாட்டு வைத்து கேட்டால் அந்த பாட்டுச் சத்தத்திற்கு என்று எல்லாவற்றிற்கும் சண்டை! ஊர் திருவிழாவிற்கு வரி கேட்டு வந்தால் பணம் கொடுக்கவும் மாட்டான், ஊர் நிர்வாகத்தினரையும் ஆபாசமான வார்த்தைகளால் திட்டுவான். சாமி ஊர்வலம் அவன் வீடு வழி செல்ல விடாமல் வேலி கட்டி சண்டை போடுவான். பக்கத்து ஊருக்குச் சென்று அங்கு இருப்பவர்களிடமும் சண்டை போட்டு , சொந்த ஊருக்கு அவப் பெயரையும் ஏற்படுத்தினான். கல்யாணம் செய்து வைத்தால் அப்போதாவது இவனுக்கு பொறுப்பு வரும் என்று கல்யாணம் செய்து வைத்தார்கள். மனைவியிடமும், அது சரி இல்லை இது சரியில்ல என்று சண்டை போட்டு வீட்டை விட்டு விரட்டினான். அதன் பின் அவன் தாயும் இறந்து விட அவன் அனாதையானான்.

தொழில் தொடங்கினான், அங்கும் சண்டையிட்டதால் அதை இழந்தான். இதனிடையே கெட்ட பழக்கங்களையும் பழகி, வீட்டைத் தவிர அனைத்து சொத்துக்களையும் இழந்தான். எல்லாவற்றிலும் குறையை மட்டுமே கண்டதால் மன அழுத்தமுற்று, மன நலம் பாதிக்கப்பட்டது.

வாழ வேண்டிய வயதில் நோய் வந்து அவதிப்பட்டான். பரிதாபப்பட்டு உதவச் சென்றவரையும் மனது புண்படும்படி பேசினான். இதனால் யாரும் உதவிக்குச் செல்ல முடியாத நிலை உருவானது. உடல் நலம், மனநலம் சீர்கெட்டு இப்போது இறந்தும் போய்விட்டான்.

மது! ஹர்ஷினி! இப்போது தெரிந்ததா இராவணனுக்கு ஏன் யாரும் உதவ முன்வரவில்லைன்னு என்று கேட்டார் இராமன் !

உற்றத்தையும், சுற்றத்தையும் பகைத்துக்கொண்டால், நாம் தனிமரமாவதுடன், புகழிழந்து, அமைதியிழந்து அழிந்தும் விடுவோம்! மரம் வேருடன் அழிந்தால், அழிந்தபின் துளிர் கூட விட முடியாதல்லவா! என்று சொன்ன இராமன், ஔவைப்பாட்டி சொன்ன ஊருடன் பகைப்பது வேறுடன் கெடும் என்ற கொன்றை வேந்தன் வரியை உணர்ந்து நடக்க வேண்டும் என்பதை குழந்தைகளுக்கு உணர்த்தினார்.

# நல்ல தொண்டில் நல்ல உள்ளம்

சங்கர கைலாசம்

இந்த காலத்தில் இப்படியும் இளைஞர்கள் இருக்கிறார்களா? என்று ஆச்சர்யப்படும் அளவுக்கு இருக்கிறார்கள் விழுதுகள் இளைஞர் மன்றத்தை சேர்ந்த இளைஞர்கள். இவர்கள் தேனி மாவட்டம், பெரியகுளம் தாலுகா, தாமரைக்குளம் கிராமத்தில் வசித்து வருகிறார்கள்.

இதே கிராமத்தில் வெங்கடாசலபதி கரடில்



பழமைவாய்ந்த பெருமாள் கோவில் உள்ளது. அந்த கோவில் செல்லும் பாதை மிகவும் சீரற்று இருந்ததைக் கண்டு பாதையைப் பெரிதாக்கி மலைக்குச் செல்ல படிகள் அமைத்துள்ளார்கள். கரடின் மேல் தண்ணீர் வசதி இல்லாத நிலையில் அடிவாரத்திலிருந்து குழாய் அமைத்து குடி நீர் வசதி செய்துள்ளார்கள். கோவிலுக்கு வலதுபுறத்தில் பூஜை பொருட்கள் மற்றும் கோவிலுக்கு தேவையான பொருட்களை வைக்க இரண்டு அறைகள் கொண்ட கட்டிடம் கட்டியதோடு நில்லாமல், கோவிலுக்கு இடதுபுறத்தில் பசுக்களுக்கு கோசலையும் அமைத்துள்ளார்கள். கோவிலுக்கு பின்புறத்தில் பக்தர்களுக்கு கழிப்பறை கட்டி கோவிலை சுத்தமாக பராமரித்து வருகிறார்கள் இந்த இளைஞர்கள்.

இத்தோடு நில்லாமல் ஒவ்வொரு வருடமும் மார்கழி மாதத்தில் அதிகாலை 5 மணிக்கு எழுந்து கிருஷ்ணனை ஊர்வலமாக எடுத்துக்கொண்டு கிராம தெருக்களில் திருப்பாவை பாடிக் கொண்டே வருவார்கள். ஊர் மக்கள் கிருஷ்ணனை தரிசிப்பதோடு, கிருஷ்ணனை தூக்கி வரும் இளைஞர்களை வரவேற்று அவர்களுக்கு பாத பூஜை செய்து வழிபடுகிறார்கள். என்றாவது ஒருநாள் தாமதமாகி விட்டால் ஊர்மக்கள் கிருஷ்ணன் இன்னும் வரவில்லையே என்று போன் செய்து விடுவார்களாம்!.

**ஆன்மீக சேவையுடன் நின்றுவிடவில்லை இந்த இளைஞர்கள்!**

தாமரைகுளம் என்று பெயர் வர காரணமாக இருந்த தாமரைக்குளம் அசுத்தமாக இருந்ததைக் கண்டு வேதனையுற்று குளத்தை தூர்வாரி சுத்தம் செய்துள்ளார்கள்.

2020 கொரோனா காலகட்டத்தில் நமது உறவினர்கள் நண்பர்கள் என பல உயிர்களை இழந்து இருக்கிறோம். அந்த காலகட்டத்தில் இந்த இளைஞர்கள் மதுரைக்கு வாகனத்தில் சென்று ஊர்மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை வாங்கிச் சென்று அவர்கள் வீட்டிற்கு சென்று கொடுத்து உதவியுள்ளார்கள். 144 உத்தரவுப்படி கிராம மக்கள் யாரும் வெளியே வர வேண்டாம் என்று சொல்லியும் மீறி வெளியே வந்தவர்கள் காலில் விழுந்து வீட்டிலேயே இருங்கள் கொரோனா வந்துவிடும் என்று சொல்லி வீட்டிற்கு அனுப்பிவைத்துள்ளார்கள். இவர்களின் பணியால் ஊர் மக்கள் கொரானோவில் இருந்து பாதுகாக்கப்பட்டார்கள். இப்படி சுயநலமில்லாமல் இறைபணி, சமூகப்பணி ஆற்றிவரும் இந்த இளைஞர்களுக்கு மத்திய, மாநில அரசுகள் பல விருதுகளை கொடுத்து கௌரவித்துள்ளது.

பொதுப்பணி மற்றும் கடவுளுக்கு தொண்டு செய்யும் இளைஞர்களின் பெற்றோர்கள் அவர்களுக்கு பெறும் ஆதரவளித்து வருகிறார்கள். இந்தத் தொண்டில் ஈடுபட்டு வரும் இளைஞர்கள், இறையருளால் கல்வியில் நல்ல மதிப்பெண் பெற்று முன்னணி கல்லூரிகளில் படித்து வருகிறார்கள். படிப்பை முடிந்த இளைஞர்கள் நல்ல வேலையிலும் இருக்கிறார்கள். இவைகள் பெருமாளுக்கு செய்யும் தொண்டின் காரணமாக கிடைக்கிறது என்று இளைஞர்களின் பெற்றோர்கள் மனமகிழந்து கூறுகிறார்கள்.

பள்ளிகல்வி பயின்று வரும் இளைஞர்களுக்கு ஏரோநாட்டிக்கல் இன்ஜினியரிங், வழக்கறிஞர், மெக்கானிக்கல் இன்ஜினியரிங் மற்றும் பல பட்டப்படிப்புகளைப் படித்து நல்ல பணிக்குச் செல்ல வேண்டும் என்பதே கனவாக இருக்கிறது. அவர்களின் கனவு நனவாக பெருமாள் நிச்சயம் அருள்புரிவார். அறிவார்ந்த, தன்னலமற்ற சேவை மனப்பான்மை கொண்டவர்களே தேசத்தை மாற்றும் சக்தி கொண்டவர்கள் என்ற விவேகானந்தரின் கருத்துக்கு ஏற்றவர்கள் இந்த தாமரைக்குளம் விழுதுகள் இளைஞர்மன்ற இளைஞர்கள்.

# சினிமா சாரல்

- சேஷு

## அகண்டா 2 ( தேசபக்தி )

சமீபத்தில் திரையரங்கில் வந்த தெலுங்கு படம், தமிழிலும் வெளியான படம் அகண்டா 2. ஆந்திரா சினிமாவின் மூத்த நடிகர் பாலகிருஷ்ணா இரண்டு வேடங்களில் நடித்த ஆன்மிக பக்தி, தேச பக்தியையும் பறைசாற்றிய படம்.


பாலகிருஷ்ணா படத்திற்கே உரிய சில பிரிஞ்ச் எலிமெண்ட்ஸ் இல்லாமல் இல்லை. பிறக்கும் இரண்டு குழந்தைகளில் ஒன்று வளர்ந்து ஊரில் நல்லது கெட்டதுகளை செய்பவராகவும், மற்றொரு குழந்தை, சிவபக்தியில் மூழ்கி, சிவனின் அம்சமாகவே மாறி விடுகிறார். இருவருமே தேசத்திற்கு ஒன்று என்றால் துடிதுடித்து போய் விடுவார்கள். ஆளும் மோடி அரசிற்காக எதையும் செய்பவராக இருக்கிறார்கள். கிராமத்தில் இருக்கும் பாலகிருஷ்ணாவின் மகள் DRDO வில் ஸ்பெஷல் ப்ராஜெக்டில் வேலை செய்கிறார். நாட்டின் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர் (யார் என சொல்ல வேண்டியதில்லை) சீனாவுடன் சேர்ந்து பாரத்தை அழிக்க திட்டமிடுகிறார். காசியின் கும்பமேளாவில் கூடும் கோடிக்கணக்கான ஹிந்துக்களிடையே வைரஸை பரவிடச் செய்யும் சீனாவின் திட்டத்திற்குத் துணையாக இருக்கிறார். வைரஸினால் பக்தர்கள் பலரும் மரணமடையும் நிலையில் ஹிந்துக்கள் பக்தி, கடவுள் நம்பிக்கையிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக விலக ஆரம்பிக்கின்றனர். பாரதத்தில் மக்களிடமிருந்து கடவுள் நம்பிக்கை விலகினால் தான் அதை வெல்வது எளிது என்ற சீனாவின் சதித் திட்டத்தின் வெளிப்பாடு தான் இந்த வைரஸ் பரவல்.வைரஸ் எதிராக வேக்ஸின் தயாரிப்பு, அதை முடக்க சீனா செய்யும் சதி, அதை செயல்படுத்தும் எதிர்க்கட்சி தலைவர் என நகரும் கதையில் கடவுளின் பிள்ளைகளான இரண்டு பாலகிருஷ்ணாவும் பிரதமருக்கும், இந்த தேசத்திற்கும் எப்படி உதவுகிறார்கள் என்பதே மீதி கதை. படத்தின் தமிழ் வசனங்கள் சிறப்பாக மொழியாக்கம் செய்துள்ளனர். உதயநிதி பெயரை குறிப்பிடாமல் சனாதன ஒழிப்புக்கு பால்கி பேசும் எச்சரிக்கை வசனம் கைத்தட்டல் ரகம். மொத்தத்தில் பக்தியை,தேசத்தை,ஹிந்து உணர்வை ஊட்டும் படம். OTT யில் வந்தால் குடும்பத்துடன் பாருங்கள்.




## Murder in Mahim (கலாச்சார சீரழிவு)

ஜெரி பிண்ட்டோ எழுதிய நாவலின் அடிப்படையில் ராஜ் ஆச்சார்யா இயக்கிய வெப் சீரிஸ் Jio Hotstar ல் வெளியாகியுள்ளது. மாஹிம் ரயில்வே ஸ்டேஷன் அருகில் உள்ள ஒரு டாய்லட்டில் ஒரு கொலை நடக்கிறது. அதை சிவாஜிராவ் ஜிண்டே விசாரிக்க தொடங்க அது அடுத்தடுத்த தொடர் கொலைகள், அதன் முடிச்சுகள்,ஒவ்வொருவரின் மீது சந்தேகம் வந்து கடைசியில் யார் கொலையாளி என்ற சஸ்பென்ஸ் உடைகிறது.

இந்த தொடர் கொலையே ஹோமோசெக்ஸ் பாலியல் விருப்பத்தில் சிக்கியவர்களிடையே நடக்கும் கதை தான். இப்படிப்பட்ட பாலியல் சிக்கலில் இருக்கும் இளைஞர்களை வைத்து மாஹிம் போலீஸ் ஸ்டேசனில் இருக்கும் இரண்டு காவலர்கள் பணம் பார்க்கிறார்கள். கடைசியில் அவர்களும் இறந்து போகிறார்கள். தனது நெடுநாளைய ஊடக நண்பர் மூலம் இந்த வழக்கை கண்டு பிடிக்கிறார் எஸ் ஐ ஜிண்டே. அந்த ஊடக நண்பரின் மகனே இந்த LGBTQ செயற்பாட்டாளர் என தெரிய வரும்போது அந்த குடும்பத்தினர் எப்படி அதிர்ச்சியடைகிறார்கள் என்பதும் அவனுக்கும் இந்தக் கொலைக்கும் தொடர்பு உண்டா என்ற சந்தேகம் என சஸ்பென்ஸ் சுற்றுகிறது.




இதனிடையே மாஹிம் ஸ்டேஷன் பெண் காவலருக்கும், அவரது பள்ளித் தோழிக்கும் இடையே இருக்கும் லெஸ்பியன் உறவு என நீள்கிறது. ஹோமோசெக்ஸ் பாலியல் தொழிலாளியாக ஒரு ஹிந்து, LGBTQ செயற்பாட்டாளராக கிறிஸ்தவர், லெஸ்பியன் உறவில் நாட்டம் கொண்ட முஸ்லீம் பெண் என மூன்று மதத்தினரையும் இதில் கொண்டு வந்து லாவகமாக சர்ச்சையிலிருந்து தப்பிவிட்டது வெப்சீரிஸ் குழு.

இந்த வெப்சீரியஸ் மூலம் LGBTQ குறித்த விவாதம் என்பதைத் தாண்டி இயல்பான பாலியல் தேவையாக லெஸ்பியனையும், ஹோமோசெக்ஸையும் காட்டியிருப்பது உலகெங்கிலும் நடக்கும் இந்த கலாச்சார பிறழ்வை பொதுமைப்படுத்தும் முயற்சியின் அங்கமாக பார்க்க வேண்டியுள்ளது. பெற்றோர்களே! உஷார்.

Printed by Published by Padmapriya L on behalf of Padmapriya L, Published at 77/6, 10th Avenue, Ashok Nagar, Chennai - 600 083 Printed at Chennai Offset Printers, No. 19/1 & 21/2, Kitabath Khan Bahadur Street, Ellis Road, Chennai - 600 002, Editor Padmapriya L.